பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் வைணவப் பங்களிப்பு

ஆய்வேட்டின் நூல்வடிவம்





NSR100 கல்வி அறக்கட்டளை
AD-13, 5th Street, Anna Nagar West
Chennai—600 040, Tamil Nadu, INDIA

பேரா.ந. சுப்புரெட்டியாரின் வைணவப் பங்களிப்பு
(Pera.Na.Subbureddiyarin Vainava Pangalippu)

திராவிடப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

The Thesis Submitted to Dravidian University for the Degree of Doctor of Philosophy In Tamil

By

ஆய்வாளர்

எ.நா.ஜோதி

RegnNo: 2022PHDPTTM04

E.N.JOTHI MA.,B.Ed.,TPT

நெறியாளர்

முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி

உதவிப்பேராசிரியர் & துறைத் தலைவர்

Under the supervision of

Dr.P.S.Ganesh Moorthy M.A., Ph.D., PDF CIIL,Mysore

PG.Dip IRPM., DSE(MR)

Assistant Professor & Head

தமிழ்மொழி மற்றும் பெயர்ப்பியல் துறை

திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரப் பிரதேசம்

Department of Tamil Language and Translation Studies

Dravidian University, Srinivasavanam Kuppam, Andhra Pradesh - 517 426.

ஏப்ரல் April - 2026

நன்றியுரை

நன்றியுரை

பேரா.ந. சுப்புரெட்டியாரின் வைணவப் பங்களிப்பு எனும் தலைப்பில் ஆய்வு செய்ய இசைவளித்த திராவிடப் பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர், கல்விப்புல முதன்மையர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் புலத் தலைவர் பேராசிரியர். கே ஸ்ரீதேவி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்வதற்கு என்னை நெறிப்படுத்தி ஆக்கமும் ஊக்கமும் அளித்து ஆய்விற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கியதோடு ஆய்வேட்டினைச் செம்மையாகத் திருத்தம் செய்த மதிப்பிற்குரிய தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறைத்தலைவர், உதவிப்பேராசிரியரும் என்னுடைய நெறியாளருமாகிய **முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி** M.A., Ph.D., (PDF)PG.Dip IRPM., DSE(MR)., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எம் துறைப் பேராசிரியர்களான பாடத் திட்டக் குழுத் தலைவர் **பேராசிரியர். த.விஷ்ணுகுமாரன், முனைவர் கு.பத்மநாபன், முனைவர் க.மாரியப்பன், முனைவர்.வ.கலையரசி** அவர்களுக்கும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும், பெற்றோர்களான அமரர். திரு.எதே .நாராயணசுவாமி, எ.நா.மல்லிகா, என் துணைவியார் திருமதி த.தி.ராஜேஸ்வரி அவர்களுக்கும், எ.ஜோ யோகித், எ.ஜோ. நிவேதிதா என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எ.நா.ஜோதி

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

1	அ.அ	அண்ணல் அனுமன்
2	ஆ.ஆ.அ	ஆழ்வார்கள் ஆரா ஆமுது
3	ஆ.தி.வி	ஆண்டாள் திருப்பாவை விளக்கம்
4	இ.இ.சி	இந்திய இலக்கியச் சிற்பிகள்
5	இ.தி	இரண்டாம் திருவந்தாதி
6	க.கு	கலியன் குரல்
7	ச.செ	சடகோபன் செந்தமிழ்
8	தி.கோ.ஒ.தி	திருமலைக் கோயில் ஒழுகலாறுகளும் திருவிழாக்களும்
9	தி.த.இ	திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
10	நா.தி	நான்காம் திருவந்தாதி
11	நி.கு.பா.1	நினைவுக் குமிழிகள் பாகம்
12	நி.கு.பா.2	நினைவுக் குமிழிகள் பாகம்
13	நி.கு.பா.3	நினைவுக் குமிழிகள் பாகம்
14	நி.கு.பா.4	நினைவுக் குமிழிகள் பாகம்
15	ப	பக்கம்

16	பா.சு	பாசுரங்கள்
17	மு.தி	முதல் திருவந்தாதி
18	மூ.தி	மூன்றாம் திருவந்தாதி
19	மே.ஒ	மே ஒன்று
20	வ.தி	வடநாட்டுத் திருப்பதிகள்
21	வை.பு	வணவ புராணங்கள்

பொருளடக்கம்

முன்னுரை

இயல் - 1

பேரா.ந. சுப்புரெட்டியாரின்
வாழ்வும் பணியும்

இயல் – 2

பேரா.ந. சுப்புரெட்டியாரும் வைணமும்

இயல் – 3

பேரா.ந. சுப்புரெட்டியாரின் திவ்விய தேசப் பயணங்கள்

இயல் – 4

பேரா.ந.சுப்புரெட்டியாரின் சைவ வைணவப் பங்களிப்புகள் - ஒப்பீடு

முடிவுரை

துணைநூற்பட்டியல்

பின்னிணைப்புகள்

முன்னுரை

பேரா.ந.சுப்புரெட்டியார் தமிழ்மரபில் வேரூன்றி, நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ச்சிப் பெற்றவர். இவர் பல இன்னல்களுக்கு மத்தியில் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டங்கள் பெற்றார். தமிழுலகம் வியக்கும் வண்ணம் பல ஆய்வுக்கட்டுரைகள், திறனாய்வு நூல்கள், மொழிபெயர்ப்பு, கல்வியியல், உளவியல், இயற்பியல் ஆகிய பட்டங்களைப் பெற்றார். இவர் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவர். தாயாரின் உந்துதலால் திண்ணைப்பள்ளி முதல் கல்லூரி வரை நன்முறையில் பயின்றார். இவர் பயின்ற காலங்களில் மிகவும் ஒழுக்கமான மாணவராகத் திகழ்ந்து ஆசிரியர்களின் நன்மதிப்பினைப் பெற்றார். இயல்பாகவே நற்குணங்களைக் கொண்ட இவர் அனைவரிடமும் அன்பாகப் பழகுபவர். இவர் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகத் தனது வாழ்க்கைப்பணியைத் துவங்கி பல்கலைக்கழகப் பேராசிரியர் வரை உயர்ந்தவர். பண்டையத் தமிழ்க்கல்வி, பழந்தமிழ் இலக்கியம், உயிரியல், நவீன இலக்கியம், வரலாறு, இலக்கணம், சுயசரிதை, பயண இலக்கியம் எனப் பல்துறைச் சார்ந்த நூல்களைப் படைத்தார்.

இவர்தம் நூல்களுக்கு சென்னைப் பல்கலைக்கழகப் பரிசு, தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசு போன்ற பரிசுகள் கிடைத்துள்ளது. இவர்தம் அறிவியல் பணிகளைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ‘அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும் தமிழக அரசு திரு.வி.க.

விருதையும் வழங்கிச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் இந்து சமயத்தைச் சார்ந்தவர். அறிவியல், இலக்கியம் தொடர்பான பல நூல்களை எழுதியவர். பக்தி சார்ந்த நூல்களில் சைவம் மற்றும் வைணவம் தொடர்பாக பல நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் வைணவம் சார்ந்த நூல்களே மிகுதி. ஏனெனில் அவர் திருமால் மீது அதீத பக்தி கொண்டவர். ஆகவே வைணவம் தொடர்பாக எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். வைணவ சமயத்தின் சிறப்புகள், ஆழ்வார்களின் பக்திச் சிறப்பு, வைணவ திவ்ய தேசங்கள் தொடர்பானக் கருத்துக்கள் இவரது நூல்களில் இருப்பதை அறியலாம். பல்கலைக்கழகப் பணி ஓய்வுக்குப் பின் இவர் கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார்.

இவர் எழுதிய 135 நூல்களும் 2008 ஆம் ஆண்டு தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இந்திய இலக்கிய சிற்பிகள் வரிசையில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

ஆய்வுத் தலைப்பு

பேரா.ந. சுப்புரெட்டியாரின் வைணவப் பங்களிப்பு என்பது ஆய்வுத் தலைப்பாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

பேரா.ந.சுப்புரெட்டியார் வைணவத்திற்கு ஆற்றிய தொண்டினைக் குறித்து முழுமையாக ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு அணுகுமுறை

வரலாற்று முறை மற்றும் விளக்கமுறை அணுகுமுறைகளைக் கொண்டு இவ்வாய்வானது அமைகிறது.

ஆய்வுக் கருதுகோள்

பேரா.ந.சுப்புரெட்டியார் எழுதிய நூல்களில் வைணவ சமய பங்களிப்பு மிகுந்துள்ளது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் எழுதிய நினைவுக் குமிழிகள், ஐந்து சைவ நூல்கள் மற்றும் ஐந்து வைணவ நூல்கள் ஆகியவை ஆய்வு எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

முதன்மை ஆதாரங்கள்

ஆய்விற்கென பயன்படுத்தப்பட்ட பேரா.ந. சுப்புரெட்டியார் எழுதிய நான்கு நினைவு குமிழிகள், சைவம் தொடர்பாக அவர் எழுதிய சைவ சமய விளக்கு, ஞானசம்பந்தர், தம்பிரான் தோழன், நாவுக்கரசர், மூவர்தேவாரம் ஆகிய நூல்களும் வைணவ தொடர்பாக அவர் எழுதிய நூல்களான ஆழ்வார்கள் ஆராஅமுது, திவ்யதேசப் பயணங்கள், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் போன்றவை முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

துணைமை ஆதாரங்கள்

பேரா.ந. சுப்புரெட்டியார் எழுதிய சமய நூல்கள் அனைத்தும் துணைமை ஆதாரங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

முன் ஆய்வுகள்

’பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் வைணவப் பங்களிப்பு' குறித்தாக அமையும் இவ்வாய்வற்கான முன் ஆய்வுகளாக மேற்கொள்ளப்பட்ட 'சோழ நாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறுகளும்', 'பாண்டி நாட்டுத் திருப்பதிகளின் தல வரலாறும் வழக்காறுகளும், 'தொண்டை நாட்டுத் திருப்பதிகளின் வரலாறும் வழக்காறுகளும்' ஆகிய மூன்று ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்கான ஆய்வேடுகளும் 'காரைக்குடியில் பேராசிரியர் கல்வியியல் பணிகள்', 'பேராசிரியரும் திருவேங்கடத் தமிழ்த்துறையும்' ஆகிய முதுகலை ஆய்வேடுகளும் முன் ஆய்வுகளாக அமைகின்றன.

ஆய்வேட்டின் பகுப்பு

'பேரா.ந. சுப்புரெட்டியாரின் வைணவப் பங்களிப்பு' என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வு முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாக அமைக்கப்பட்டுள்ளது.

இயல் - 1.பேரா.ந. சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்

இயல் - 2 பேரா.ந. சுப்புரெட்டியாரும் வைணமும்

இயல் - 3 பேரா.ந. சுப்புரெட்டியாரின் திவ்விய தேசப் பயணங்கள்

இயல் - 4 பேரா.ந. சுப்புரெட்டியாரின் சைவ வைணவப் பங்களிப்புகள் - ஒப்பீடு

முன்னுரை

முன்னுரை என்னும் பகுதியில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுக் கருதுகோள், ஆய்வு எல்லை, ஆய்வு தரவுகள், ஆய்வேட்டின் பகுப்பு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இயல் ஒன்று

பேரா.ந. சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும் எனும் முதலாம் இயலில் பேராசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு, பிறந்த ஊர், தாய் மாமனால் ஆதரிக்கப்படுதல், திண்ணைப் பள்ளியில் கற்றல் , தந்தையின் ஊரில் வளர்தல், ஆரம்பப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, இளங்கலைப் பட்ட படிப்பு, இளங்கலைப் பட்டம் பெறுதல், வேலைக்காக முயற்சி செய்தல், தலைமை ஆசிரியர் பணி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் பணி, எழுத்துப் பணி, ஓய்வுக்குப்பின் ஆற்றிய பல்கலைக்கழக சேவை, அயல் நாட்டுப் பயணம் போன்றவை விளக்கப்பட்டுள்ளது.

இயல் **2 பேரா.ந. சுப்புரெட்டியாரும் வைணமும்** எனும் இரண்டாம் இயலில் ஆழ்வார்களின் பக்தி, அருளிச்செயல்களில் ஆழங்கால்படுதல், முதலாழ்வார்கள், ஆழ்வார்களின் பக்தி நிலைகள், திருமழிசையாழ்வாரின் வரலாற்றுப் பின்னணி, பல சமயங்களில் புகுதல், ஆண்டாளின் பிறப்பு, திருப்பாணாழ்வாரின் வாழ்க்கை வரலாறு, லோகசாரங்க முனிவரின் கனவு, அமலனாதிபிரான், திருமலைக்காட்சிகள், கணிக்கண்ணனின் தோற்றம், தொண்டரடிப் பொடியாழ்வாரின் பிறப்பு, வளர்ப்பு, கோயில் வாசம்,

தேவதேவியின் வருகை, தேவதேவியின் வலையில் சிக்குதல், தொண்டரடிப் பொடியாழ்வாருக்கு தண்டனை, பிரபந்தங்களை அருளல், ஆழ்வாரின் இறை அனுபவம், குலசேகர ஆழ்வாரின் பிறப்பு, வளர்ப்பு, இராமாயண ஈடுபாடு ஆழ்வாருக்கு இராமன் காட்சியளித்தல், ஸ்ரீ ராம நவமி, திருத்தலப்பயணம், அர்ச்சாவதார ஈடுபாடு, திருவரங்கம், திருமங்கையாழ்வார் சிறப்புகள் போன்றவை குறித்து இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

இயல் 3 பேரா.ந.சுப்புரெட்டியாரின் திவ்விய தேசப் பயணங்கள் எனும் மூன்றாம் இயலில் சோழநாடு திருகண்டியூர் 54, தஞ்சைமாமணிக்கோயில் 57 திருப்பேர்நகர் கோவிலடி 60, திருகண்ணபுரம் 64, திருவிண்ணகர் 70, நறையூர் நம்பி 73, சாரங்கபாணி 76, சாராநாத பெருமாள் 80, திருவயிந்திபுரம் 82, பாண்டிநாட்டு தலங்கள் திருக்கோட்டியூர் 23, எந்தை திருப்புல்லாணி 30, திருக்கூடல் மதுரை 33, திருத்தலங்கள் தொண்டை நாடு காஞ்சிபுரக் கோயில்கள் பலரும் போற்றும் காஞ்சி 15 வைகுண்டப்பெருமாள் தலவரலாறு 34, அல்லிகேணி 58, நீர்மலை நீர்வண்ணன் தலவரலாறு 61, திருஇடஎந்தை எம்பெருமான் தலவரலாறு 64, கடல் மல்லை கிடக்கும் கரும்பு தல வரலாறு 66, திருஅயிந்திரபுரத்து தெய்வ நாயகன் வரலாறு 58, திருகோவிலூர் தீங்கரும்பு தல வரலாறு 70 இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

இயல் 4 பேரா.ந. சுப்புரெட்டியாரின் சைவ வைணவப் பங்களிப்புகள் - ஒப்பீடு

பேராசிரியரின் சைவப்பங்களிப்பு, பேராசிரியரும் சமயக்குரவர்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், தம்பிரான் தோழர், மாணிக்கவாசகர், காசி யாத்திரை, பேராசிரியரின் சைவ நூல்கள், பேராசிரியரின் வைணவ நூல்கள், பேராசிரியரும் ஆழ்வார்களும்,

முடிவுரை

முடிவுரை என்னும் பகுதியில் மேற்காணும் நான்கு இயல்களிலும் கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

துணை நூற்பட்டியல்

பேரா. ந. சுப்புரெட்டியாரின் வைணவப் பங்களிப்பு என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகளை அளித்த நூல்களின் விவரங்கள் துணைநூற்பட்டியல் என்னும் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

முடிவுரை என்னும் பகுதியில் மேற்காணும் நான்கு இயல்களிலும் கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

பின்னிணைப்புகள்

ஆய்வுக்குத் தேவையான பல்கலைக்கழக ஆய்வேடுகளும், ஆய்வு நூல்களும் தொகுத்துப் பின்னிணைப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வுப் பயன்

இவ்வாய்வை பயனுள்ள ஆதாரமாகக் கொள்ள முடியும். குறிப்பாக, வைணவ சமயத்தின் தலபாரம்பரியம், திவ்யதேசங்களின் வரலாறு, மற்றும் பக்தி அனுபவங்கள் பற்றிய தகவல்கள், ஆய்வுத் துறைக்கு புதிய பரிமாணங்களை வழங்குகின்றன. இவ்வாய்வு எதிர்கால ஆராய்ச்சிகளுக்கான வலுவான அடித்தளமாகவும் விளங்குகிறது. ந.சுப்பு ரெட்டியாரின் வைணவப் பங்களிப்புகள், சமய இலக்கிய வளர்ச்சிக்கும், மனிதநேய சிந்தனைக்கும் பெரும் பங்கு வகித்து, புதிய ஆய்வுகளுக்கான வழிகளைத் திறக்கின்றன. ஆகையால், இவ்வாய்வு கல்வி, சமயம், மற்றும் சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளில் நீடித்த பயனை அளிக்கும் ஆய்வாகத் திகழ்கிறது.

இயல் - 1

பேரா.ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்

இயல் - 1

பேரா. ந. சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும்

முன்னுரை

பேரா.ந. சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும் எனும் முதல் இயலில் பேராசிரியர் பிறப்பு, பிறந்த ஊர், உறவினர்களால் ஆதரவு, திண்ணைப் பள்ளி படிப்பு, கோட்டாத்தூரில் வளர்தல், உயர் நிலைப்பள்ளி முதல் இளங்கலைப் பட்ட படிப்பு வரை ஏற்பட்ட நிகவுகள் , இளங்கலைப் பட்டம் பெறுதல், ஆசிரியர் பணி முதல் பேராசிரியர் வரை பணி அனுபவங்கள், படைப்புலகில் தடம் படைத்தல், அயல் நாட்டுப் பயணம் போன்றவை பற்றி இவ்வியலில் விளக்கப்படுகிறது.

பேரா.ந.சுப்புரெட்டியார் பிறப்பு

தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்தில் இலால்குடி தாலுக்காவில் உள்ள பெரகம்பி எனும் சிற்றூரில் 1916 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் நாள் ஞானி நல்லப்ப ரெட்டியார் காமாட்சி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பேராசிரியர் பிறந்தார். அவரது தாயார் காமாட்சி அம்மாளின் மூதாதையர்கள் பண்ணையார் பரம்பரை என்று அழைக்கப் பெற்று வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தந்தையார் ஞானி நல்லப்ப ரெட்டியாரது ஊர் முசிறி வட்டத்திலுள்ள சிற்றூரரான கோட்டத்தூர், ஆகும். அவ்வூரில் ஞானியார் பரம்பரை என்றழைக்கப் பெற்றுவந்த குலத்தைச் சேர்ந்தவர். கோட்டாத்தூர் பேராசிரியரின் அன்னையார் ஊரான

பெரகம்பியின் மேற்குப் பக்கம் சுமார் ஆறு கல் தொலைவிலுள்ளதை அறியலாம்.[1]

பேராசிரியர் தாய்மாமன் வீட்டில் வளர்தல்

பேராசிரியரின் சிறுவயதிலேயே, 1918 இல் தந்தை ஞானி நல்லப்ப ரெட்டியார் காலமாகிவிட்டார். அப்போது பேராசிரியரின் அன்னையார் காமாட்சி அம்மாளுக்கு 23 வயது கூட நிரம்பவில்லை. பேராசிரியருக்கோ மூன்று வயதுகூட ஆகவில்லை. எனவே, தாயாரான காமாட்சி அம்மாள் தமது மகனுடன் சொந்த ஊரான பெரகம்பிக்கே திரும்பி, தமது தாயாரின் வீட்டில் வாழலானார். பேராசிரியரின் தாய்மாமனும் தாயைப் போலவே சிறுவன் மீது கனிவு கொண்டு அவனது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். அது போலவே பாட்டியாரும் அதாவது அன்னையாரின் அம்மாவும் அன்பாக வளர்த்து வந்தனர். எட்டு வயது வரையில் பாட்டி வீட்டில் அன்னையின் அரவணைப்பில் செல்லப்பிள்ளையாக வளர்ந்த அவர் தொடக்கக் கல்வி பெரகம்பி பள்ளியில் படித்தார்.[2]

திண்ணைப்பள்ளியில் படித்தல்

பேராசிரியர் தனது ஐந்தாவது வயதிலிருந்தே முறையாக கல்வி கற்றார். அந்த ஊரில் திண்ணைப் பள்ளி நடத்தி வந்த இலிங்கச்செட்டியார் சம்பிரதாய சடங்குமுறைகளை துவங்கி வைத்தார். அந்நிகழ்ச்சியை வீட்டிலுள்ளோரும் அக்கம் பக்கத்தாரும் மகிழ்ச்சியுடன் பார்த்தனர். ஆசிரியர் இலிங்கச் செட்டியார் மஞ்சள் தடவிய நான்கைந்து பனையோலை அடங்கிய ஒரு சிறு கட்டின் முதல் ஏட்டில் "ஹரி நமோத்து சித்தம்" என்று எழுதித் தந்தார். சக்கரை கலந்து காய்ச்சிய பாலில் ஏதோ மந்திரம் எழுதிப் பருகச் செய்தார். முதல் ஏட்டில் எழுதியதைத் தனித்தனி எழுத்தாக மூன்று

முறையும், சேர்த்து வசனமாக மூன்று முறையும் ஆசிரியர் சொல்லச் சொல்ல அதைச் சிறுவனாகிய பேராசிரியரும் வழிமொழிந்து சொன்னார். இதைத் தொடர்ந்து அவர் அந்த திண்ணைப்பள்ளியில் மாணவரானார். ஓராண்டினுள் எண்ணையும் எழுத்தையும் தரையில் பரப்பப்பட்ட மணலில் எழுதிக்கற்றுக் கொண்டார். உலகநீதி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை என்பன போன்ற நீதிநூற்கள் திண்ணைப்பள்ளியில் பயின்றதை அறியலாம்.[3]

இலிங்கச்செட்டியார் நடத்திய இந்த திண்ணைப்பள்ளியில் தமிழ் நெடுங்கணக்கு, எண் வாய்ப்பாடு, மாதங்களின் பெயர்கள் போன்ற பாடங்களைக் கற்றார். படிப்போடு அக்காலத்திற்கே உரித்தான சிறுவர் விளையாட்டுகளான கிட்டிப்புள், பிள்ளையார் பந்து விளையாட்டு, கால் தூக்கும் கணக்குப் பிள்ளை, பம்பரம் விடுதல், பட்டம் விடுதல் போன்றவற்றிலும் ஆர்வமாயிருந்ததை காணலாம். [4]

தந்தையாரின் ஊரில் வளர்தல்

படிப்பும் விளையாட்டுமாய்ச் சிறுபருவம் கழிந்த போதுதான் அவரது தாய் மாமனது மனைவி ஏதோ நோயால் இறந்துபோனார். மாமாவும் மறுமணம் செய்து கொள்ள நேர்ந்தது. மாமாவுக்கு மறுமணமான சில மாதங்களில் அதாவது **எட்டு** வயதிலேயே பேராசிரியர் அன்னையுடன் தமது பாட்டி வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. தமது தந்தை ஊராகிய கோட்டத்தூரிலுள்ள பூர்வீக மச்சு வீட்டில் பாட்டியும் பேராசிரியரும் குடியேறினர். அந்த வீட்டின் இன்னொரு புறம் அவருடைய குடும்பப் பங்காளிகள் வாழ்ந்து வந்தனர். ஆனால், பங்காளிகளுக்கும் பேராசிரியர் குடும்பத்தவருக்கும் தீரா

மனத்தாங்கல் நிலவியிருந்தது. அளவற்ற பாசம் கொண்டிருந்த பாட்டி இந்த வீட்டிற்கு வந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இறந்து போனார். பாட்டி உயிரோடு இருந்த காலத்தில் 'நான் வெளியூர் போய் படிக்க வேண்டும்' என்று பேராசிரியர் கூறிய போதெல்லாம் பாட்டி கண்கலங்கினார். பாட்டியின் இறப்பின்போது இறப்புச்சடங்கில் தாய்மாமனும் கலந்து கொண்டார். மீண்டும் குடும்ப உறவு சீரானது.

தொடக்கப்பள்ளி

கோட்டத்தூருக்கு வந்தபின், அங்குள்ள கழகத் தொடக்கப் பள்ளியில் பேராசிரியர் சேர்க்கப்பட்டார். ஆனால் ஆங்கிலப் பாடம் சரியாகக் கற்பிக்கப்படாததால், சாமுவேல் பிள்ளை என்பார் தனியாக நடத்திய ஆங்கிலப் பள்ளியிலும் படித்தார். இக்காலத்தில் அடிப்படைக் கணிதத்தை நன்கு கற்றுத் தேர்ந்திருந்தார். இந்த நிலையில் கழகப் பள்ளியில் புதிதாகச் சேர்ந்த வி.கே. அரங்கநாத ஐயர் என்ற ஆசிரியர் பிற ஆசிரியர்களைப் போலல்லாமல் கற்பித்தலுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துப் பாடங்கள் நடத்தி வரலானார். படிப்பு மீது ஆர்வமாயிருந்த சிறுவனான பேராசிரியருக்கு இது பெரிதும் உதவிகரமாக இருந்தது. அதனால் புவியியல், வரலாறு, அறிவியல், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் சிறப்பான அறிவைப் பெறமுடிந்தது. அதனால் ஏழாம் வகுப்பிலேயே சக மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி பேராசிரியரை ஏற்பாடு செய்தார் வி. கே. அரங்கநாத ஐயர். இவரைத் தமது கல்வி வாழ்க்கையின் எழு ஞாயிறு என்று பேராசிரியர் பின்னாட்களில் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டத்தூரில் வேளாண்மை செய்து வாழ்வதற்கேதுவாகப் பேராசிரியரின் பூர்வீகச் சொத்தாக இரண்டு ஏக்கர் நஞ்சை நிலமும், மூன்று ஏக்கர் செழிப்பான கரிசல் நிலமும் இருந்தன. மேலும், அவரது அன்னையார் சிறுக சிறுகச் சேமித்து வைத்திருந்த பணத்தில் ஓர் ஏக்கர் செழிப்பான கரிசல் நிலத்தையும் வாங்கினார். வரகு, ஆமணக்கு, கொத்தமல்லி, ஓமம், நெல் போன்ற விளைபொருட்கள் விவசாயம் மூலம் கிடைத்து வந்தன. ஆனால் விளைபொருள்களுக்குப் போதுமான விலை கிடைக்காததால் பெரியளவில் வருமானம் இல்லை. இந்த இடத்தில் பேராசிரியரது அன்னையின் முயற்சி பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். வருவாயை அதிகரிக்க 1930 முதல் 1953 வரை சொந்தமாகப் பண்ணை நடத்தினார். ஆனால், அதில் பொருளிழப்பு நேரிட்டுப் பண்ணை வேலையை நிறுத்தி, நிலங்களையும் விற்றுவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, அன்னையார் பிற்காலத்தில் பேராசிரியர் வேலை பார்த்த இடத்திற்கு வந்துவிட்டார். அதன்பின்னர் அன்னையார் வாழ்க்கையில் நான்கு அல்லது ஐந்தாண்டுகள்தான் மன அமைதியுடன் வாழ்ந்தார். அது இரண்டு பேரன்மார்களுடன் இனிமையாகப் பொழுது போக்கின காலம். இந்தக் காலத்தைப் பற்றி பேராசிரியர்,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்.[5] (குறள். 69)

என்ற வள்ளுவர் வாக்கின் பேருண்மையை அன்னையார் தம் வாழ்நாளில் அனுபவித்து மகிழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

அன்னையார் தொடங்கிய விவசாயப் பண்ணையில் பின்னாட்களில் பயிர் செய்த அனுபவமும் பேராசிரியருக்கு உண்டு. ஆனால், உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சுவதில்லை என்ற பழமொழிக்கேற்பப் பண்ணைத் தொழில் நஷ்டமடைந்ததாகக் கருத்துக் கூறுவார். கோட்டத்தூர் தொடக்கப்பள்ளியில் படிப்பு நன்றாகவே போய்க்கொண்டிருந்தது. பேராசிரியரின் கல்வி மீதான ஈடுபாட்டைக் கவனித்த ஆசிரியர் வி. கே. அரங்கநாத அய்யர் பேராசிரியருக்கு மேற்படிப்பான எட்டாம் வகுப்புப் படிக்கத் தகுதி இருப்பதாகச் சொல்லி விட்டார். ஆனால், மேற்படிப்புக்குப் போதுமான பணம் பேராசிரியரின் அன்னையாரிடம் இல்லாததால் படிப்பு ஓராண்டு தடைப்பட்டது. அந்த ஓராண்டு காலத்தில் சும்மா இருக்காமல் கோட்டத்தூரிலுள்ள பசனை மடத்தில் இருந்து இராமாயணம், மகாபாரதம், பக்தவிஜயம் ஆகிய பெரிய நூல்களைப் படித்ததை அறியலாம். இந்த நிலையில்தான் மகனை அன்னையார் உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்ப உறுதி பூண்டார். அச்சமயத்தில்தான் மகனுக்கு மாலைநேரத்தில் கண் தெரியாத நோய் வந்தது. மிகவும் வருந்திய அன்னையார் பழனி மலை முருகனுக்கு வேண்டிக் கொண்டார். ஓராண்டு கழித்து அந்தக் குறை நீங்கியது. குறை நீங்கியதும் சிறுவனாயிருந்த பேராசிரியரைப் பழனிமலைக்கு அழைத்துச் சென்று அவருக்கு மொட்டையடித்து வழிபாடு நடத்தி ஊர் திரும்பினார்.

உயர்நிலைப்பள்ளி அப்போது அன்னையாரும் மகனைப்பள்ளிக்கு அனுப்பத் தீர்மானித்தார். அதன் தொடர்ச்சியாக, ஆசிரியர் வி. கே. அரங்கநாத ஐயர் சிறுவனாக இருந்த பேராசிரியரையும் பேராசிரியரின் உறவினரான கணபதியையும்

முசிறியில் உள்ள கழக உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கும் முயற்சியில் இறங்கினார். 1930 ஆகஸ்டு மாதம் முசிறிக்கு அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்றார். பள்ளியின் தலைமையாசிரியர் ஏற்கனவே அட்மிஷன் முடிந்துவிட்டதாகக் கூறி, சிறுவர்கள் இருவருக்கும் இடம் தர மறுத்துவிட்டார். சிறுவர்களின் ஏமாற்ற உணர்வை அறிந்த அரங்கநாத ஐயர் ஏதாவது வழிகாண்போம் என்று ஆறுதல் கூறினார். அந்தக் காலத்தில் முசிறிக்கும் துறையூருக்கும் ஒரேயொரு பஸ் மட்டுமே நான்கு தடவை போய்வரும். நல்லவேளையாக, விரைந்து செயல்பட்ட அரங்கநாத ஐயர் சரியான நேரத்தில் அங்கிருந்து பஸ்சில் ஏறி இருவரையும் மதியம் இரண்டு மணிக்குள் துறையூருக்குக் கொண்டு வந்துவிட்டார். அங்குள்ள பெருநிலக்கிழார் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் சேர்த்தும் விட்டார்.

அப்போதுதான் அந்த இனிய நிகழ்ச்சி நடந்தது. சுப்புரெட்டியார் என்ற தனது பெயரிலுள்ள ரெட்டி என்ற சொல் தன்னை வயது முதிர்ந்தவனாகக் காட்டுவதாக உணர்ந்தார். எனவே சாதிப் பெயரை நீக்கிவிட்டுத் தன்னைப் பள்ளியில் சேர்க்கும்படி வி.கே. அரங்கநாயக அய்யரிடம் முறையிட்டிருக்கிறார். அவரும் சிறுவனின் மனக்குமுறலை உணர்ந்து சுப்பு என்ற பெயரில் பள்ளியில் சேர்த்தார்.

இனிமையான சம்பவம் நிகழ்ந்தது, புதிதாக அவர் வேலையில் சேர்ந்திருந்ததால் அவரை வெளியாட்கள் பலருக்கும் அப்போது தெரிந்திருக்க வில்லை. அவர் மெதுவாக மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த அதேநேரத்தில், எதிரே மிதிவண்டியில் வந்து கொண்டிருந்த இன்னொருவர் நடந்து வந்தகொண்டிருந்த பள்ளிச் சிறுவர்களிடம், உங்கள் தலைமையாசிரியர் யார்' என்று

வினவியிருக்கிறார். அப்போது சிறுவர்கள் சுப்பு என்று விடை கூறியிருக்கிறார்கள். சைக்கிளில் வந்தவர் 'அய்யர் இட்லி கடை சுப்புவா', 'சோழியன் காபி கடையில் உள்ள சுப்புவா.' என்று கிண்டலுடன் கேட்டிருக்கிறார். அது பேராசிரியரின் காதிலும் விழுந்துள்ளது. கேட்காதவர் போல் சென்று விட்டார். அடுத்தநாளே ஆசிரியர் பதிவேட்டில் சுப்புரெட்டியார் என்று மாற்றி எழுதினார். அந்தச் சமயத்தில் கிழவன் என்ற உணர்வை அந்தப் பெயர் தந்ததாகவும் பின்னர் அப்பெயரையே தான் விரும்பியதாகவும் பேரா.ந. பின்னாளில் சுட்டுகிறார்.

துறையூர் பள்ளியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்த பிறகு அவர்கள் இருவரும் தங்குவதற்கு அங்கிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள சுரத்தூர் என்ற ஊரில் உறவினர்கள் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பேராசிரியர் தமது உறவினர் தொலையானத்தம்மாள் வீட்டிலும் கணபதி இன்னொரு உறவினர் வீட்டிலும் தங்கிக் கொண்டனர். அங்கிருந்து தினந்தோறும் இருவரும் சேர்ந்தே பள்ளிக்கு நடந்து வருவது வழக்கம். வரும் போது தொலையானத்தம்மாள் தரும் மதிய உணவையும் எடுத்து வருவார்கள். இந்த அம்மாள் தயிர் மோர் விற்று வாழ்ந்தவர்.

துறையூருக்கு வந்த பின் அவரது பழக்கவழக்கங்களில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. சட்டை, பனியன் அணியும் பழக்கம் ஏற்பட்டது; எழுதுவதற்கு ஊற்றுப்பேனாவைப் பயன்படுத்தினார். அதிகாலை ஐந்து மணிக்குத் துயிலெழும் பழக்கமும் கருவேலங் குச்சியால் பல்துலக்கும் பழக்கமும் காலையில் நீராடும் பழக்கமும் ஏற்பட்டன.

சுரத்தூரிலிருந்து பள்ளிக்கு நடந்து போய்த் திரும்பி வருவது சிரமமாக இருந்தது. இரவு படிப்பதற்குக் கூட முடியாமல் உறங்கிவிடுவார். இந்த நிலை அரையாண்டுத் தேர்வுவரை

தொடர்ந்தது. பிறகு துறையூரிலேயே சின்னமடம் என்ற மடத்தில் பேராசிரியருக்கும் கணபதிக்கும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சாப்பாட்டிற்கு 'நல்லிப்பாளையம் ரெட்டியார் ஓட்டல்'-இல் மாதம் ஆறு ரூபாய் செலுத்தி உணவு பெற்று வந்தனர். மடத்தில் தங்கியிருந்தபோது சிறுவர்கள் இருவரும் அங்குள்ள ஆன்மீகப் பெரியோர்களின் சமாதிகளுக்கு தீப, தூபம் காட்டித் துப்பரவு செய்து அங்குள்ளோரின் அன்பைப் பெற்றனர். இது குறித்துப் பேராசிரியர் பின்னாளில் 'நான் வாழ்வில் உயர்ந்த நிலையடைவதற்குச் சமாதியில் உள்ள பெரியோரின் ஆசிதான் காரணம்' எனக் குறிப்பிடுகிறார். வகுப்பிலுள்ள சகமாணவர்கள் அவரைப் புத்தகப்புழு என்று சொல்லுமளவுக்கு ஆழ்ந்து பயின்றதோடு பள்ளியில் 1930 இல் இரண்டாம் மாணவனாகத் தேர்ச்சியும் பெற்றார்.[6]

கல்லூரியில் இண்டர்மீடியட் படிப்பு: தொடர்ந்து மேற்படிப்புப் படிக்க ஆவல்கொண்டார் பேராசிரியர். அவர்பால் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் திருச்சியில் உள்ள புனித சூசையப்பர் கல்லூரியில் சென்று இண்டர் மீடியட் படிக்க அறிவுரை தந்தனர். அரங்கசாமி என்ற சீனியர் மாணவரைச் சந்தித்து 1937 இல் அக்கல்லூரியில் சேர்ந்து கொண்டார். கல்லூரியில் இண்டர்மீடியட் படிப்பில் சேர்ந்தாலும் கூட, வீட்டில் பண நெருக்கடி காரணமாகக் கல்லூரி விடுதியில் அவரால் சேரமுடியவில்லை. எனவே திருச்சியிலுள்ள சவுக்கு நகரில் சீனியர் கல்லூரி மாணவரான அரங்கசாமி தங்கியிருந்த விடுதியின் பக்கத்து அறையை வாடகைக்கு எடுத்து அங்கிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள கல்லூரிக்குத் தினந்தோறும் நடந்து சென்றார். அறைக்கு மாத

வாடகை 5 ரூபாய். இந்தத் தொகை கூட அவரது பொருளாதாரச் சூழலில் சற்று அதிகமே.

ஆங்கிலப் பாடம், தமிழ்ப்பாடம், இயற்பியல், கணிதம், வேதியியல் ஆகியவை இண்டர்மீடியட்டில் பாடங்களாக இருந்தன. ஆங்கிலமொழி பயிற்றுமொழி. முதலாண்டில் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும் பிறகு அதில் தேறிவிட்டார். தமிழ் பயிற்றுவித்த கல்லூரி ஆசிரியர் நடேசமுதலியார் ஆவார். இவரது ஒழுக்கம் சார்ந்த அறிவுரைகள் பேராசிரியருக்கு வழிகாட்டியாக அமைந்திட ஒரு புறமிருக்க இன்னொரு புறம் நடேசமுதலியாரின் கற்பிக்கும் பாங்கும் அன்பும் பேராசிரியரைத் தமிழில் ஈடுபாடு கொள்ளத் தூண்டின. அதன் விளைவாக மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த்தேர்வினை எழுதியதோடு முதல் வகுப்பில் தேர்ச்சியும் பெற்றார்.

கல்லூரியில் படிக்கும் போது திட்டமிட்ட ஒழுங்குமுறையில் பேராசிரியர் பாடங்களைப் படித்துள்ள பாங்கு இப்போதைய மாணவர்களுக்குக் கூட முன்னுதாரணம் என்றே கூறலாம். கல்லூரியில் ஒவ்வொரு பாடப்பகுதி கற்பிக்கப்படும்போது அப்பகுதியில் தேர்வு முறையில் கேட்கப்படும் வினாக்களுக்கேற்பப் படித்துக் கொள்வார். அடிக்கடி எழுதிப் பார்த்துக் கொள்வார். விடுமுறை நாட்களில் கூட நேரத்தை வீணடிக்க மாட்டார். அதிகாலை நான்கரை மணிக்கு எழுந்து காலை ஒன்பது மணிவரை படிப்பார்.

கல்லூரியில் இரண்டாம் ஆண்டு இண்டர்மீடியட் படித்த போது குடும்பத்தில் பணக் கஷ்டம் ஏற்பட்டது. இந்தச் சூழலில் கல்விக்காகச் சொத்தினை விற்க வேண்டிய நிலைஏற்பட்டது. விற்ற பணத்தில் 500 ரூபாயை அஞ்சலகத்தில் வைப்புத்தொகையாகச்

செலுத்தி வாடகைக்கு, உணவுக்கு, சிற்றுண்டிக்கெனக் கணக்கிட்டு மாதம் 30 ரூபாயை அஞ்சலகத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்தி வந்தார்.

மீண்டும் பணநெருக்கடி ஏற்படவே அதைச் சமாளிக்க, சவுக்கு நகரில் உள்ள காசி இராவுத்தர் ஸ்டோர் கட்டடத்தின் மாடியில் மாத வாடகை 3 ரூபாய் கொண்ட அறையில் தங்கலானார். மின் விளக்குகள் இல்லாத அந்த அறையில் அரிக்கேன் விளக்கு உதவியுடன்தான் படித்து வந்தார். ஒரு ஸ்டூல், ஒரு கட்டில், ஒரு மேசை மட்டுமே அதில் இருந்தன. அதற்கப்பால் சாமான்களை நகர்த்தக் கூட இடமில்லை. இந்த ஸ்டோரில் தங்கியிருந்த போது நூலகத்தில் விடுதலை, சுதேசமித்திரன், இந்து, தினமணி போன்ற பத்திரிகைகளைத் தவறாமல் வாசித்து வந்தார். அறிவியல் மாணவராக இருந்தும் கூடத் தமிழின் மீதிருந்த பற்றுதலால் தமிழ் இலக்கிய நூல்களையும் ஆழ்ந்துப் பயின்றார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை ரா.பி. சேதுப்பிள்ளையின் வீரமாநகர், பன்னிரு கட்டுரைகள், உ.வே. சாமிநாதய்யர் எழுதிய நான் கண்டதும் கேட்டதும், பழையதும் புதிதும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சரித்திரம், மறைமலையடிகளின் முற்காலப் புலவர்களும் இக்காலப் புலவர்களும், பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும், கோகிலாம்பாள் கடிதங்கள், அறிவுக்கொத்துப் போன்ற நூல்கள் ஆகும்.

காசி இராவுத்தர் ஸ்டோரில் தங்கியிருந்தபோது அவர் ஒதுங்கி நடந்தாலும் அவரது அருமை தெரியாமல் அவருக்குத் தொந்தரவு செய்வோர்கள் அந்த விடுதியில் இருந்தனர். போகும் போதும் வரும்

போதும் கதவைத் தட்டி, கதவுகளில் எச்சில் துப்பி விட்டுச் செல்வார்கள். எனவே, வேறு விடுதிக்கு மாறினார் பேராசிரியர்.

திருமண ஏற்பாடு

கடின உழைப்பின் பயனாய் இண்டர்மீடியட் படிப்பில் முதல் வகுப்பில் தேறினார். இண்டர்மீடியட் படிப்பு முடிவடைய இரு மாதங்கள் இருந்த நிலையில்தான் பொட்டணம் ஊரிலுள்ள பேராசிரியரின் பாட்டி வழி உறவினர் இராமசாமி ரெட்டியார் தன் தங்கையான செல்லப்பாப்பாவைப் பேராசிரியருக்கு மணமுடிக்கும் நோக்கில் பேசுவதற்காகப் பேராசிரியர் தங்கியிருந்த விடுதிக்கு வந்தார். அவருடன் இராமச்சந்திர ஆச்சாரி என்பவரும் வந்திருந்தார். அவர்களிடம் தமது படிப்பு நோக்கத்தையும் அதற்காக ஆகும் செலவையும் விவரித்துச் சொன்னபோது, படிப்புச் செலவைத் தான் கவனித்துக் கொள்வதாக இராமசாமி ரெட்டியார் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து திருமணத்திற்கு இசைவு தெரிவித்து அன்னையின் அனுமதியையும் பெற்றார்.

திருமணச்சூழலில் இளங்கலைப் பட்டப்படிப்பு

திருமணச் சூழலில் வேதியியல் இளங்கலைப் பட்டத்திற்குப் பேராசிரியர் விண்ணப்பிக்கவே, திருச்சி சூசையப்பர் கல்லூரியிலேயே படிக்க இடம் கிடைத்தது. திருச்சிக்கு இரட்டைக் காளை வண்டியில் பெட்டியும் படுக்கையுமாக ஒரு மூட்டை அரிசியுடன் வந்தடைந்தார். கல்லூரியில் கொண்டுவிட அன்னையாரும் கூடவே வந்திருந்தார். ஒரு மூட்டை அரிசியைக் கீழைச் சிந்தாமணியில் உள்ள நீராகார மடத்தில் கொடுத்து உணவுக்கு ஏற்பாடு செய்து கொண்டார். மடத்தில் தங்கவும் படிக்கவும் வசதியில்லாததால் திருச்சி நகரில் மேட்டுச்சிந்தாமணியில் மாத வாடகை ரூபாய் மூன்றிற்கு அறை

எடுத்துக் கொண்டார். இந்த அறையிலும் மின்விளக்குக் கிடையாது. இங்கிருந்து தமது சொந்த சைக்கிள் மூலம் உணவு உட்கொள்ளக் கீழைச் சிந்தாமணிக்குச் சென்று அங்கிருந்து கல்லூரிக்குப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மொத்தம் ஐந்து மைல் தூரம். அங்கிருந்து மீண்டும் அதே வழியில் விடுதிக்குத் திரும்புவார். ஆனால் ஒரு மாத காலத்தினுள் அந்த சைக்கிள் பயணம் அவரது உடல் நிலைக்கு ஒத்துவரவில்லை. வயிற்றுப் போக்கால் அவதிப்பட்ட அவர் கல்லூரி அருகிலுள்ள வாணப்பட்டறை என்ற தெருவில் அறை எடுத்து அங்கு தங்கினார். இந்த நிலையில்தான் இராமசாமி ரெட்டியாரும் இராமச்சந்திர ஆச்சாரியும் இந்த அறைக்கு வந்து பேரா.ந. திருமணத்தை உறுதி செய்தனர்.

பேரா.ந. சுப்பு ரெட்டியார் திருமணம்

திருமணத்திற்காகப் பேராசிரியர் பத்து நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டார். அவரது தமையன் முறை கொண்ட சதாசிவ ரெட்டியார் திருமணத்திற்காக ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவியிருந்தார். திருமணம் பொட்டணம் என்ற ஊரில் 1936 ஆம் ஆண்டு நடைபெற்றது. துணைவியாரின் பெயர் செல்லப்பாப்பா. இராமசாமி ரெட்டியாரின் தங்கை. திருமணத்தின் போது பேராசிரியரின் உடல்நிலை நலிவுற்றிருந்தது. இரண்டு மணி நேரம் கூடப் பொறுக்க முடியா அளவில் அடிக்கடி வயிற்றுப்போக்கு வந்து கொண்டேயிருந்தது. சடங்குகளுடன் திருமணம் நல்லபடி முடிந்ததுமே அவரது தமையனார் முறை கொண்ட நல்லப்ப ரெட்டியார் வீட்டுத் திண்ணையில் அமரவேண்டியிருந்தது. திருமணத்தைக் கொஞ்ச நாள் கழித்து வைத்திருக்கலாமே என்று சிலர் கூறுமளவிற்கு அவரது உடல்நிலை மோசமாக இருந்தது.

இளங்கலை படிப்பு

ஒரு புறம் குடும்பவாழ்விலும் இன்னொரு புறம் இளங்கலை வேதியியல் படிப்பிலும் ஈடுபட்டிருந்த பேராசிரியர் நல்ல மதிப்பெண்களுடன் 1939ஆம் ஆண்டு முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் அவருக்குத்தான் முதல் மதிப்பெண்ணும் கிடைத்தது. அந்தக் காலத்தில் ஏதாவது அரசு வேலையில் சேர வேண்டுமென்றால் கல்லூரி முதல்வரின் நற்சான்றிதழுடன் சமூக அந்தஸ்திலுள்ள இரண்டு பேருடைய நற்சான்றிதழ்களையும் பெற்றிருக்கவேண்டும். அதைக் கருத்தில் கொண்டு காட்டுப்புத்தூர் என்ற நகரிலுள்ள நந்திரெட்டியார் என்ற மிட்டாதாரரை அணுகியபோது அவர் நற்சான்றிதழ் அளித்ததோடு பெரும் விருந்தையும் பேராசிரியருக்கு அளித்தார்.[7]

ஒரு நாள் கல்லூரி முதல்வர் சர்.டி. தேசிகாச்சாரியைச் சந்தித்து நன்னடத்தைச் சான்றிதழ் பெற்றார். கல்லூரி முதல்வர், 'நீ வாழ்க்கையில் உயர்ந்தநிலையை அடைவாயாக' என வாழ்த்தி அனுப்பினார். கோட்டத்தூர் சென்ற பேராசிரியர் தமது அன்னையின் ஆசிபெற்று, தமது துணைவியாரின் ஊரான பொட்டணத்திலேயே தங்கலானார்.

வேலைதேடும் படலம் இளங்கலைப் பட்டப்படிப்பிற்குப் பின்பு அங்கிருந்தவாறே இரு ஆண்டுகள் வேலை தேடும் படலத்தைத் தொடர்ந்தார். ஆனாலும் முயற்சி பலனளிக்கவில்லை. பொட்டணம் ஊரிலிருந்த போது கோவிலிலுள்ள சாமியை ஊர்வலமாகக் கொண்டு செல்வதில் வெவ்வேறு சாதி மக்களிடையே மோதல் போக்கு நிலவியிருந்தது. அப்போது மக்களிடையே சமாதானம் செய்யும் பணியிலும் கலந்துள்ளார் பேராசிரியர். அதற்காகப் காவல்துறைக்கு ஒத்துழைப்பும் தந்துள்ளார்.

வேலைகிடைக்காத சூழலில்தான் துணைவியார் நோய்வாய்ப்பட்டார். துணைவியாரின் தந்தை மற்றும் அண்ணனாகிய இராமலிங்க ரெட்டியார் மருத்துவச் சிகிச்சைக்கு உதவினாலும் கூட ஈடுபாட்டுடன் செய்யவில்லை என்பது பேராசிரியரின் மனக்குமுறல்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்தல்

வேலைகிடைக்காதிருந்த இதே சூழலில்தான் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலாம் என்ற எண்ணம் அவருக்குள் எழுந்தது. ஆனால் அதற்கான பணத்தை எப்படி ஈட்டுவது என்று வழிவகைகள் தெரியாது குழம்பினார். இறுதியாக ஆலத்துடையாம் பட்டியில் இருந்த நன்செய் நிலத்தை விற்பது எனப் பேராசிரியரின் அன்னையார் முடிவெடுத்தார். கட்டாய விற்பனை என்றறிந்த ஊர்க்காரர்கள் (நண்பர்களும் உறவினர்களும் இதில் அடங்குவர்) ரூ.1500 மதிப்புள்ள நிலத்தை வெறும் ரூ.700/-க்கு வாங்கும் சூழ்நிலையை உருவாக்கினார். பேராசிரியர் விற்ற பணத்தோடு ஊர் திரும்பித் தம் அன்னையாரிடம் புலம்பியபோது, அதற்கு அன்னையார் மறுமொழியாய் "ரூ.700 படிப்பிற்குப் போதுமென்பதால், கவலையை விடுத்துச் சென்னை சென்று படித்து வருவாயாக" என்று ஆசி வழங்கினார். [8]

அந்நாட்களில் சென்னையில் சைதாப்பேட்டையிலுள்ள அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைப்பது கடினமானது. கேரளம், ஆந்திரம், கர்நாடகம் என்ற பகுதியிலுள்ளவர்களுக்கும் சென்னைதான் புகலிடம். பேராசிரியர் BSC யில் முதல் வகுப்பில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்ததால் தகுதி அடிப்படையில் இடம் கிடைத்தது. அத்துடன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலுள்ள விடுதியில் தங்கிக் கொண்டார்.

மாதந்தோறும் ரூபாய் 25 அல்லது 26 ரூபாய் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் அக்காலத்தில் இது அதிகக் கட்டணம். LT அதாவது Licentiate of Teaching எனும் ஆசிரியப் பயிற்சிப் படிப்பு படித்து வந்த காலத்தில் கன்னட, கேரளா, ஆந்திரப் பகுதிகளிலிருந்து வந்த மாணவர்களிடம் நல்லுறவைப் பேணினார். ஆசிரியர் பயிற்சிப் படிப்பின் அடிப்படையைப் புரிந்து கொண்டு கல்வி கற்றாரே தவிர, ஏனோ பட்டம் மட்டும் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அன்று. அதனால்தான் அவரால் கல்வித் துறை சார்ந்த நூற்களை இயற்ற முடிந்தது என்பதைச் சிறப்பாகச் சுட்டிக்காட்ட வேண்டும். குருசாமி ரெட்டியார் என்ற மிகச் சிறந்த ஆசிரியரையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். காரணம் கல்வி உளவியல் பாடத்தில் நிபுணத்துவம் வாய்ந்த இவரிடம் இருந்து நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டதால் பிற்காலத்தில் (1985) கல்வி உளவியல் கோட்பாடுகள் என்ற அற்புதமான நூலைப் பேராசிரியரால் எழுத முடிந்தது. LT அதாவது Licentiate of Teaching எனும் ஆசிரியப் பயிற்சிப் படிப்பில் 1941இல் வெற்றிபெற்றார் பேராசிரியர்.[9]

தலைமையாசிரியர் பணி

துறையூரில் பெருநிலக்கிழார் நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் பணி கிடைத்தது. இந்த நடுநிலைப் பள்ளி துறையூரிலுள்ள ஜமீன்தார்களான, விஜய வேங்கடாசல துரை மற்றும் முத்து வேங்கடாசல துரை ஆகியோர்களால் புதிதாகத் தொடங்கப் பெற்றதாகும். 1941 இல் கல்வித்துறையில் ஆசிரியராய் அடியெடுத்து வைத்தார். இந்தப் புதிய நடுநிலைப்பள்ளி தொடங்கப் பெற்றுச் சில நாட்களில் 60 க்கும் அதிகமான மாணவர்கள் எட்டாம்

வகுப்பில் சேர்ந்தனர். இந்தப் பள்ளியின் ஒரு பகுதியில் ஆசிரியர்கள் தங்குவதற்கான அறைகள் சில இருந்தன. அவற்றுள் ஒன்றில் தமது துணைவியாருடன் தங்கலானார் பேராசிரியர். இது நாள் வரையிலும் விடுதிகளில் தங்கியும் தமது துணைவியார் வீட்டிலும் வாழ்ந்து வந்த பேராசிரியர் முதல் முறையாக யாரையும் சாராமல் குடும்பமாக வாழத் தொடங்கினார்.[10]

பள்ளியின் வரவு செலவுக் கணக்கு மற்றும் மாணவர்களிடமிருந்து பெறும் கல்விக் கட்டணம், கட்டணச் சலுகை, அபராதம் விதித்தல் போன்ற பல்வேறு கணக்கு நுணுக்கங்களைக் காட்டுப்புத்தூரில் உள்ள பள்ளி ஆசிரியரிடம் கற்றுக் கொண்டுதாம் பணியாற்றி வந்த பள்ளியில் திறம்படக் கணக்கு வழக்குகளைப் பார்த்து வந்தார். முதல் மூன்று ஆண்டுகள் எழுத்தர் பதவிக்கு யாரையும் பள்ளி நிர்வாகம் நியமிக்காததால் பள்ளி ஆசிரியர்களைக் கொண்டே தட்டச்சுப் பணிகளை நிறைவேற்றி வந்தார் பேராசிரியர். அது போலவே பள்ளியில் வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் ஏனைய வகையிலான பள்ளி வருமானத்தை அந்தந்த நாட்களிலேயே லட்சுமி விலாஸ் வங்கியில் செலுத்தும்படி செய்துவிடுவார். அந்தக் காலகட்டத்தில் பள்ளியில் மாணவர்கள் கட்டணம் செலுத்தித்தான் படிக்க வேண்டும். ஏழை மாணவர்கள் கட்டணம் செலுத்தத் தாமதமாகும் சூழல்களில் அபராதக் கட்டணம் விதிக்காமல் சற்றுக் காலம் தாழ்த்திக் கட்டணம் செலுத்த அனுமதித்திருந்தார்.[11]

பள்ளி இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்த போது தகுதி வாய்ந்த ஆசிரியர்களை அமர்த்திக் கொண்டார். இரண்டாம் ஆண்டில் 250 மாணவர்கள் இருந்ததால் புதிதாக வகுப்பறைகள், மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தர வேண்டிய பொறுப்பு வந்து சேர்ந்தது. இது

அவரது பணியன்று என்றாலும் கூட அதை விரும்பிச் செய்தார். அதனால் பள்ளி நேரத்திற்கு அப்பாலும் பல மணிநேரம் பள்ளி வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். இளைய ஜமீன்தாரைச் சந்தித்துப் பள்ளியின் பெயரில் ஐந்தாயிரம் ரூபாய் நிலையான நிதியாகப் போடச் செய்தார். ஆனால் பள்ளியின் நிர்வாகிகளான ஜமீன்தார்கள் அவர் செய்த பணிகளைப் பெரிதாக மதிக்கவில்லை என்பது பேராசிரியரின் மனக்குறை. அக்காலத்தில் உள்ள தனியார் பள்ளிகள் ஆசிரியர்களின் இரத்தத்தை உறிஞ்சின என்ற கடுமையான விமர்சனத்தை முன் வைக்கவும் செய்கிறார்.

அந்தக் காலகட்டத்தில் தலைமையாசிரியர்கள் Account Test for Subordinates என்ற தேர்வில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தது. அந்தத் தேர்விலும் பேராசிரியர் வெற்றி பெற்றார். தாம் பெற்ற இளங்கலைப் (வேதியியல்) பட்டத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு தமிழ் முதுகலை (MA) பயில முயன்றார். ஆனால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் அப்போதைய நெறிமுறைகள் உதவாமையால், பேராசிரியர் தமது சொந்த வழியைக் கையாண்டார். முதலில் தனியாக வித்துவான் (தமிழ் - 1944), பரீட்சை எழுதித் தேர்ச்சியடைந்தார். பின்னர் இளங்கலை தமிழிலும் (BA -1 947), வெற்றிபெற்றார். பின்னர் முதுகலைத் தமிழ் (MA - 1951) பட்டம் பெற்றார். நடுநிலைப்பள்ளி தொடங்கிய அடுத்த ஆண்டு இந்தப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புத் தொடங்குவதற்கு அதாவது உயர்நிலைப் பள்ளியாக்குவதற்குப் பள்ளி நிர்வாகிகள் அணுகியபோது வட்டாரக் கல்வித்துறை மறுத்துவிட்டது. ஆனால் 1943 - 44 ஆண்டில் பேராசிரியர் தாமாகவே முன்வந்து பள்ளியின் தாளாளரிடம் உயர்நிலைப்பள்ளியாக்கும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

தாளாளரோ இது உங்களால் முடியுமா என்று கேட்டார். முடியும் என்று கூறித் தாளாளரின் அனுமதி பெற்று நான்காம் படிவம் தொடங்குவதற்கு அனுமதி வாங்கி வந்தார்.

நான்காம் படிவம் தொடங்கப்பட்டதும் இரண்டு மாதங்களுக்குள் பள்ளியின் உட்கட்டமைப்பை உருவாக்கினார் பேராசிரியர். அக்காலத்தில் முசிறியைத் தவிர, துறையூரில் மட்டுமே இந்த உயர்நிலைப் பள்ளியிருந்ததால் நான்கு மைல் தூரத்திலிருந்தெல்லாம் மாணவர்கள் நடந்தே வந்து படித்தனர். சாலை வசதியின்மை, மழைக்காலத்தில் சாலைகளைப் பயன்படுத்த முடியாத நிலை இருந்த சூழலில் மாணவர் இல்லம் உருவாக வழிவகை செய்தார். இதன் மூலம் மாணவர்கள் இரவு படிப்பதற்கும் வசதி கிடைத்தது. துறையூரிலேயே தங்கி மாணவர்களின் நலனிலே முழு அக்கறை செலுத்திய அவரது பணியைக் கவனிக்கும் போது 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பரது வாக்குகள் நினைவுக்கு வருகிறது. 1940 களில் அறிவியல் மற்றும் கணித ஆசிரியர்கள் குறைவாகவே இருந்தனர். பேராசிரியர் இரண்டு பாடங்களையும் படித்தவர் என்பதால் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் கூட மாணவர்களுக்கு இப்பாடங்களைக் கற்பித்தார்.[12]

அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு முழுக்கட்டணச் சலுகை மற்றும் அரைக் கட்டணச் சலுகைகள் பெற ஏற்பாடு செய்தார். இதற்காக எல்லாச் சாதியிலும் உள்ள பணக்காரர்களின் உதவியை நாடவே அவர்களும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை தந்தனர். இது தவிர, சாதிப்பாகுபாடின்றி ஏழை மாணவர்களுக்குக் குறைந்த கட்டணச் சலுகைகள் கிடைக்கும்படி செய்தார். துறையூர்ப் பகுதியில் ரெட்டியார்கள். தமிழ்ச் செட்டியார்கள், ஆரிய வைசியர்கள், பிராமணர்கள், வேளாளர்களில்

சில பிரிவினர் பரம ஏழைகளாக இருந்தாலும் கட்டணச் சலுகை பெற வாய்ப்பே இல்லாதிருந்தனர். இவர்களில் திறமையான மாணாக்கர்கள் கூட எந்தச் சலுகையும் பெற வாய்ப்பில்லாதது பேராசிரியருக்கு மிகவும் வருத்தத்தை விளைவித்துக் கொண்டிருந்தது, சென்னைக் கல்வித்துறை மானியம் பற்றியவிதிகளில் 32-வது பிரிவின்படி (32 Grant-in-code) பள்ளிக் கட்ட வருவாயில் 10 சதவிகிதம் கட்டணச் சலுகை வழங்கலாம். இதைப் பயன்படுத்திச் சலுகை வழங்கினால் பள்ளிக்கும் நல்ல பெயர் கிடைக்கும் ஏழை மாணவர்களும் பயனடைவார்கள் என்று தாளாளர் சின்னதுரையிடம் தன் திட்டத்தை முன்வைத்தார். அவரும் மனமிரங்கி ஐந்து சதவிகிதம் சலுகை அளித்தார். இது தவிர முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ஆண்டுவிழாவின் போது பரிசுத்தொகை கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளார். இது போன்ற செயல்கள் பள்ளி குறித்த நல்மதிப்புப் பரவிடக் காரணமானது.

பள்ளியில் மாணவர் இலக்கியக் கழகம் ஒன்றை நிறுவிய பேராசிரியர், பல சிறப்புக் கூட்டங்களை அக்காலத்தில் நடத்தியுள்ளார். அதில் பேரறிஞர்கள் பலர் உரையாற்றி மாணவர்களுக்கு அறிவு வெளிச்சம் தந்துள்ளனர். அவ்வகையில் லால்குடி நடேச முதலியார், வீ. உலக ஊழியர், பு.ரா. புருடோத்தம நாயுடு. அ. சாம்பசிவ ரெட்டியார், சி. இலக்குவனார், இராமசாமி கவுண்டர் போன்ற தமிழ் மேதைகள் உரையாற்றியுள்ளனர். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட இந்தப் பள்ளியில் 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளார். அப்போது துறையூரில் உள்ள பொதுமக்கள் பலரும் இந்த உரையைக் கேட்டு மகிழ்ந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகப் பாவேந்தர் பாரதிதாசனையும்

இலக்கியக்கழகம் வழி மாணவர்களுக்கு உரைநிகழ்த்தச் செய்துள்ளார். அப்போது பாவேந்தர் கவிதை இயற்றுவதில் தமது பல அனுபவங்களைச் சுவையுடன் எடுத்துக்காட்டிக் கேட்போரை மகிழ்வித்தார்.

பள்ளியில் பல விழாக்களை நடத்தி மாணவர்கள் மேம்பாட்டிற்கு வழிவகை செய்தார். குறிப்பாக, அக்காலத்திலேயே நிறைய உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதோடு பள்ளி ஆண்டு விழாக்களும் நடத்தியுள்ளார். ஆண்டுவிழாக்களில் பன்மொழிப்புலவர் ரெட்டியார், சுவாமி சித்பவானந்தர், மு.வரதராசனார் போன்ற ஆளுமைகளைப் பங்கேற்கச் செய்தார். இதில் பொதுமக்களைப் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள வழிவகை செய்தார். இவை முன்மாதிரியான செயல்கள் என்பது குறிக்கத்தக்கது.[13]

தொகுப்புரை

பேரா. ந. சுப்புரெட்டியாரின் வாழ்வும் பணியும் பற்றிய இந்த முதலாம் இயலில் அவரின் வாழ்க்கைக் குறிப்பு, பிறப்பு முதல் கல்வி, பணியியல் வளர்ச்சி, எழுத்துப் பணி, ஓய்வுக்குப் பிந்தைய சேவை வரை விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது அவருடைய தனிப்பட்ட வளர்ச்சியையும், சமுதாய முன்னேற்றத்திற்கான அவரின் அர்ப்பணிப்பையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. பிறந்த ஊரில் தொடங்கிய அவரது வாழ்க்கைப் பயணம், தாய் மாமனின் ஆதரவு போன்ற குடும்ப ஆதரவுகளால் உறுதிப்படுத்தப்பட்டது. திண்ணைப் பள்ளியில் ஆரம்பித்த கல்வி, தொடர்ந்து ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி படிப்புகளின் வழியாக வலுவடைந்தது. இளங்கலைப் பட்டப் படிப்பு மற்றும் பட்டம் பெற்ற பின்பு வேலைக்காக மேற்கொண்ட முயற்சிகள்,

அவரின் உறுதியையும் விடாமுயற்சியையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு அடித்தளத்தில் தொடங்கிய கல்வி மற்றும் முயற்சிகள் பின்னாளில் அவரை ஒரு சிறந்த கல்வியாளராக உருவாக்கியுள்ளன. தலைமை ஆசிரியராக அவர் ஆற்றிய பணி, கல்வி நிர்வாகத்தில் அவரது திறமையை வெளிப்படுத்தியது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் செய்த பணிகள் மூலம் எதிர்கால ஆசிரியர்களை உருவாக்கும் பொறுப்பையும் திறம்பட ஏற்றார். கல்வி மட்டுமல்லாது, எழுத்துப் பணியிலும் அவர் தன்னுடைய சிந்தனைகள், அனுபவங்கள் மற்றும் அறிவை பகிர்ந்து கொண்டு தமிழ்ச் சமூகத்திற்கு பெரும் பங்களிப்பு செய்தார். அவரது எழுத்துக்கள் கல்வி, பண்பாடு, மனிதநேயம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன.

ஓய்வுக்குப் பிந்தும் அவர் தன்னுடைய சேவையை நிறுத்தாமல் பல்கலைக்கழகத் துறையில் தொடர்ந்து பணியாற்றியது இவ்வியலில் பதிவு செய்யபட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1 த. விஷ்ணுகுமாரன் இந்திய இலக்கிய சிற்பிகள் - பக்.8

2 மேலது பக்.8

3 மேலது பக்.25

4 மேலது பக்.26

5 திருவள்ளுவர் உரை ந. சுப்புரெட்டியார் - பக்.15

6 த. விஷ்ணுகுமாரன் இந்திய இலக்கிய சிற்பிகள் - பக்.18

7 மேலது பக்.19

8 மேலது பக்.20

9 மேலது பக்.20

10 மேலது பக்.21

11 மேலது பக்.22

12 மேலது பக்.23

13 மேலது பக்.24

இயல் – 2

பேராசிரியர் சுப்புரெட்டியாரும் வைணமும்

இயல் – 2

பேராசிரியர் சுப்புரெட்டியாரும் வைணமும்

முன்னுரை

எனும் இரண்டாம் இயலில் வைணவம் விளக்கம், ஆழ்வார்களின் இறை பக்தி, திருமால் மீது ஆழங்கால் படுதல், முதலாழ்வார்கள், திருமழிசையாழ்வார் பல சமயங்களில் புகுதல், ஆண்டாளின் வாழ்க்கை வரலாறு, திருப்பாணாழ்வாரின் பக்தி, லோகசாரங்க முனிவரின் கனவு, அமலனாதிபிரான், திருமலைக்காட்சிகள், கணிக்கண்ணன் பிறப்பு, தொண்டரடிப் பொடியாழ்வார் பக்தி,பூந்தோட்டப் பராமரிப்பு, இறைப்பணி ஆற்றுதல், தேவதேவியின் வருகை, தேவதேவியின் சூழ்ச்சி, தொண்டரடிப் பொடியாழ்வாருக்கு தண்டனை, நாலாயிர திவ்யப்பிரபந்தங்களை அருளல், ஆழ்வாரின் இறை அனுபவங்கள், குலசேகர ஆழ்வாரின் திருமால் பக்தி, வளர்ப்பு, இராமாயணம் மீது கொண்ட பற்று, இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

பக்தி

பக்தி அதன் பொருளை அறிவது மிகவும் அரிது. மனித உள்ளத்தில் தோன்றும் ஒருவித நெகிழ்வுத் தன்மையே பக்தியாகும். மனிதன் மட்டுமே பக்தி என்ற உணர்வுடன் தொடர்புடையவர்கள்.

இதுவே மனிதனைப் பிற விலங்கிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. பக்தியை மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறுவது சிக்கலானது. பக்தி என்ற கருத்து தாய், தந்தை, குரு, தெய்வம், கணவன், நாடு, மொழி போன்ற நிலைகளில் உணர்வதால் இது பற்றி எடுத்துக் கூறுவது சற்று சிந்திக்கக் கூடியதாகும்.

"பக்தி என்ற சொல்லுக்கு இறைவன் மேல் உண்டாகும் பற்றும் நம்பிக்கையும், தன் நாட்டின் மீது அல்லது ஒருவர் மீது கொள்ளும் உயர்வான மதிப்பு"[1] என்கிறது நர்மதாவின் தமிழ் அகராதி. எனவே பக்தி என்பது ஒருவரின் மீது தோன்றும் உயர்வான மதிப்பு. அம்மதிப்பு காதலாக மாறி வேட்கையாய் விரிந்து பிரிந்து இருப்பின் வருந்திப் பொய் பொருளாகிய புறப்பொருட்களை எல்லாம் நிலையாமை கருதி நீங்கி மெய்ப்பொருளாகிய இறை நிலையை நினைத்து ஏங்குவது பக்தி என்றும் கூறலாம்.

ஒருவனை இறை உணர்வும் அவனை ஏத்தும் மரபும் காலத்தால் மிகமிக முற்பட்டனவாகும். பக்தி அதன் அடிப்படையில் மகிழ்ந்த சமயமும் எண்ணத்தில் உறுதியான உணர்வில், சொல்லில், செயலில் அமைந்த மனிதனுடைய தெய்வநெறி உலகநெறி உற்ற சமுதாயநெறி ஆகியவற்றால் அடங்குவனவாகும். இப்பக்தியும் இன்று காணப்படும் வகைகளுக்கு முற்றும் மாறுபட்டதாய் முரணியதாய் இருப்பதைக் காணலாம். தொடக்க நாளில் பக்தி மனித உள்ளத்தில் தோன்றியிருக்கும் ஆறறிவுடைய மனிதன் தோன்றிய அந்த நாளிலே மனம் போன போக்கில் வாழ்ந்து வந்தவன். வரையறுத்த சமுதாய வாழ்வு அவன் அறியாதது. கண்டதைத் தின்று கண்டபடி திரிந்து காட்டில் உறைந்து எப்படியோ இனப்பெருக்கத்தை அறிந்து வளர்ந்து வந்தவன் என்பது மனித வரலாறு காட்டும் உண்மை. அவன் மனம் போன போக்கில் செல்லும் போது பல துன்பங்களை சந்தித்திருக்கக் கூடும். தான் கருதியது முடியாத போது அவன் சிந்தனை, எண்ணம் புதியதாக அரும்பிய உணர்வு ஆகியவை அவனுக்கு ஓர் உண்மையினை

உணர்த்தியிருக்கும். அந்த உணர்வே பக்தியின் வித்தாக அமைந்திருக்கும் எனலாம்.

தனக்குத் தீங்கு விளைவிக்கும் தீயும், வெள்ளமும், இடி, மழை, மின்னல், கொடிய மிருகங்கள் போன்ற பிறவும் தனக்கு மேம்பட்டன என்ற உணர்வு மனிதனுக்கு மேலோங்க அவற்றிற்கு அஞ்சிய அவன் தான் வாழ வேண்டும் என்ற எண்ணத்தைத் தன் மனதில் ஆழப்பதிவு செய்து கொண்டிருப்பான் என அறிய முடிகிறது. இத்தகைய அச்ச உணர்வே பக்திக்கு அடிப்படையாய் அமைந்தது எனலாம். தனக்கு ஊறு நேரக் கூடாது என்ற உணர்வில் மனிதன் அச்சம் தரக்கூடிய இயற்கை அல்லது தான் படைத்துக் கொண்ட இறைவனை வழிபாடு செய்யத் தொடங்கினான். அவ்வாறு வழிபடுவதின் மூலம் தனக்குத் தீங்கேதும் நேராது என்ற நம்பிக்கை உணர்வினையே இது காட்டுவதாய் உள்ளது.

சுட்டெரிக்கும் சூரியனையும், அலைவீசி ஓங்கும் கடலினையும் பெருமழை, இடி, சீறிவரும் பாம்பு போன்றவற்றையும் கண்டு அஞ்சி கருத்தழிந்த ஆதிமனிதன் வழிபட்டிருக்க வேண்டும். எனவே தான் பக்தியின் தொடக்கம் அச்சத்தால் உண்டானது என்று கூறலாம்.

"நல்லதன் நலனும் தீயதன் தீய்மையும் மனித அறிவு உணரத் தொடங்கிய அந்தகாலம் எதுவாயினும் அதுவே. இது வழிபாட்டுக்கு அடிப்படையாகும். எல்லா அறிவும் நம்பிக்கையானது, ஆனால் எல்லா நம்பிக்கையும் அறிவின் பாற்பட்டனவே என ஓர் ஆங்கிலக் கலைக் களஞ்சியம் கூறுவது போன்று முன் அச்சம் காரணமாக எழுந்த நம்பிக்கையும் அறிவின் முதற் கூறுகளைக் கொள்ள அமையும்" [2] என்கிறது வாழ்வியற்களஞ்சியம்.

ஒரு காலத்தில் பக்தி மூடபக்தியாகவும் வைராக்கியப் பக்தியாகவும் அமையத் தொடங்கியது. மக்களைப் பலியிடுதல் (நரபலி) வழக்கமும் பக்தியின் பாற்பட்டதாகவும் கருதப்பட்டது.

எனினும் அவை பெரும்பாலும் அறிவும் நாகரிகமும் முதிர்ச்சியடையாத மக்கள் மேற்கொண்ட பக்தியாக கருதப்பட்டது எனலாம்.

தொல்காப்பியம் புறத்திணையியல், புறப்பொருள் வெண்பாமாலை போன்றவற்றில் களவேள்வி, கொற்றவை நிலை, உண்டாட்டு போன்றவையும் பிறவும் வெற்றி பெற்ற நிலையில் தம்மையே கடவுளுக்குப் பக்திப் பரிசாகத் தரும் நிலையைக் காண முடிகிறது. இது பக்தியின் வைராக்கியத்தை உணர்த்துவதாய் உள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் பின் போரில் இறந்தவர்களுக்கு நடுகல் எடுத்து வழிபாடு நடத்தும் பக்தி மரபு வளர்ந்து வந்தது. தொல்காப்பியமும் பிற தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் இந்த நெறியினை உணர்த்துகின்றன. மேலும் தங்களின் முன்னோரை வழிபாடாற்றும் பக்தி நெறியும் பல இடங்களில் தோன்றியது. இன்றும் தமிழகத்தில் பூவாடை' என்று முன்னோரை வழிபடும் வழக்கத்தை கிராமங்களில் காண முடிகிறது. அச்சத்தோடு அமைந்த பக்தி மெல்ல மெல்ல அன்போடு இயைந்த பக்தியாக நெடுங்காலத்துக்கு முன்பே மாறி வந்துள்ளது என வரலாற்று நெறி உணர்த்துகிறது.

இவை தமிழில் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் காணக் கிடக்கின்றன. அவ்வாறு வளர்ச்சி பெறுவதற்கு இடையில் எத்தனை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். அதற்குப் பின்னரும் பழைய மரபினை ஒட்டிய பக்தி முற்றும் மறைந்து விடாமல் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து உலகிடை வாழ்கின்றது. இதனையே கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும் 'அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும் நெஞ்சம் வாழி நினை'[3]

பக்தி வகைகள்

தாய் தந்தை தன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையை தெய்வமாக போற்றியவரும் போற்றுகின்றவரும் எப்போதும் இவ்வுலகில் உண்டு. கண்கண்ட தெய்வமே தாய் தந்தை என்ற கருத்தின் அடிப்படையில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'[4] என்றார் ஔவையார். 'அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே'[5] என்று அம்மை அப்பன் போன்ற ஒப்பு உயர்வானவன் இறைவன் என்கிறார் மாணிக்கவாசகர், 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'[6] என்ற முதுமொழியும் தாய் தந்தை பக்தியை எடுத்துக் கூறுகின்றது. இதன் காரணமாகவே தந்தை தாய் இறப்பினும் அவர்களை வணங்கும் பொருட்டு அவர்களை இறைநிலைக்கு எய்தும் வண்ணமாக திதி கொண்டாடும் வழக்கம் நம்மிடையே காணப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

குரு பக்தி

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற கருத்திற்கு இணங்க தனது ஆசிரியரையே பலர் தெய்வமாகக் கொண்டு பக்தி கொள்கின்றனர். இத்தகு பக்திக்கு எடுத்துக் காட்டாக ஏகலைவன் என்ற வேடுவனைக் கூறலாம். பாரதியார் தனது விருப்ப தெய்வமான கண்ணனைப் பல நிலைகளில் வைத்துப் பாடியதே கண்ணன் பாட்டு என்ற கவிதை நூல். இதில் கண்ணனை பாரதியார் குருவாக பாவித்துப் பாடிய விதம் குறிப்பிடத்தக்கது. இன்றும் குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும் போது ஆசிரியரின் பாதங்களில் விழுந்து வணங்கச் செய்வதும் கல்வியில் சிறந்து பின்னாளில் உலகம் போற்றும் அறிஞனாலும் தனது ஆசிரியரைக் கண்டால் உள்ளன்போடும் மரியாதையுடனும் வணங்குவதும் மேலும் ஆசிரியர் தின விழா கொண்டாடுவதும் குரு பக்தியை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

நாட்டுப் பக்தி

மனிதன் மொழி, இனம், நாடு போன்றவற்றில் பிரிந்து அவனது வாழ்வு அமைந்து இருக்கின்றது. அந்த வகையில் தான் வாழும் நாடு எந்த நிலையிலாவது சிறுமையுற்று இருந்தாலும் அவனுக்கு பெருமையுற்றதாகவே அமைகின்றது. 'பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவதாயினும் நனிசிறந்தனவே'[7] என்கிறார் பாரதி. எனவே தனது நாட்டை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் அந்நாட்டை தெய்வமாகவே போற்றி வணங்கி பக்தி செய்கின்றனர்.[7]

இறை பக்தி

கண்ணில் காணும் அச்சம் தருவனவற்றையும் ஆக்கம் அளிப்பனவற்றையும் வணங்கிய மனிதன் அவற்றின் வழியே தான் எண்ணியதை முடித்துக் கொள்ள முடியாத ஒரு நிலையை நெடுங்கால அனுபவத்தினால் மெல்ல மெல்ல உணரத் தொடங்கினான். "உளவியல் பேரறிஞர் சிக்மெண்ட் பிராய்டு அவர்கள் இயற்கையிடமும் மரணத்திற்குப் பின் வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிப்பாட்டிற்கு அடிப்படை என்று கூறுகிறார்"[8] தம் எண்ணத்துக்கும் மேலாக ஏதோ ஒரு பொருள் கண்ணுக்குப் புலப்படாத வகையில் எங்கிருந்தோ ஆட்டிப் படைக்கின்றன, என்பதையும் உணர்ந்தான். அந்த ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலா இறைவனை உணரத் தொடங்கிய காலத்திலும் அதை உள்ளத்தால் அன்புடன் வழிபடுவதோடு அது வரையில் புறத்தே கண்டு வழிபட்டு வந்தவற்றையும் அச்சத்தால் விடாது போற்றியும் வந்தான். எனவே இத்தகையப் பக்தி மார்க்கமே உலகில் நிலவுகிறது.

வைணவம் தோற்றமும் வளர்ச்சியும்

வேதங்களில் கூறப்பட்டுள்ள வைணவ கருத்துக்களையும், திருமாலின் அவதாரங்ளையும். திருத்தலங்களின் திருமாலின்

திருப்பதிகள் அமைக்கப்பெற்றுள்ள பெயர்களையும், திருமால் குறித்த புராணங்களையும், அவதாரக் கதைகளையும் பற்றியும், வைணவ சமயத்தின் தோற்றம் குறித்தும், வளர்ச்சிக் குறித்தும் இவ்வியல் ஆராய்கிறது.

வைணவம்

வைணவம் அல்லது ஸ்ரீவைஷ்ணவம் என்பது பரம்பொருளாகவும். முழுமுதற்கடவுளாகவும், பரம்பிரம்மாகவும் கொண்ட சமயமாகும். 'விஷ்ணு' என்பது திருமாலை வழிபடும் சமயம் அத்திருமாலாகிய விஷ்ணு பற்றி.

"திட விசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை

படர்பொருள் முழுவதுமாய் அவைய வைதொறும்

உடல்மிசை உயிர்எனக் கரந்தெங்கும் பரந்துளன

சுடர்மிகு சுருதியுள் வையுண்ட சுரனே"[9]

- **திருவா.மொ** 1.1.7

என்று விளக்கமளிக்கிறார் நம்மாழ்வார்.

வைணவ குரு பரம்பரையில் முதல் குருவே விஷ்ணுதான். அதனால் தான் 'வைஷ்ணவம்' எனப்படுவது என்று கூறுவாரும் உள்ளனர். பிற்கால நிகண்டு விஷ்ணுவை வழிபடுபவர்களை வைணவர் என்றும்; பாகவதர் என்றும், நாராயணன் சமயத்தார் என்றும் கூறுகின்றது. இவ்வுலகில் ஒவ்வொருவரும் மயிலும் மறுமையிலும் விரும்புவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம், அவ்வாறு வாழ விரும்புவோர் தான் விரும்பும் வாழ்வை பெற அதற்கேற்ப சில நற்குணங்களைப் பெற்றிருத்தல்

இன்றியமையாததாகும். இந்தநற்குணங்களையையே சமயம் எனக் கூறுகின்றனர். இச்சமயம் உலகம் தோனறிய காலத்திலிருந்தே ஒவ்வொருவரிடமிருந்தும் உலவி வருகின்றது. இதனை "எங்ஙனம் கதிரவனையும் கதிரையும் தனித்தனியே பிரிக்க இயலாதோ, அங்ஙனமே சமயத்தானையும் சமயத்தையும் தனித்தனியே பிரிக்க இயலாது"[10] என்ற கருத்து வலுவூட்டுவனவாக அமைகின்றது.

வைணவ சமயம்

மக்கள் வாழ்வோடு ஒருவாறு தொடர்புற்றிருக்கும் சமயம் பலவாகும். அப்பல சமயங்களுள் வைணவமும் ஒன்றாகும். இவ்வைணவ சமயம் பல உயரிய உண்மைக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பரந்த சமயமாகும். வைணவ சமயம் திருமாலை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயமாகும். இச்சமயம் "வைணவம்' என்றும், 'வைஷணவம் என்றும் அழைக்கப்படுகிறது. இச்சமயம் இந்து சமயத்தின் ஆறு உட்பிரிவுகளில் ஒன்றாகும். இந்த சமயத்தினைப் சொல்வனவாக:

"வேதம், உபனிஷத்து, பகவத் கீதை, பஞ்சரந்தர ஆகமம், மகாபாரதம், பாகவத விஷ்ணு, கருட, நாரதிய, பத்ம, வராஹி புராணங்கள் அமைகின்றன." மேலும் புண்ணிய பூமியான நம் பாரத தேசத்தில் எத்தனையோ சமயங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றுள் திருமால் சமயமான "வைணவம் என்கிற 'ஸ்ரீ வைஷ்ணவம்' என்பது மிகத் தொன்மையும் நன்மையும் வாய்ந்தது.

புருஷோத்தமான நாராயணப் பிரதம குருவாகக் கொண்டு மக்களை உயிர்ப்பிக்க வந்த மாபெரும் நதியே 'வைணவ சமயம்' ஆகும்.

கற்பக மரத்தின் அடியில் நின்றுகொண்டு என்ன நினைக்கின்றோவோ அவையெல்லாம் உடனே கிடைக்குமாம்.

அதைப்போலவே வைணவ சமயமானது கற்பக மரத்தின் நிழலில் இருந்து பகவானயே கேட்டாலும் அவன் தன்னைக கொடுத்துவிடுவான் அத்தனை பெருமையும் ஆற்றலும் வாய்ந்தது இந்த சமயமாகும். இதனை,

உலக மதங்கள் பலவற்றிலும் உயர்வற உயர்ந்து விளங்குவது ஸ்ரீ வைஷ்ணவ சமயம் தான். வைஷ்ணவம் என்பதற்கு விஷ்ணு சம்பந்தம் உடையது என்பது பொருள். பரம்பொருளுக்கு நாராயணன், வாசுதேவன், விஷ்ணு ஆகிய திருநாமங்கள் உண்டு. என்ற இக்கருத்து நோக்கத்திற்கு அமைந்தது. தான் மட்டும் நன்றாக வாழ்வது என்று எண்ணாமல் இந்த உலகமும் உலகத்தில் வாழும் அத்தனை உயிர்களும் துன்பமின்றி, இன்பத்தோடு வாழ வேண்டும் என்னும் உலகம் தழுவிய அன்பு நிலையே வைஷ்ணவ மதத்தின் ஆணிவேர் என்பதை ஆய்தவிடத்து அறியமுடிகின்றது.

"ஆடுமாடு மேய்த்துக்கொண்டு காட்டில் திரிந்த ஆயர்குல மக்கள் முதல் ஆதிமூலத்தைத் தன் அறிவுத் திறமையால் அகழ்ந்தெடுத்து வெளியிட்ட ரிஷிகள் வரை அனைவரையும் வைஷ்ணவம் சமநோக்கோடு அன்பு செலுத்தி அரவணைத்துச் செல்கிறது." என்ற கருத்து வலுவூட்டுவனவாக அமைகின்றது. மேலும் இந்தியாவின் பண்டைய பெருமைமிக்க இலக்கியங்களான வேதங்கங்கள், உபநிடதங்கள். புராணங்கள், பாகவதம், பகவத்கீதை. இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் போன்ற ஒப்பற்ற நூல்கள் வைணவத்துக்கு ஆதாரமாக அமைவதைப் போல சிற்றிலக்கியத்தில் பயின்று வந்துள்ள திருமால் பற்றிய செய்திகளும் வைணவ சமயத்தின் சிறப்பினை விளக்குகின்றது.

வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இராமாயணம், மகாபாரதம் இரண்டும் வைணவ வரலாற்றில் முக்கிய இடம்பெறும் இதிகாசங்கள், இவை இரண்டும் மக்களிடம்

பரவியிருந்த கதைப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவை. இராமாயணத்தின் முதல் மற்றும் இறுதிக் காண்டங்கள் இடைச்செருகல்கள் மூலம் 'சாதாரண மனிதனான இராமன் விஷ்ணுவின் அவதாரமாகச் சித்தரிக்கப்பட்டான். பிற்சேர்க்கை, மேலும் பாரதம் பழங்குடி பிரிவுகளுக்கு இடையே நடந்த போராட்டங்களைச் சித்தரிக்கும் 'ஆதிபாரம்' பின்னால் இதிகாசமாக மாற்றப்பட்டு உட்கதைகள் பல புகுத்தப்பட்டு 'மகாபாரதமாக' மாறியது. திறமையான போர்க்கடவுளாக, ஆன்மீக வழிகாட்டியாக, பாண்டவர்களின் துணையாகச் சித்தரிக்கப்பட்ட வாசுதேவ கிருஷ்ணன், நாராயண விஷ்ணுவின் அவதாரமாக மாற்றப்பட்டார். ஸ்ரீ. இலட்சுமி என்ற பெண் தெய்வங்கள் ஸ்ரீலட்சுமி (திருமகள் மகாலட்சுமி) என்ற செல்வத்தின் தேவதையாக மாற்றப்பட்டு விஷ்ணுவுடன் இணைக்கப்பட்டது.

குப்தர்கள் காலத்தில் வைணவம் ஆளும் வர்க்கத்தின் சமயமாக ஓங்கியது. நிலப்பிரபுத்துவ வேளாண் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றும் ஆற்றல் பெற்ற 'பிராமணிய வைணவம்' எழுந்தது. இந்திய மக்கள் மனதில் நீண்ட காலம் செல்வாக்குச் செலுத்தியது.

வேதகால யாகம், பலியிடுதல் மாறி இறைபக்தி வழிபாட்டு முறை உருவானது. பலியிடுதலை எதிர்த்த புத்த, சமண மதம் பலவீனம் அடைந்தது. பக்திமயமான வைணவம் அநிச்சையை வலியுறுத்தியது. பலியிடுதலை எதிர்த்தது.

வைணவத்தில் மற்றொரு முக்கிய அம்சமாக அவதாரக் கொள்கை உள்ளது. விஷ்ணுவின் பத்து அவதாரங்களும் தீமைகளை அழித்து நல்லவர்களைக் காப்பாற்ற என்ற கருத்து கீதை மூலம் நிலை நிறுத்தப்பட்டது. உள்நாட்டு இனக்குழு மக்களிடம் பிராமணியத்தைப் பரப்ப இது பயன்பட்டது. நாட்டுக்கு ஒருவித கலாச்சார ஒற்றுமையைத் தருவதற்கும் உதவியது. மன்னர், உயர்

குடியினர், மேனிலை மாந்தர் 'அரி'யின் அவதாரமென்று வர்ணிக்கப்பட்டனர்.

சடங்குகளும் விரதம், நோன்பு போன்ற செயலமுறைகளும் இந்தியா முழுவதும் பரவியது. இதன்மூலம் 'வைணவம்' நாடு முழுவதும் பரவி பிறகு தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் பரவியது. பகவத் நாராயணரின் வழிபாடாகிய 'பாகவத கோட்பாடு' வளர்ச்சியுற்ற நிலையே வைணவ சமயமாகும்'. அது பல்வேறு கூறுகளைச் சேர்த்து உட்கொள்ளும் போக்கை கொண்டதால் குப்தர் காலத்தில் மிகச் செல்வாக்குப் பெற்ற சமயங்களில் ஒன்றாக மாறியது. நால்வர்ணம் சார்ந்த எல்லா மக்களும் வந்து சேர 'வைணவம்' திறந்திருக்கிறது. வர்ணாசிரமம் காப்பாற்றப்படுவதற்கும். மக்கள் தம் சமூக பொருளாதார நிலைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்வதற்கும் அது காரணமாக இருந்தது.

"முத்தொழில் செய்யும் மும்மூர்த்திகளுள் காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்துத் தோன்றிய மதம் விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொள்ளும் வைணவ மதமாகும்" இக்கொள்கைக்கும் அடிப்படை வேதமே எனினும், வைணவக் கருத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சி அவ்வளர்ச்சிகளைத் தெரிவிக்கும் உண்மைகள் வேதத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகிப் படிப்படியாகப் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து ஓரு ஆசாரியனை ஒப்புக்கொண்டு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கியதும் தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது என்பது புலனாகிறது. வைணவம் பற்றிய வேதக் கருத்துக்களுக்கும். ஆசாரியர்கள் சொல்லும் கருத்துக்கும் இடையே மாறுதல்களை நோக்க, வேத காலத்திற்குப் பிறகே வேதம் இட்ட வித்தில் வளர்ந்த வைணவமதமாகிய மரம், பிற்காலச் சிந்தனையாளர்களால் செழிப்பான பெருமரமாக வளர்க்கப்பட்டது. அதனுள்ளும்

தமிழ்நாட்டு வைணவம் என்ற பெருங்கிளை விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொண்ட அடிப்பாட்டில் வேதாந்த கொள்கை, பக்தி மார்கக் கொள்கை. அறநெறி திருநெறி பற்றிய கொள்கைகள், தனிப்பட்ட தருக்க முறை கொள்கைகள் என்னும் இவற்றோடு கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாதமுனிகள் காலத்தில் தழைத்துக் குலுங்கி, பின்னர் வேதாந்ததேசிகரோடு ஒரு கிளையாகவும், மணவாள மாமுனிகளோடு ஒரு கிளையாகவும் கவரப்பட்டு வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாச புராணங்கள், ஆழ்வார்கள் அருளிய பாசுரங்கள் இவற்றாலும் ஆகமங்களாலும் உரம்பெற்று காலேட்சேப கூட்டங்களில் பூத்து இன்று விண்ணகரங்களில் பழுத்துப் பயன் தருவதைக் காண்கிறோம். இன்று ஆலயம் வைணவம் இரண்டும் பிரிக்க முடியாத தொடர்படையனவாய் இருப்பினும், ஆகமத்தையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்ட ஆலய வழிபாடே வைணவம் என்று கூறுதல் பொருந்தாது. வைணவமானது ஆகமமே அன்றி வேதம், புராணம் முதலிய மற்ற பிரமாணங்களையும் கொண்டுள்ளது. ஆகவே "வேதம், புராணம், இதிகாசம், ஆகமங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஆழ்வார் பாசுரங்கள், வைணவ சாத்திர நூல்கள் இவற்றை உரை கல்லாகக் கொண்டு வைணவத்தை வரலாற்றுவழிக் காண்பது பயன்தரும் செயல்களில் ஒன்றாகும். "1913 ஆம் ஆண்டில் வெளிவந்த "வைணவம், சைவம், சிறுசமயப் பிரிவுகள்" என்னும் சிறு நூல் தலைசிறந்தது என்று ஆர்.ஜி.பந்தாக்கா கூறியுள்ளார்.[11]

"ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு விலைமதிப்பற்ற சில கூறுகளை வழங்கித் தகும் பெருமை" வைணவத்துக்கு உண்டு என்று நம்புவதாக சிறிதும் தயக்கமின்றி 'பிரஜேந்திரநாத் சீல்' என்பவர் கூறினார்.[12]

கி.பி.472 ஆம் ஆண்டு சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட 'தசரத கதானம்' இராமாயணத்தோடு ஒப்புடையுடையது; இராமனுக்கு நாராயென் (சமஸ்கிருதம் நாராயணன்) என்னும் இறைவனுக்குள்ள வீரமும் ஆற்றலும் உண்டு" என்று கூறுகிறது.

"கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இராமா விஷ்ணுவுடன் ஒன்றாகிப் போனது பெரு வழக்காகி இருக்க வேண்டும். எனவே பௌத்தர்கள் இராமனைப் புறக்கணித்துவிட்டனர். இராமாயண காண்டத்திலும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் முதற்காண்டத்திலும், இறுதி அவதாரமாக விஷ்ணுவாக இராமர் தோன்றுகிறார். புதிதாக இவை இணைக்கப் பட்டிருக்கலாமென்று பொதுவாக கருதப்படுகிறது" (ஆதி மூலநூலில் இராமன் சிறந்த இலட்சிய வீரனாக வருணிக்கப்படுகிறான்) இதன் விளைவாகப் அறிவு சார்ந்த புராணக்கதைகளுக்கு வரலாற்று அடிப்படையிலான பல விளக்கங்கள் தரப்பட்டன. இன்று நம் எல்லோர் சிந்தையிலும் வீற்றிருக்கும் பெருமகனார் சேதுப்பிள்ளையவர்கள்.

வைணவம் விட்டுணுவை (திருமாலை) முடிந்த பேருண்மையாகக் கொண்டு திகழும் சமயமாகும். இச்சமயம் பாகவதம், பாஞ்சராத்திரம், சாத்வதம், ஏகாந்திகம் என்ற திருநாமங்களாலும் வழங்கப்பெறும். இறைவனைப் 'பகவான்' என்று கொள்ளும் வழிபாட்டு மரபு பாகவதம்; பாகவத மரபினர் பாகவத புராணத்தையும், பகவத் கீதையையும் மகாபாரதத்தில் நாராயணீயம் என்ற பிரிவினையும் தங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை நூல்களாகக் கொள்வர். பாஞ்சராத்திர மரபினர் பாஞ்சராத்திர ஆகமங்களைத் தங்கள் அடிப்படை நூல்களாகக் கொள்வர். சிரீகிருட்டிணர் சார்ந்த இனமாகிய சாத்வதத்திலிருந்து பெயர் பெற்றது சாத்வதம். ஒரே ஒரு

முடிவைக் கொண்டது ஏகாந்திகம். இவர்கள் நாராயணனே மனிதர்கள் அடைய வேண்டிய மேலான முடிவாகும் என்ற நம்பிக்கையுடையவர்கள்.

வைணவ வழிபாட்டு மரபு விட்டுணுவைப் பரம் பொருளாகக் கருதினாலும் இந்தக் கொள்கையானது சிந்தனைப் போராட்டங்களின் ஒருமித்த நிலையாகும் என்பது ஆர்.ஜி பண்டாரகர் போன்ற ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்தாகும். அவை (1) வேதங்களில் காணப்பெறும் மூன்று நீண்ட அடிகளையுடைய இறைவனாகக் கருதப்பெறும் விட்டுணுவைப் பற்றிய கருத்து; (2) இயல் உலகு மற்றும் மெய்ப்பொருளியலைச் சார்ந்த இறைவனான நாராயணனைப் பற்றிய கருத்து; (3) வரலாறு சார்ந்த இறைவன் எனக் கருதப்பெறும் வாசுதேவனைப் பற்றிய கருத்து; மற்றும் (4) ஆயர் இனத்தைச் சார்ந்த இறைவனான கிருட்டிணனைப் பற்றிய கருத்து என்பனவாகும். இந்த நான்கு வகைக் கருத்துகளும் இணைந்ததே இன்றைய வைணவமாகத் திகழ்கின்ற ஒன்றாகும். இந்த நான்கு வகைக் கருத்துகளையும் ஆய்ந்து அவையே இன்றைய வைணவ மரபாக மாறின என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளேன். இனி, பண்டைய தமிழ்நூல்களில் திருமால் வழிபாடு பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

1. தொல்காப்பியம்

பண்டையத் தமிழர்கள் கடல் சூழ்ந்த நிலப் பகுதியை நான்கு நிலங்களாகப் பகுத்தும், அந்நிலங்கட்குத் தெய்வங்களை வகுத்தும் காட்டியுள்ளனர், காடு சார்ந்த நிலமாகிய முல்லையையும், அதன் ஆதி தெய்வமான திருமாலையும் முதற்கண் வைத்துச் சிறப்பித்துள்ளமை,

மாயோன் மேய

காடுறை உலகமும்[13] தொல்-பொருள்.அக-5 (இளம்)

என்ற பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தால் அறியலாம். மாயோன் - கண்ணன்; கருநிற முடையோன்! இதனால் மாயோன் என்று முன்னோர்களால் குறிப்பிடப் பெறும் தெய்வம் திருமாலின் பூர்ண அவதாரமான கண்ணனே என்பது பெறப்படுகின்றது. இவ்வுரிமைத் தலைமை அப்பெருமானுக்கு அமைந்ததற்கு அவனது இறைமைப் பண்புகளே காரணமாகும் என்று கருதலாம்.

மாயோன் மேய மன்பெறுஞ் சிறப்பிற்

றாவா விழுப்புகழ் பூவை நிலையும் [14]

- புறத்திணை-5. (இளம்) 53

என்ற நூற்பா 'பூவைநிலை' என்ற புறத்திணையினை விளக்குவது. இதனை மாயோனுடைய காத்தற் புகழை மன்னர்க்கு உவமையாகக் கூறும் 'பூவை நிலை' என்று விளக்குவர் நச்சினார்க்கினியர் மேலும் அவர்,

கடல்வளர் புரிவளை புரையு மேனி

யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும் மண்ணுறு

திருமணி புரையு மேனி

விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்'[15] புறம் - 56

என்னும் புறநானூற்றுப் பாடலை மேற்கோள் காட்டுவர். இப்பாடலில் பலதேவனும் திருமணி (திருமறு-ஸ்ரீவத்சம்) யையுடைய திருமாலும் வருதலைக் காணலாம். பலதேவனைத் தமிழ்நூல்கள் நம்பிமூத்தபிரான் என்று குறிப்பிடும்.

தொல்காப்பியத்தில் இன்னொரு குறிப்பும் உண்டு. அந்நூல் எழுவதற்கு முன்பே கண்ணபிரானைப் பர தெய்வமாகக் கொண்டு அப்பிரானது குழவிச்செயல்களில் தமிழ் மக்கள் ஈடுபட்டு வந்தனர் என்பதே அக்குறிப்பு. மானிடனாகிய பெண்மக்கள் அவ்வினத்து ஆண்மக்களிடமும் ஆண்குழவிகளிடமேயேன்றிக் கடவுளிடத்தும் கடவுள் குழவியரிடத்தும் காமப்பகுதி செலுத்துவதற்குரியவர் என்பதனைத் தொல்காப்பியர்,

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்[16]

- தொல். பொருள்-புறத்திணை-23

குழவி மருங்கினும் கிழவ தாகும்'[17]

- தொல். பொருள்-புறத்திணை-23

என்ற நூற்பாக்களால் புலப்படுத்துவர். இது தெய்வக் குழவியாகிய கண்ணனிடம் ஆயமகளிர் கொண்ட காதல் வெள்ளத்தை உட்கொண்டு கூறப்பெற்றதாகக் கொள்ளலாம். இவற்றால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே (கி.மு. முதல் நூற்றாண்டு) திருமால் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றி இருந்தமை தெளிவாகின்றது.

வாசுதேவனான இக்கண்ணனைச் சங்கர்ஷண மூர்த்தியாகிய பலதேவனுடன் கொண்டு தோன்றிய முறை விந்திய மலைக்கும் அப்பால் உள்ள வடநாடுகளிலே ஒரு காலத்துச் சிறப்பாக இருந்தது என்பதையும் பண்டைய வட நூல்களாலும் கல்வெட்டுக்களாலும் அறியக் கிடக்கின்றது.[18] இத்தகைய சங்கர்ஷண-வாசுதேவ வணக்கமே தென்னாட்டிலும் பரவி வழங்கியதற்குச் சங்க நூல்கள் பலவும் சான்றாக அமைகின்றன. தொல்காப்பியனார்க்கு இவ்வணக்கத்தைப்பற்றி வெளிப்படையாகக் கூற நேராமல் போயினும், அவர்காலத்துமாயோனான கண்ணன் வழிபாடேயன்றி

நம்பிமூத்த பிரானைப் போற்றும் முறையும் இருந்ததென்பதற்கு அவர் நூலில் ஒரு சிறந்த குறிப்பு உண்டு. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் 'பனை' என்ற சொல்லுக்கு முன் வரும் சொற்கள் புணரும் முறையை,

கொடிமுன் வரினே ஐஅவன் நிற்பக்
கடிநிலை இன்றே, வல்லெழுத்து மிகுதி! [19]

தொல்-எழுத்து- உயிர் மயங்கியல் - 53 என்ற நூற்பா விளக்கும்

பத்துப்பாட்டு

தொல்காப்பியத்தை அடுத்துப் பத்துப்பாட்டும் எட்டுத் தொகை நூல்களும் எழுந்தன. இவை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியனவாகக் கூறுவர். முதற்கண்கூறிய பத்துப்பாட்டில் மாயோனைப்பற்றிய குறிப்புகள் பல காணலாம். அவற்றுள் சில:

புள்ளணி நீள்கொடிச் செல்வன்'[20]

- திருமுருகு- அடி 181

'நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலையிய
உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கை'[21]

- திருமுருகு- அடி - 160-161

'இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறக்கடை'[22] பெரும்பாண் - (22,31)

திருக்குறள்

இஃது உலகப் பொது மறையாகக் கருதப்பெறுவது. இதில் வரும் வைணவம் பற்றிய குறிப்புகளை, (1) இறைவன் பெயர்கள் (2) அவதாரங்கள் (3) இருவகை உலகுக்கும் தலைவன் என்று மூன்று பகுதிகளாக நோக்கலாம்.

(1) இறைவனின் பெயர்கள்:

முதல் குறளில் வரும் ஆதிபகவன் என்னும் பெயரை நோக்குவோம். இதனை 'ஆதியாகிய பகவன்' என்று ஒரு பெயராகவும் ஆதியும் பகவனும் என்று இரு பெயராகவும் கொள்ளலாம். சிவஞான சித்தியார் பரபக்கம் பாஞ்சராத்திரி (வைணவ) மதமறுதலையில் "ஆதியாய் அருவுமாகி" என்ற செய்யுளாலும் "பாஞ்சராத்திரி நீ உன் கர்த்தாவை ஆதி என்று கூறினாய்; அங்ஙனம் ஆதியாயின் ஆதிக்கு முடிவுண்டாய் கர்த்தாவும் அல்லனாவான்" என்ற அதன் உரையாலும் 'ஆதி' என்ற பெயர் திருமாலுக்கு உரிய பெயராகும். ஆதிமூலம்' என்ற பெயரும் நோக்கற் பாலதாகும். நம்மாழ்வாரும் 'அந்தமில் ஆதியம் பகவன்' என்பர்.

பகவான் அருளிய கீதை பகவத்கீதை:

பகவான் வரலாறு கூறும் நூல் பாகவதம்; பகவான் அடியார்கள், பாகவதர்கள் எனும் வழக்காறுகளால் 'பகவத்கீதை' 'பாகவதம்' 'பாகவதர்' எனும் பெயர்களுக்கு மூலமாகிய 'பகவான்' என்ற சொல் திருமாலுக்கே உரிய பெயரைக் குறிக்கின்றது என்பது உறுதி.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு[23]
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் [24]

என்னும் குறட்பாக்களில் 'இறைவன்' என்னும் சொல் உள்ளது. இறைவன் என்பதற்கு 'எல்லாப் பொருள்களிலும் தங்குகின்றவன்' என்பது பொருள். இது 'நாராயணன்' 'விஷ்ணு', 'வாசுதேவன்' எனும் பெயர்களின் தமிழ் வடிவமாதலை உணரின் 'இறைவன்' எனும் சொல் திருமாலுக்கே உரியதாம்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர்

ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்[25]

என்பதில் காணப் பெறும். 'பொறிவாயில் ஐந்தவித்தான்' எனும் பெயர் 'ரிஷிகேசன்' (இருடிகேசன்) என்ற திருநாமத்தின் தமிழ் வடிவமாகும். ரிஷிகம்-இந்திரியம்; இந்திரியங்களின் தலைவன் என்னும் பொருளுடையது. 'அவித்தல்' என்பது ஈண்டுத் 'தன் வயமாக்குதல்' என்னும் பொருளைத் தரும். ஓராயிரமாய் உலகேழிற்கும்-பேராயிரம் கொண்டதோர் பீடுடைய திருமாலுக்குச் சிறந்தனவாய் திருநாமங்கள் 'பன்னிரு திருநாமம்' எனப்படும். அவற்றுள் 'ரிஷிகேசன்' என்பதும் ஒன்று. ஆகவே, 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பது திருமாலுக்கு உரியதேயாகும்.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்

பிறவாழி நீந்தல் அரிது (8)

என்பதனுள் வரும் 'அறவாழி அந்தணன்', என்பதும் 'அறவனை ஆழிப்படை அந்தணனை', 'அறமுயல் ஆழிப்படையவன்' என்னும் திருவாய்மொழித் தொடர்களால் திருமாலுக்கு உரியது என்று உணரலாம்.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை (9)

என்பதில் 'எண்குணத்தான்' 'எளிமைக் குணமுடையவன்' என்று பொருள்படும். இஃது இப்பொருளாதலை,

எண்பதத்தான் ஒரா முறை செய்யா மன்னவன் (548) **'எண்பதத்தால் எய்தல் எளிதென்ப'** (991)

என்பவற்றில் இவற்றின் சொற்பொருளால் அறியலாம். 'எளிவரும் இயல்வினன்' (1;2;3) 'யாரும் ஓர் நிலைமையன் என அறிவெளிய

எம்பெருமான்' (1;3:4) எனவரும் திருவாய்மொழித் தொடர்களால் உறுதியாகும். மேலும் இறைவனின் திருக்குணங்களுள் சௌலப்பிய குணம் (சுலப குணம்) என்பதனை அடியார்கள் சிறப்பித்துக் கூறுவதும் இதனை வலியுறுத்தும். **வைணவமும் தமிழும் - பக்.20**

> **தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல் தாமரைக் கண்ணான் உலகு** (1103)

என்பதில் 'தாமரைக் கண்ணான்' என்ற பெயர் திருமாலுக் கன்றி வேறு எத்தெய்வத்துக்கும் இல்லாமை உய்த்தறியத் தக்கது.

தொகுப்புரை

“பேரா. ந. சுப்புரெட்டியாரும் வைணமும்” எனும் இவ்விரண்டாம் இயல், வைணவ சமயத்தின் ஆன்மீக ஆழத்தையும், ஆழ்வார்களின் பக்தி மரபின் சிறப்பையும் விரிவாக வெளிப்படுத்துகின்றது. ஆழ்வார்களின் பக்தி நிலைகள், அவர்கள் அருளிச்செய்த திவ்யப் பிரபந்தங்கள், இறை அனுபவங்கள் ,இதன் மூலம், வைணவப் பாரம்பரியம் என்பது வெறும் சமயக் கட்டமைப்பு மட்டுமல்லாது, இறையருளை நேரடியாக அனுபவிக்கும் ஆன்மிகப் பாதையாகும் என்பதை உணர முடிகிறது.

முதலாழ்வார்களிலிருந்து தொடங்கி, திருமழிசையாழ்வார், குலசேகரஆழ்வார்,நம்மாழ்வார்,மதுரகவியாழ்வார்,பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பாணாழ்வார்,திருமங்கையாழ்வார் போன்றோர் வரை ஒவ்வொருவரின் வாழ்க்கைச் சுவடுகளும் தனித்துவமாக எடுத்துரைக்கப்படுகின்றன. அவர்கள் அனுபவித்த பக்தி நிலைகள், பல்வேறு சூழ்நிலைகளில் வெளிப்பட்ட இறை நினைவு, சமயங்களைக் கடந்த ஆன்மிகத் தேடல் ஆகியவை, பக்தியின் பல்வகை முகங்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. திருமழிசையாழ்வாரின் பல சமயங்களில் ஈடுபட்டு இறுதியில் வைணவத்தில் நிலைபெற்றமை, ஆண்டாளின் இறையன்பு, கணிக்கண்ணன், தேவதேவி போன்ற சம்பவங்கள் மனித வாழ்க்கையின் சோதனைகளையும், அவற்றை மீறிச் செல்லும் பக்தியின் வலிமையையும் எடுத்துரைக்கின்றன. தொண்டரடிப்

பொடியாழ்வார் போன்றோர் எதிர்கொண்ட துன்பங்களும், அவற்றை மீறி அடைந்த ஆன்மிக உயர்வும், உண்மையான பக்தியின் நிலைத்தன்மையை வலியுறுத்துகின்றன. குலசேகர ஆழ்வாரின் இராமாயண ஈடுபாடு, இறைவன் இராமன் காட்சியளித்தல், ஸ்ரீ ராம நவமி கொண்டாட்டம் ஆகியவை பக்தியின் உணர்ச்சி ஆழத்தையும், இறையுடன் ஏற்படும் நெருக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. திருப்பாணாழ்வாரின் பரம பக்தி, தொண்டரடிப் பொடியாழ்வாரின் பரிசுத்த வாழ்வு போன்றவை அனைத்தும் இவ்வியலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1 நர்மதாவின் தமிழ் அகராதி, பக்.86

2 வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – II, பக். 876

3 திருநாவுக்கரசர் தேவாரம், துரை தண்டபாணி – பக்.8

4 ஔவையார் - கொன்றை வேந்தன் உலகத்தமிழ்க் கல்விக்கழகம் - பக்.1

5 மணிகவாசகர் – திருவாசகம் - பிடித்த பத்து - 37

6 ஔவையாரின் - கொன்றை வேந்தன், உலகத்தமிழ்க் கல்விக்கழகம் - பக்.12,13

7 கணியன் பூங்குன்றனார் - புறநானூறு – பக். 464

8 கம்பனில் பண்பாட்டுச் சொற்களஞ்சியம், (ஆய்வேடு), தஞ்சைத்தமிழ் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பக்.7.

9 நம்மாழ்வார் - திருவாய்மொழி - பக். 1068

10 மகாத்மா காந்தி - சத்திய சோதனை (The Story of My Experiments with Truth) Page - 44

11 தொல்காபியம் உரை – ச. பாலசுந்தரம் பாக். 12

12 மேலது பக். 123

13 கபிலர் – புறநானூறு – பக்.148

14 தொல்காபியம் உரை – ச. பாலசுந்தரம் பாக். 219

15 மேலது பக். 220

16 Bhandarkar, R. G. Vaishnavism, Saivism and other Minor Religious systems பக். (3-4)

17 தொல்காப்பியம் உரை - ச. பாலசுந்தரம், 83 (பக்.232)

18 நக்கீரர்- திருமுருகாற்றுப்படை பக்.11

19 மேலது பக்.12

20 கடியலூர் உருத்திரங்கண்ணனார் - பெரும்பாணாற்றுப்படை பக்.205

21 ந. சுப்புரெட்டியார் உரை – திருக்குறள், பக்.3

22 மேலது - பக்.3

23 மேலது - பக்.3

24 மேலது - பக்.3

25 மேலது - பக்.3

26 ந. சுப்புரெட்டியார் உரை – திருக்குறள், செங்கோன்மை. - பக்.113

27 ந. சுப்புரெட்டியார் உரை – திருக்குறள், பண்புடைமை - பக்.203

28 ந. சுப்புரெட்டியார் உரை - திருக்குறள் ,புணர்ச்சி மகிழ்தல் - பக். 227

இயல் - 3

பேரா.ந.சுப்புரெட்டியாரின் திவ்யதேசப் பயணங்கள்

இயல் - 3

பேரா.ந.சுப்புரெட்டியாரின் திவ்யதேசப் பயணங்கள்

மலை நாட்டுத் திருத்தலப் பயணம்

பாண்டி நாட்டுத் திருத்தல வழிபாட்டை முடித்துக் கொண்டு நாகர்கோயிலில் தங்கியிருந்த போது அவர்களுடைய மலைநாட்டுத் திருத்தலப் பயணம் தொடங்கியது. முதல் நாள் காலை (1969 - மாதம்) திருவண்பரிசாரம் என்ற திருத்தலத்திற்கு சென்றனர். இது நாகர்கோயிலுக்கு வடதிசையில் நெல்லை - நாகர்கோயில் நெடுஞ்சாலையில் 2 கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதி உண்டு. நகரப் பேருந்தில் ஏறி நெடுஞ்சாலையில் ஒரு வாய்க்கால் பாலத்தருகில் இறங்கி முக்கால் கல்தொலைவு நடந்து கோயிலை அடைய வேண்டும். மலைநாட்டுக் கோயிலின் 'கலை' அங்கே தென்பட்டது. எம்பெருமானின் திருநாமம் 'திருவாழ்மார்பன்' என்பது; நல்ல தமிழ்ப் பெயர். இது தான் வடமொழியில் 'சீநிவாசன்' என்று வழங்குகின்றது. பிராட்டி எம்பெருமானின் இதயத்தில் வாழ்கின்ற இடமாதலால் இப்பெயர் உருவானது எனபதை அறியமுடிகிறது. 'அகிலல்லேன் இறையும்' என்று அலர்மேல் மங்கை உறையும் திருமார்பை உடையவன் அல்லவா சேவையை முடித்துக் கொண்டு தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பினார் பேராசிரியர்.[1]

திருவண்பரிசாரம் என்ற ஊர் 'திருப்பதிசாரம்' என்று மக்களிடையே வழங்கி வருகின்றது. திருப்பதி சென்று வந்தால் அதனால் கிடைக்கும் பலன்கள் எல்லாம் திருவண்பரிசாரத்திற்கு வந்தால் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையே இப்பெயர் வரக் காரணமானது என்று கருதமுடிகிறது. நம்மாழ்வாரின் திருத்தாயார்

உடைய நங்கையார் பிறந்த ஊர் இத்திருத்தலம். மாலையில் கன்னியாகுமரி சென்றனர். 'நீலத் திரைக்கடல் அருகே உள்ள குமரி தெய்வத்தை வணங்கினர். விவேகானந்தர் பாறையைத் தொலைவிலிருந்தே கண்டு மகிழ்கிந்தனர். எதிர்பாராத விதமாக அன்று பௌர்ணமி. கடலோரத்தில் நின்று கொண்டு மேற்கே பகலவன் மறைவதையும் கிழக்கே முழுமதியம் உதயமாவதையும் ஒரே சமயத்தில் கண்டனர். அதன்பிறகு சுசீந்திரம் வந்து தாணுமாலயனைச் சேவித்துக்கொண்டு நாகர்கோவிலை வந்தடைந்தனர்.

அடுத்த நாள் அதிகாலையில் நீராட்டத்தை முடித்துக்கொண்டு திருவனந்தபுரத்தை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் 16 கல் தொலைவில் உள்ள 'திருவாட்டாறு' என்ற திவ்விய தேசத்திற்கு சேர்ந்தனர். பேருந்தில் வரும் போதே இருபுறமுள்ள சோலைகள், தோட்டங்கள், நெல்வயல்கள். ஆறுகள், அவற்றினின்றும் கால்வாய்களாகப் பிரிந்து சென்று நிலங்களை வளமாக்கும் கால்வாய்கள் இவற்றைக் கண்டு அனுபவித்த வண்ணம் இவ்வூரை அடைந்தனர். ஆறும் அதன் கால்வாய்களும் சூழ்ந்திருப்பதால் "திருவட்டாறு என பெயர் பெற்றதை அறியலாம்.

'திருவாட்டாறு' என்ற திருப்பதியை நம்மாழ்வாரே நமக்கு நன்றாக அறிமுகம் செய்து வைக்கின்றார்.

திகழ்கின்ற திருமார்பில்
திருமங்கை தன்னோடும்
திகழ்கின்ற திருமாலார்
சேர்விடம்தண் வாட்டாறு [2]

என்பதாக. அலர்மேல்மங்கை உறைமார்பன் வாழும் இடம் திருவாட்டாறு என்பது ஆழ்வாருடைய குறிப்பு. சாதாரணமாக உலக

வழக்கில் எல்லோரும் திருவாளர்,(சீமான்) என்று சொல்லப்பெறுகின்றனரே, அப்படி அன்று இங்கு. திருமங்கை தன்னோடும் திகழ்கையினாலே, அஃதாவது (தன்மார்பில்) திருவுடன்(இலக்குமியுடன்)விளங்குகின்றவனாத லின் உண்மையிலேயே திருவாட்டாற்றான் 'திருவாளர்' என்ற அடைமொழிக்குப் பாத்திரனாகின்றானதை காணலாம்.

'ஆதிகேசப் பெருமாள்' என்பது இத்திருப்பதி எம்பெருமானின் திருநாமம்; தாயாரின் பெயர் மரகதவல்லி மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நமக்குச் சேவை சாதிக்கின்றான் எம்பெருமான். திருவனந்தபுரத்திலிருப்பது போலவே, இங்கும் மூன்று சந்நிதிகள் உள்ளன. மூன்று சந்நிதிகளின் அளவுக்கு நீளப் பள்ளி கொண்டிருக்கின்றான் எம்பெருமான். சந்நிதி வழியாகத் திருமுக இடப்புறச் மண்டலக் காட்சி தருகின்றான். நடுவிலுள்ள சந்நிதி வழியாக அவனுடைய திருமேனி அழகை கண்டு களித்தனர். வலப் புறச் சந்நிதி வழியாகக் கழல் இணைகள் கண்ணுக்கு விருந்தாக அமைந்தன. "என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"[3] என்ற திருப்பாணாழ்வார் வழி பெருமாளை தரிசித்தனர். இத்திருக்கோவிலின் கருவறை. அர்த்தமண்டலம். இவ்விரண்டின் தளங்களும், ஒரே கல்லினாலானவை. ஆகவே, அர்த்தமண்டபத்திலிருந்த வண்ணம் பிரசாதங் களைப் பெற்றால் கருவறையின் தூய்மை கெட்டுவிடும் என்று கருதி, அங்கு அவை வழங்கப் பெறுவதில்லை. அர்த்தமண்டபத்தினின்றும் இறங்கித் தரையிலிருந்த நிலையில் சந்தனம் திருத்துழாய் முதலிய பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நியதி இன்றும் வழக்கத்திலிருப்பதை அறியலாம்.

திருவனந்தபுரம் செல்லும் பேருந்தில் ஏறி, ஊரை சேர்ந்தனர். பேருந்து திருவனந்தபுரத்தை நோக்கிச் செல்லுங்கால் எம்மருங்கும் அடர்ந்த தோப்புகள், ஓங்கி உயர்ந்த மலைக்குன்றுகள், பாங்குடன் திகழும் மணல் மேடுகள், பூக்கொத்துகள் குலாவும் குளிர் சோலைகள், குறுக்கும் நெடுக்குமாக வலைப் பின்னல் போன்றுள்ள பாய்ந்து செல்லும் சிற்றாறுகள், கால்வாய்கள் இவற்றை கண்டு களித்தனர்.

ஓங்குமரன் ஓங்கிமலை
ஓங்கிமணல் ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர்
சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ்
சூழலது குன்று[4]

- கம்ப. ஆரணி - அகத்தி, 57

என்று கம்பன் கூறுவதை அறியலாம். அகத்திய முனிவர் ஆசியுடன் வில்லும் வாளும் அம்பும் பெற்றுப் பஞ்சவடியை நோக்கி வரும் இராமனுக்கு பஞ்சவடி அமைந்துள்ள சூழ்நிலையைக் காட்டுகிறது. இப்பாடல், நாகர்கோவிலிலிருந்து சுமார் ஐம்பது கல் தொலைவிலுள்ள திருவனந்தபுரம் வரையிலும் இதே சூழ்நிலைதான். சில இடங்களில் பகலவன் கதிர்களும் உள்புகா நிலையாகும்.

திருவனந்தபுரம் ரயில் நிலையமும் பேருந்து நிலையமும் எதிரெதிராக மிக அமைந்துள்ளன. அந்தப் பக்கத்திலேயே உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் உள்ளன. 1948 - மே மாதத்தில் மக்கட்பேறு ஏற்படாத முன்னர் தங்கியிருந்த 'குமரன்' விடுதியில் தங்கினர். நீராடிச் சிற்றுண்டி அருந்தி வந்த களைப்பைப் போக்கிக் கொண்டனர், மாலை ஐந்து மணி சுமாருக்குத் திருக்கோயில்

அடைந்தனர். திருக்கோயில் திருவாட்டாற்றுத் திருக்கோயில் போலவே சற்று உயரமான இடத்தில் அமைந்துள்ளது. பல படிகள் ஏறியே கோயிலினுள் நுழைதல் வேண்டும். கோயிலின் நாற்புறமும் கனமான கோட்டைச் சுவர்கள் சூழ்ந்துள்ளன. திருக்கோயிலுக்கருகிலேயே திருவிதாங்கூர் அரசர் அரண்மனையும் உள்ளது. அவர் அரண்மனையிலிருந்து திருக்கோயில் வந்து போவதற்குத் தனிச் சுரங்க வழி உண்டு. கோயிலின் உட்பகுதியிலுள்ள பல இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு கருவறையின் முன்புறமுள்ள அர்த்த மண்டபத்தை கண்டனர். இந்த மண்டபத்தின் அடித்தளக் கருங்கல் 20 அடி சதுரத்தைக் கொண்டது; கனம் 2.1 அடி. இம்மண்டபம் ஒற்றைக்கல் மண்டபம் என்று வழங்கப்பெறுகின்றது. இத்தகைய அடித்தளக் கல்லையுடைய மண்டபத்தைத் திருவாட்டாற்றுத் திருக்கோயிலிலும் கண்டனர். கிட்டத்தட்ட இரண்டு கோயில்களும் ஒரே மாதிரி அமைப்பினைக் கொண்டவை. ஆனும் சிற்பங்கள் முதலியவற்றை நோக்கத் திருவாட்டாற்றுக் கோயில் பழைமையுடையதெனத் தோன்றுகின்றது. அங்குப் பெரும்பாலும் கேரள நாட்டுப் பாணி மீதூர்ந்து நிற்கின்றது. திருவனந்தபுரத் திருக்கோயிலில் தமிழ்ப்பண்பாடும் கலந்து மிளிர்வதை காணலாம்.[5]

ஒற்றைக்கல் மண்டபத்திலிருந்து கொண்டு மூன்று திருவாயில்கள் மூலமாகவும் தெற்கு நோக்கிச் சாய்ந்த திருவபிடேகமும் வடக்கு நோக்கிய நீட்டிய திருவடிகளையும் கொண்டு கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் அனந்தன்மீது பள்ளி கொண்டுள்ள அனந்த பத்மநாபனைக் கண்ணாரக் கண்டு வழிபட்டு அவனது திருவருளை பெற்றனர். 'கெடும் இடர் ஆய எல்லாம் கேசவா! என்ன* என்ற நம்மாழ்வாரின் திருவாக்கு நம்

மனத்தில் எழுந்தவாறு எம்பெருமானிடம் விடை பெற்று திரும்பியதை அறியலாம். மறுநாள் காலை உயிர்காட்சிச் சாலை, கோவளம் கடற்கரை குடிநீர்த் திட்டம் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு பிற்பகல் இரண்டு மணிக்கு விடுதிக்கு வந்து உணவை உண்டு சிறிது நேரம் ஓய்வு கொண்டு பேருந்து மூலம் கொல்லத்திற்கு பயணித்தனர். ஏற்கெனவே பேராசிரியர் வருகையைத் தெரிவித்து கோட்டயத்திலுள்ள சீமாட்டித் துணிக்கடைக்கு திரு, வீ. திருவேங்கட ரெட்டியாருக்கு எழுதியுள்ளதையும் கடையில் உள்ளவருக்கு நினைவுபடுத்தினர். பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சார்யார் சுவாமிகள் நூல்கள் மூலம் மலை நாட்டுத் திருப்பதிகளை நான்கு பிரிவுகளாகச் சேவிக்க வேண்டும் என்று அறிந்திருந்தார். அவை திருவண்பரிசாரம் திருவாட்டாறு, திருவனந்தபுரம் இம்மூன்றும் ஒரு பிரிவு; திருவாறன்விளை, திருச்சிற்றாறு, திருக்கடித்தானம் திருவல்லவாழ், திருவண்வண்டூர், திருப்புலியூர் இவை ஆறும் மற்றொரு பிரிவு; திருக்காட்கரையும் திரு. மூழிக்களமும் வேறொரு பிரிவு; திருவித்துவக்கோடும் திருநாவாயும் பிறிதொரு பிரிவு.[6]

இந்த நான்கு பிரிவுகளிலும் உள்ள திவ்விய தேசங்களை மங்களா சாசனம் செய்து அருளினவர் நம்மாழ்வார்; மூன்று பிரிவுகளில் உள்ளவற்றைப் பாடிச் சிறப்பித்தவர் திருமங்கையாழ்வர் ஆவர். ஒரு பிரிவில் உள்ளவற்றை மட்டிலும் போற்றியுரைத்தவர் குலசேகரப் பெருமாள். கடையிலிருந்தவரிடம் இந்த நான்கு பிரிவிலுள்ள திருக்கோயில் விவரங்களை கேட்டு அறிந்தனர்; முதற் பிரிவிலுள்ளவற்றைச் சரியாகச் சேவித்து விட்டதாகவும் கூறினர். இந்த விவரங்களைத் தொலைப்பேசி மூலம் கோட்டயத்திற்குத் தெரிவித்தார்.

கடையிலுள்ள பொறுப்பாளர் உடனே திருவேங்கட ரெட்டியார் கோட்டயம் வருமாறு பணித்தார். நாங்கள் இரவில் கடையருகிலுள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்து மறுநாள் அதிகாலையில் புறப்பட்டுக் கோட்டயம் சென்று கடையில் திரு. ரெட்டியாரைப் கண்டனர். அவர் இரண்டு நாட்கள் எங்களைத் தம் விருந்தினராக வைத்துக் கொண்டார். அவர்கள் முற்பகல் 10 மணிக்கு வந்து அன்று முழுவதும் ஓய்வு எடுத்தனர். கோட்டயம் மேடு பள்ளங்கள் நிறைந்த ஒரு நகரம். மிதிவண்டி அந்த ஊருக்குப் பயன்படாது. ஆட்டோ, டாக்சி தான் எங்கும் காணப்பட்டன. அடுத்த நாள் எங்களைக் காரில் இட்டுச் செல்லும் வண்டியோட்டியை வரவழைத்துப் பேசினார். இரண்டாவது பிரிவிலுள்ள ஆறு திவ்விய தேசங்களும் கோட்டயத்திற்கு 25 கல் சுற்றளவிற்குள் இருப்பதை அறியலாம்.[7] மாலை ஐந்து மணி முதல் வரையிலும் திறந்திருக்கும். அந்த நேரங்களில் இறைவனை தரிசிக்க முடியும். ஆகவே காலத்தை வீணாக்காமல் சுறுசுறுப்பாக இயங்கினர். முற்பகல் திருவாறன்விளை, திருச்செங்குன்றூர், திருக்கடித்தானம், திருவல்லவாழ் என்று நான்கு தலங்களையும் மாலையில் திருவண்வண்டூர், திருப்புலியூர், என்ற இரண்டு தலங்களையும் சேவித்துக் கோட்டயம் வந்து சேர மாலை 7:30 மணியாகின்றது. அடுத்த நாள் சிற்றுண்டிக்குப் பிறகு இருப்பூர்தி நிலையத்திற்கு அவர்களைக் காரில் அனுப்பினார் திருவேங்கடம் ரெட்டியார். அதற்குள் எர்ணாகுளத்தில் தங்கி திருக்காட்கரை, திருமூழிக்களம் என்ற இரண்டு தலங்களையும் சேவிக்க வேண்டும் என திட்டமிட்டனர்.[8]

ஒருநாள் காலை திருக்காட்கரை சென்றனர், இத்திருத்தலம் எர்ணாக்குளத்திலிருந்து சுமார் பத்து கல் தொலைவில் உள்ளது. பேருந்து வசதியுண்டு; ஆனால் அடிக்கடி இல்லை. புதிய இடம் ஆகையால் விசாரித்துக் கொண்டு போவதில் தாமதம். திருக்கோயிலை அடையும் போது முற்பகல் 11 மணிக்கு மேல் ஆகிவிட்டது. கோயில் சாற்றப்பட்டுவிட்டது. 12 மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை காத்திருக்க வேண்டியிருந்தது. மாலை ஐந்து மணிக்குத்தான் தரிசித்தனர், குறிப்பாக நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்த திருத்தலம் என்பது குறிப்பிடதக்கதாகும்.

மறுநாள் காலை திருமூழிக்களம் போய்வர எண்ணுகின்றோம். இந்த ஊர் எர்ணாக்குளம் சோரனூர் இருப்புப் பாதையிலுள்ள இறங்கி பேருந்து மூலம் இவ்வூரை அடைய வேண்டும் என்ற செய்தியை அறிந்து கொண்டு சரியாகக் காலை 7:30 மணிக்குப் புறப்பட்டனர். அங்கு 10 கல் தொலைவு பேருந்தில் சென்று ஓரிடத்தில் இறங்கி 60 கெஜ தூரம் நடந்து திருக்கோயிலை அடைந்தனர். நம்மாழ்வார் இத்தலத்து எம்பெருமானை நாயகி நிலையிலிருந்து தூது விடுவதாக அமைந்த பாசுரத்தால் சேவித்தார். பாசுரங்களில் உள்ளத்தைப் பறிகொடுத்து திருமூழிக்களத்தானையும் மதுரவேணி நாச்சியாரையும் சேவித்தார்.

குருவாயூர் அப்பனைச் சேவிக்க வேண்டும் என்பது திட்டம் அவருக்கு இருந்தது. ஆனால் நீண்ட தூரம் கடக்க வேண்டியிருப்பதால் இருப்பூர்திப் பயணமே சிறந்தது. விரைவு வண்டி யொன்றில் ஏறி திருச்சூர் வந்து சேர்ந்தனர். அங்கிருந்து சுமார் 15 கல் தொலைவு பேருந்தில் பயணம் செய்து குருவாயூரை அடைந்தனர். பலத்த மழையில் மாட்டிக் கொண்டு மிக்க

சிரமத்துடன் வந்து சேர்ந்து தெய்வ சங்கல்பத்தால் மிக்க சிரமத்துடன் தேவஸ்தான விடுதியில் தங்குவதற்கு ஓர் அறை கிடைத்து அதில் தங்குகினர். ஏதோ ஓர் உணவு விடுதியில் உணவு கொண்டு இரவில் ஓய்வு எடுத்து விட்டு மறுநாள் காலை குருவாயூர் அப்பன் சந்தனக் காப்புடன் கிருஷ்ணன் வடிவத்தில் திகழ்ந்தான். அழகெல்லாம் திரண்டு ஓரிடத்தில் இருந்தாற்போன்ற திருமேனி காண்பவரின் உள்ளங்களை கவர்ந்தது. இத்திருக்கோயிலில் துலாபாரப் பிரார்த்தனைக்கும் வழி செய்திருப்பதைக் கண்டனர். கோயிலிலிருந்து திரும்பும்போது கோயிலின் அருகில் பல யானைகளைக் கண்ட காட்சி அவரது மனத்தையும் கவர்ந்தது.[9]

அன்று மறுநாள் காலையில் திருநாவாய் என்ற திவ்விய தேசத்தைச் சேவிக்க நினைத்தனர். அது 25 கல் சோரனூர் - மங்களூர் இருப்பூர்தி வழியில் தொலைவிலுள்ளது. திருநாவாய் ஓர் இருப்பூர்தி நிலையம். நிலையத்திலிருந்து திவ்விய தேசம் 14 கல் தொலைவிலுள்ளது. நடந்து செல்வதைத் தவிர வேறு வழி இல்லை. நடந்து சென்றுதான் சேவித்தனர். நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் இந்த எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பட்டாம்பி என்ற நிலையத்திற்கு அருகே வண்டி வருங்கால் பாரதம் புழா என்ற ஆறும் அதன் கரையிலுள்ள திருவித்துவக் கோட்டம்மான் திருக்கோயிலும் தென்பட்டன. வண்டியிலிருந்த வண்ணம் அந்த அம்மனை வழிபட்டனர். 11:30 மணிக்கு சோரனூர் சென்றடைந்தனர். மாலையில் பேருந்து நிலையம் சென்று 'திருமிற்றக்கோடு' என்ற ஊருக்குப் புறப்பட்டனர். அவ்வூருக்கு அடிக்கடி பேருந்து வசதி உண்டு. அந்த ஊர் சோரனூர்-குருவாயூர் நெடுஞ்சாலையில் சோரனூரிலிருந்து 10 கல் தொலைவில் இருந்தது.

சாலையை ஒட்டி ஊர் இருந்தது. திருமலைக்குப் பேருந்தில் செல்லும்போது கொண்டை ஊசி வளைவுப் பாதையில் பேருந்து செல்லும்போது மலையின் இயற்கைக் காட்சியில் நுகர்ந்தவண்ணம் செல்வதைப் போலவே, சோரனூருக்கும் வித்துவக் கோட்டிற்கும் இடையிலுள்ள ஒரு பெருங்குன்றினை அத்தகைய வளைவுப் பாதையில் அவர் செல்லும்போது மலையின் இயற்கைக் காட்சியில் தோய்ந்த வண்ணம் சென்றார். எங்கோ பிறந்து வளர்ந்த பாரதப் புழா என்ற ஆறு வளைந்து வளைந்து சென்று வித்துவக் கோட்டு அம்மானை நாடி அவன் திருவடிகளை வருடிச் செல்லும் அற்புதக் காட்சியினைக் கண்டு களித்தனர். மலைப் பாதையில் வளைந்து வளைந்து செல்லும் போதெல்லாம் வளைந்து வளைந்து செல்லும் ஆற்றையும் பலமுறை கண்டு வணங்கியதை அறியலாம். [10]

திருவித்துக்கோடு என்ற ஊரில் இறங்கி வலப்புறமாகத் தோப்புகளினிடையே ஒரு சிறு சாலை வழியாக கி.மீ தொலைவிலுள்ள கோவிலை அடைந்தனர். கோயில் பெரிய கோயிலன்று. ஒரே ஒரு பிரகாரத்தைக் கொண்டது. இந்தப் பெருமாள் மிக அழகானவர்! அவர்கள் சென்றபோது சந்தனக்காப்புடன் திகழ்ந்தார். நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கிய திரு முகமண்டலத்துடன் சேவைசாதிக்கும் உய்ய வந்த பெருமாளையும் தாயார் வித்துவக்கோட்டு வல்லி நாச்சியாரையும் சேவித்தனர். குலசேகரப் பெருமாள் மங்களாசாசனம் செய்த பாசுரங்கள் நினைவிற்கு வருகின்றன. சீமன் நாராயணனையன்றித் தமக்கு வேறு சரணமில்லாமையை ஆழ்வார் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக வற்புறுத்திக் கூறியதை அறியலாம்.[11]

1) மலைநாட்டுத் திருப்பதிகள் (13 திருத்தலங்கள்)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
1	திருவண்பரிசாரம்	திருவாழ்மார்பன் கமலவல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	I
2	திருவட்டாறு	ஆதிகேசவப்பெருமாள் மரகதவல்லி	நம்மாழ்வார்	II
3	திருஅனந்தபுரம்	அனந்தபத்மநாபன் ஸ்ரீசைஷஹரிலட்சுமி	நம்மாழ்வார்	II
4	திருவாறன்விளை	திருக்குறளப்பன் பத்மாசனி	நம்மாழ்வார்	II
5	திருச்செங்குன்றூர்	இமையவரப்பன் செங்கமலவள்ளி	நம்மாழ்வார்	II
6	திருக்கடித்தானம்	அற்புத நாராயணன் கற்பகசல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	II
7	திருவல்லவாழ்	கோலப்பிரான் செல்வத் திருக்கொழுந்து நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	22
8	திருவண்வண்டூர்	பாம்பாணையப்பன் கமலவள்ளி நாச்சியார்	நம்மாழ்வார்	II
9	திருப்புலியூர்	மாயப்பிரான் பொற்கொடி நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	12
10	திருகாட்கரை	காட்கரையப்பன்		II

		வாத்ஸல்யவல்லி	நம்மாழ்வார்	
11	திருமூழிக்களம்	திருமூழிக்களத்தான் மதுரவேணி நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	14
12	திருவித்துக்கோடு	உய்யவந்த பெருமாள் வித்துக்கோட்டுவல்லி நாச்சியார்	குலசேகராழ்வார்	10
13	திருநாவாய்	நாராயணன் மலர்மங்கை நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	13

2) தொண்டைநாட்டுத் திருப்பதிகள் (24 திருத்தலங்கள்)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
1	காஞ்சிபுரம்	வரதராஜப்பெருமாள் பெருந்தேவித்தாயார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	7
2	திருவெஃகா	சொன்னவண்ணம்செய்த பெருமாள் கோமளவல்லி	திருமழிசையாழ்வார் பொய்கையாழ்வார், பேயாழ்வார் நம்மாழ்வார், திருமங்கையாழ்வா	15

			ர்	
3	திருவட்டபுயகரம்	ஆதிகேசவப்பெருமாள் அலர்மேல் மங்கை	திருமங்கையாழ்வார் பேயாழ்வார்	12
4	திருநீரகம்	ஜகதீசப்பெருமாள் நிலமங்கைவல்லி	திருமங்கையாழ்வார்	I
5	திருப்பரமேச்சுர விண்ணகரம்	பரமபத நாதன் பைகுந்தவல்லி	திருமங்கையாழ்வார்	10
6	திருப்பாடகம்	பாண்டவ தூதர் ருக்மணி, சத்யபாமா	திருமழிசையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமங்கையாழ்வார்	6
7	திருநிலாத்திங்கள் துண்டம்	நிலாத்திங்கள் துண்டத்தான் நேரொருவரில்லாவல்லி	திருமங்கையாழ்வார்	I
8	திருக்கள்வனூர்	ஆதிவராகப்பெருமாள் அஞ்சிலைவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	I
9	திருவேளுக்கை	முகுந்தநாயகன் வேளுக்கைவல்லி	பேயாழ்வார் திருமங்கையாழ்வார்	4
10	திருத்தண்கா	தீபப்ரகாசர் மரகதவல்லி	திருமங்கையாழ்வார்	2
11	திருப்பவளவண்ணம்	பவளவண்ணப் பெருமாள் பவளவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	I
12	திருப்புட்குளி	விஜயராகவப்பெருமாள்	திருமங்கையாழ்வா	2

		மரகதவல்லி நாச்சியார்	ர்	
13	திருக்கடிகை	யோக நரசிம்மன் அமிருதவல்லித் தாயார்	பேயாழ்வார் திருமங்கையாழ்வார்	4
14	திருவெவ்வுள்	வீரராகப் பெருமாள் கனகவல்லித் தாயார்	திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்	12
15	திருநின்றவூர்	பக்தவத்சலர் என்னைப்பெற்ற தாயார்.	திருமங்கையாழ்வார்	2
16	திருவல்லிக்கேணி	பார்த்தசாரதி ருக்மணி	பேயாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்	12
17	திருநீர்மலை	நீர்வண்ணன் அணிமாமலர் மங்கை	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	20
18	திருவிடவெந்தை	நித்யகல்யாணர் கோமளவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	13
19	திருக்கடன்மல்லை	ஸ்தலசயனப் பெருமாள் நிலமங்கை நாச்சியார்	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	27
20	திருவகீந்திரபுரம்	தெய்வநாயகன் வைகுண்டவல்லி	திருமங்கையாழ்வார்	10
21	திருக்கோவலூர்	திரிவிக்கிரமன்	பூதத்தாழ்வார்	21

		பூங்கோவல் நாச்சியார்	பொய்கையாழ்வார் திருமங்கையாழ்வா ர்	
22	திருவூரகம்	ஊரகத்தான் அமுதவல்லி நாச்சியார்	திருமழிசையாழ்வா ர் திருமங்கையாழ்வா ர்	6
23	திருக்கார் வானம்	கள்வர் பெருமாள் கமலவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வா ர்	I
24	திருக்காரகம்	கருணாகரப் பெருமாள் பத்மாமணி நாச்சியார்	திருமங்கையாழ்வா ர்	1

3) பாண்டியநாட்டுத் திருப்பதிகள் (18 திருத்தலங்கள்)

எ ண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்க ள்
1	திருக்கோட்டீயூர்	உரகமெல்லணையான் திருமாமகள் நாச்சியார்	திருமழிசையாழ்வா ர்பெரியாழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வா ர்	39
2	திருமெய்யம்	சத்யகிரி நாதன் உய்யவந்த நாச்சியார்	திருமங்கையாழ்வா ர்	9

3	திருப்புல்லாணி	கல்யாண ஜகந்நாதன் கல்யாணவல்லி	திருமங்கையாழ்வார்	21
4	திருக்கூடல்	கூடலழகர் மதுரவல்லி	திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார்	2
5	திருமோகூர்	காளமேகப்பெருமாள் மேகவல்லி	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	12
6	திருமாலிருஞ்சோலை	அழகர் சுந்தரவல்லி நாச்சியார்	நம்மாழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் குலசேகராழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார்	128
7	ஸ்ரீவில்லிபுத்தூர்	வடபத்ரசயனர் ஆண்டாள்	பெரியாழ்வார் ஆண்டாள்	2
8	திருத்தண்கால்	அப்பன் அன்னநாயகி	பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார்	5
9	திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி)	ஆதிநாதப்பெருமாள் ஆதிநாதவல்லி	நம்மாழ்வார்	11
10	திருக்கோளூர்	வைத்தமாநிதி கோளுர்வல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	12

11	திருப்பேரை	மகரநெடுங்குழைக்காதவன் குழைக்காதுவல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	11
12	ஸ்ரீவைகுண்டம்	கள்ளப்பிரான் வைகுந்தவல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	2
13	வரகுணமங்கை	விஜயாசனர் வரகுணவல்லி	நம்மாழ்வார்	1
14	திருக்குளந்தை	மாயக்கூத்தன் குளந்தைவல்லி	நம்மாழ்வார்	1
15	திருப்புளிங்குடி	காய்சன வேந்தன் மலர்மகள் நாச்சியார்	நம்மாழ்வார்	12
16	திருத்தொலைவில் லி மங்களம்	தேவபிரான் உபயநாச்சிமார்கள்	நம்மாழ்வார்	11
17	சிரீவரமங்கை (வானமாமலை)	தெய்வநாயகன் சிரீவரமங்கை	நம்மாழ்வார்	11
18	திருக்குறுங்குடி	வைஷ்ணவ நம்பி குறுங்குடிவல்லி நாச்சியார்	நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமழிசையாழ்வா ர் திருமங்கையாழ்வா ர்	40

4) வடநாட்டுத் திருப்பதிகள் (12 திருத்தலங்கள்)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
1	திருவேங்கடம்	திருவேங்கடமுடையான் அல்மேல்மங்கைத்தாயார்	நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் ஆண்டாள் குலசேகராழ்வார் திருப்பாணாழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார் பொய்கையாழ்வார்	202
2	சிங்கவேள்குன்றம்	நரசிம்மன் இலட்சுமி	திருமங்கையாழ்வார்	10
3	திருவயோத்தி	சக்ரவர்த்தி திருமகன் சீதா பிராட்டி	குலசேகராழ்வார் பெரியாழ்வார் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார்	13
4	திருநைமிசாரணியம்	தேவராஜன் ஸ்ரீஹரிலட்சுமி	திருமங்கையாழ்வார்	10

5*	சாளக்கிராமம் நேபாளம்	ஸ்ரீமூர்த்திப்பெருமாள் ஸ்ரீதேவி நாச்சியார்	திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	12
6*	திருவதரியாச்சிரமம் (பத்ரிநாத்)	பத்ரி நாராயணன் அரவிந்தவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	22
7	திருக்கண்டங்கடிநகர்	நீலமேகப்பெருமாள் புண்டரீகவல்லித்தாயாதர்	பெரியாழ்வார்	11
8*	திருப்பிரிதி ஜோஷிமட் (Joshimath) அல்லது நந்தபிரயாக்	பரமபுருஷன் பரிமளவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
9	திருவடமதுரை	கோவர்த்தநேசன் சத்யபாமை நாச்சியார்	ஆண்டாள் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	50
10	பிருந்தாவனம்	கிருஷ்ணன் ருக்மணி		
11	திருத்துவாரகை	கல்யாண நாராயணன் கல்யாண நாச்சியார்	ஆண்டாள் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	13
12	திருவாய்ப்பாடி (கோகுலம்)	நவமோகன கிருஷ்ணன் ருக்மிணி பிராட்டி	ஆண்டாள் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	22

5) சோழநாட்டுத் திருப்பதிகள் - 1(20 திருத்தலங்கள்)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
1	திருவரங்கம்	இரங்கநாயகி இரங்கநாயகன்	பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் குலசேகராழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணாழ்வார்	247
2	திருஉறையூர்	அழகிய மணவாளன் வாஸலட்சுமி	குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார்	2
3	திருக்கரம்பனூர்	புருஷோத்தமன் பூர்வாதேவி	திருமங்கையாழ்வார்	1
4	திருவெள்ளறை	புண்டரீகாட்ஷன்	பெரியாழ்வார்	24

		பங்கயச்செல்வி	திருமங்கையாழ்வார்	
5	அன்பில்	வடிவழகிய நம்பி அழகியவல்லித் தாயார்	திருமழிசையாழ்வார்	1
6	திருப்பேர் நகர்	அப்பக்குடத்தான் இந்திராதேவி	பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார்	33
7	தஞ்சை மாமணிக்கோயில்	நீலமேகப் பெருமாள் செங்கமலவல்லி நரசிம்மர் தஞ்சை நாயகி மணிக்குன்றப் பெருமாள் அம்புஜவல்லி	திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் பூதத்தாழ்வார்	5
8	திருக்கண்டியூர்	கமலநாதன் கமலவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	1
9	திருக்குடந்தை	சாரங்கபாணி கோமளவல்லி	பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள்	51
10	திருவிண்ணகர்	ஒப்பிலியப்பன் பூமிதேவி நாச்சியார்	பேயாழ்வார் நம்மாழ்வார்	47

			திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார்	
11	நந்திபுர விண்ணகரம்	விண்ணகரப் பெருமாள் செண்பகவல்லி	திருமங்கையாழ்வார்	10
12	திருநறையூர்	நறையூர் நம்பி நம்பிக்கை நாச்சியார்	திருமங்கையாழ்வார்	110
13	திருச்சேறை	சாரநாதன் சாரநாயகி	திருமங்கையாழ்வார்	13
14	திருவெள்ளியங்குடி	கோலவில்லி ராமன் மரகதவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
15	திருப்புள்ளம் பூதங்குடி	வல்வில் ராமன் பொற்றாமரையாள்	திருமங்கையாழ்வார்	10
16	திருஆதனூர்	ஆண்டளக் குமையன் ஸ்ரீரங்கநாயகியார்	திருமங்கையாழ்வார்	1
17	திருக்கவித்தலம்	கஜேந்திரவரதர் ரமாமணிவல்லி	திருமங்கையாழ்வார்	1
18	திருக்கண்ணங்குடி	ஷயாமளமேனிப் பெருமாள் அரவிந்தவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
19	திருநாகை	ஸௌந்தரியராஜன் ஸௌந்தரியவல்லி	திருமங்கையாழ்வார்	10
20	திருக்கண்ணமங்கை	பக்தவத்ஸலப் பெருமாள் அபிஷேகவல்லித் தாயார்	திருமங்கையாழ்வார்	14

6) சோழநாட்டுத் திருப்பதிகள் - 2 (20 திருத்தலங்கள்)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
1	சித்திரக்கூடம்	கோவிந்தராஜர் புண்டரீகவல்லி	திருமங்கையாழ்வார் குலசேகராழ்வார்	32
2	காழிச்சீராம விண்ணகரம்	தாடாளன் மட்டவிழுங்குழலி	திருமங்கையாழ்வார்	10
3	திருஇந்தளூர்	சுகந்தவநநாதன் சந்திரசாம விமோசனவல்லி	திருமங்கையாழ்வார்	11
4	தலைச்சங்க நாண்மதியம்	நாண்மதியப்பெருமாள் தலைச்சங்க நாச்சியார்	திருமங்கையாழ்வார்	2
5	திருச்சிறுபுலியூர்	அருமாகடல் திருமாமகள் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
6	திருக்கண்ணபுரம்	சௌரிராஜன் கண்ணபுரநாயகி	குலசேகராழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார்	128
7	திருவழுந்தூர்	ஆமருவியப்பன் செங்கமலவல்லி	திருமங்கையாழ்வார்	45
8	திருவெள்ளக்குளம்	கண்ணன் நாராயணன் பூவார் திருமகள்	திருமங்கையாழ்வார்	10

9	திருத்தேவனார்த் தொகை	தெய்வநாயகப் பெருமாள் கடல்மகள் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
10	திருவண்புருடோத் தமம்	புருஷோத்தமர் புருஷோத்தம நாயகி	திருமங்கையாழ்வார்	10
11	வைகுந்த விண்ணகரம்	வைகுந்தநாதன் வைகுந்தவல்லி	திருமங்கையாழ்வார்	10
12	செம்பொன் செய்கோயில்	பேரருளாளன் அல்லிமாமலர் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
13	திருத்தெற்றியம்பலம்	செங்கண்மால் செங்கமலவல்லி	திருமங்கையாழ்வார்	10
14	அரிமேய விண்ணகரம்	குடமாட கூத்தர் அம்ருதகடவல்லி	திருமங்கையாழ்வார்	10
15	திருவாலி திருநகரி	லட்சுமிநரஸிம்மன் அம்ருதகடவல்லி வேதராஜன் அமிருதவல்லி	திருமங்கையாழ்வார் குலசேகராழ்வார்	42
16	திருமணிமாடக்கோயில்	நந்தாவிளக்குப் பெருமாள் புண்டரீகவல்லி	திருமங்கையாழ்வார்	12
17	திருக்கூடலூர்	வையங்காத்தபெருமாள் பத்மாஸநவல்லி	திருமங்கையாழ்வார்	10
18	திருமணிக்கூடம்	மணிக்கூடநாயகன் திருமகள் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
19	திருக்காவளம்பாடி	கோபாலகிருஷ்ணன் செங்கமல நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10

20	திருப்பார்த்தன்பள்ளி	தாமரையாள் கேள்வன் தாமரை நாயகி	திருமங்கையாழ்வார்	

7) விண்ணுலக திருப்பதிகள் - (2 திருத்தலங்களா)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
1	திருப்பாற்கடல்	பாற்கடல் வண்ணன் (சீராப்திநாதன்) , கடல் மகள் நாச்சியார் (லட்சுமி தேவி)	பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார்	33
2	திருநாடு (பரமபதம்)	பரமபத நாதன் பெரிய பிராடியார்	நம்மாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார் பேயாழ்வார் பொய்கையாழ்வார்	18

பேரா. ந. சுப்புரெட்டியார் செல்லாத திருத்தலங்கள்

திருத்துவாரகை, திருவாய்ப்பாடி(கோகுலம்), திருப்பாற்க்கடல், பரமபதம் ஆகும்.

தொகுப்புரை

பேரா. ந. சுப்புரெட்டியாரின் திவ்விய தேசப் பயணங்கள் எனும் மூன்றாம் இயலில், வைணவ சமயத்தின் புனிதத் தலங்களான திவ்யதேசங்களின் பயணத்தையும், அவற்றின் வரலாற்றுப் பின்னணியையும் விரிவாக எடுத்துரைக்கின்றது. சோழநாடு, பாண்டிநாடு, தொண்டைநாடு ஆகிய மூன்று முக்கியப் பகுதிகளிலும் அமைந்துள்ள தலங்கள் குறித்தும், இறை வடிவங்களின் சிறப்புகள், பக்தர்களின் அனுபவங்கள் ஆகியவை பதிவு செய்யபட்டுள்ளது.சோழநாட்டுத்தலங்களான திருகண்டியூர், தஞ்சை மாமணிக்கோயில், திருப்பேர்நகர் (கோவிலடி), திருகண்ணபுரம், திருவிண்ணகர், நறையூர் நம்பி, சாரங்கபாணி, சாராநாத பெருமாள், திருவயிந்திபுரம் போன்ற தலங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமான வரலாறுகளையும், இறையருளின் சிறப்புகளையும் கொண்டுள்ளன. இத்தலங்கள் வைணவ சமயத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவை என்பதையும், பாண்டிநாட்டு தலங்களான திருக்கோட்டியூர், எந்தை திருப்புல்லாணி, திருக்கூடல் (மதுரை) போன்றவை, பக்தியின் ஆழமான வெளிப்பாடுகளையும், இறைவன் பக்தர்களுக்கு அருள்புரியும் விதம் இத்தலங்களின் வழியாக தெளிவாக வெளிப்படுகிறது. தொண்டைநாட்டுத் தலங்களில் காஞ்சிபுரம் முக்கிய இடம் பெற்றுள்ளது. “பலரும் போற்றும் காஞ்சி” எனப் போற்றப்படுவதற்குக் காரணமான ஆன்மிகச் செல்வத்தை உடையதாகும். வைகுண்டப் பெருமாள், அல்லிகேணி, நீர்மலை நீர்வண்ணன், திருஇடஎந்தை எம்பெருமான், கடல் மல்லை, திருஅயிந்திரபுரம், திருகோவிலூர் போன்ற தலங்கள் ஒவ்வொன்றும் தலவரலாற்றின் மூலம் இறைமகிமையை எடுத்துரைக்கின்றன.

இத்தலங்கள் அனைத்தும் வைணவப் பாரம்பரியத்தின் வளமையை உணர்த்துகின்றன.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் இத்தலங்களை நேரில் தரிசித்து, அவற்றின் சிறப்புகளை ஆழமாக உணர்ந்து எழுதியிருப்பது இவ்வியலின் நம்பகத்தன்மையையும், அனுபவச் செறிவையும் அதிகரிக்கின்றது. திவ்விய தேசப் பயணங்கள் பற்றிய இவ்வியல், வைணவ சமயத்தின் தலபாரம்பரியத்தையும், இவ்வியலில் புலப்படுத்தபட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1 ந. சுப்புரெட்டியார் - நினைவுக் குமிழிகள் – IV - பக்.428

2 நம்மாழ்வார் - திருவாய்மொழி - 10.6:9

3 அமலானாதிபிரான் – 10

4 கம்பர்- கம்பராமாயணம் - ஆரண்ய காண்டம் .57

5 ந. சுப்புரெட்டியார் - நினைவுக் குமிழிகள் – IV - பக். 429

6 மேலது பக்.430

7 மேலது பக்.431

8 மேலது பக்.432

9 மேலது பக்.435

10 மேலது பக்.431

11 மேலது பக்.439

இயல் - 4

பேரா.ந. சுப்புரெட்டியாரின் சைவ வைணவப் பங்களிப்புகள் – ஒப்பீடு

இயல் - 4

பேரா.ந. சுப்புரெட்டியாரின் சைவ வைணவப் பங்களிப்புகள் - ஒப்பீடு

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் சைவப் பங்களிப்புகள் மற்றும் வைணவப் பங்களிப்புகள் பற்றி ஆராய்ந்து எச்சமயத்திற்கு மிகுதியான பங்களிப்புகள் வழங்கியுள்ளார் என்பது பற்றியும், பேராசிரியரின் சைவ நூல்கள் பற்றியும், வைணவ நூல்கள் பற்றியும், ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

பேரா. ந. சுப்புரெட்டியார் சைவ சமயம் பற்றியும் வைணவ சமயம் பற்றியும் பல நூல்களை எழுதியுள்ளார். சைவத் திருத்தலங்களுக்கும் வைணவ திவ்ய தேசங்களுக்கும் பயணம் மேற்கொண்டு சிவபெருமானையும் திருமாலையும் வழிபட்டுள்ளார் என்பதை அவரது நினைவுக்குமிழிகள் வாயிலாக அறிய முடிகிறது. தமிழ் மொழியின் சிறப்புகள் பற்றியும் அறிவியல், விஞ்ஞானம் சார்ந்த நூல்கள் பற்றியும் பல நூல்களையும் ஆய்வு கட்டுரைகளையும் தமிழ் உலகிற்கு வழங்கியதோடு சமயங்களுக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளார். தமிழ் சமய இலக்கிய வரலாற்றில் சைவமும் வைணவமும் மிக முக்கியமான இரண்டு ஆன்மீக மரபுகளாக விளங்குகின்றன. இவ்விரு சமயங்களும் தமிழ்ச் சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கை, பண்பாடு, இலக்கியம், கலை, கோயில் மரபுகள் ஆகிய அனைத்திலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பக்தி இயக்கத்தின் மூலம் பொதுமக்களிடையே ஆன்மீக உணர்வை வளர்த்ததோடு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு செய்துள்ளன. இந்த இரு சமயங்களின் தன்மைகள், ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை ஆராய்ந்து

விளக்கிய தமிழ் அறிஞர்களில் பேராசிரியர் சுப்புரெட்டியார் குறிப்பிடத்தக்கவர்.

அவரது ஆய்வுகள் சைவமும் வைணவமும் தமிழ் பண்பாட்டின் இரு பெரும் தூண்களாக விளங்குகின்றன என்பதை தெளிவுபடுத்துகின்றன. சமய இலக்கியங்கள், பக்தி மரபுகள், தத்துவக் கருத்துகள் மற்றும் கோயில் மரபுகள் ஆகியவற்றின் மூலம் இந்த இரு சமயங்களும் தமிழ்ச் சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ளன. சைவ சமயத்தைப் பற்றிய அவரது ஆய்வுகள் பல முக்கிய நூல்களாக வெளிவந்துள்ளன. குறிப்பாக சைவ சமய விளக்கு, சைவ சித்தாந்தம் ஒரு அறிமுகம், சைவமும் தமிழும், ஞானசம்பந்தர், தம்பிரான் தோழன், நாவுக்கரசர், மாணிக்கவாசகர், மூவர் தேவாரம் போன்ற நூல்கள் சைவ சமயத்தின் தத்துவம், பக்தி மரபு மற்றும் இலக்கியச் செழுமையை விளக்குகின்றன.

பேரா.ந. சுப்பு ரெட்டியார் எழுதிய சைவ நூல்களின் கருத்து பகுப்பாய்வு:

தமிழ் சமய இலக்கிய ஆய்வில் முக்கிய பங்கு வகித்த அறிஞர்களில் பேரா. ந. சுப்பு ரெட்டியார் குறிப்பிடத்தக்கவர். சைவ சமயத்தின் வரலாறு, தத்துவம், பக்தி மரபு மற்றும் தமிழ் இலக்கியத்துடன் அதன் தொடர்பு ஆகியவற்றை விரிவாக ஆராய்ந்து பல நூல்களை எழுதியுள்ளார். குறிப்பாக சைவ சமய விளக்கு, சைவ சித்தாந்தம் ஒரு அறிமுகம், சைவமும் தமிழும், ஞானசம்பந்தர், தம்பிரான் தோழன், நாவுக்கரசர், மாணிக்கவாசகர், மூவர் தேவாரம் போன்ற நூல்கள் சைவ சமயத்தின் பல்வேறு பரிமாணங்களை விளக்கும் முக்கிய ஆய்வு நூல்களாகும். இந்நூல்களின் கருத்துகளை ஆராய்வது சைவ சமயத்தின்

அடிப்படை நோக்கங்களையும் தமிழ் சமய இலக்கிய வளர்ச்சியையும் தெளிவுபடுத்துகின்றன.

சைவ சமய விளக்கு

சைவ சமய விளக்கு என்ற நூலில் சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் பேரா. ந. சுப்பு ரெட்டியார் விளக்குகிறார். சைவ சமயம் மனிதனை உயர்ந்த ஆன்மீக நிலைக்கு கொண்டு செல்லும் வழிமுறைகளை கூறும் ஒரு ஆன்மீக மரபாக விளங்குகிறது என்று அவர் வலியுறுத்துகிறார். சிவபெருமான் பரம்பொருளாகக் கருதப்படுகிறார்; அவர் உலகின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் மூல காரணமாக விளங்குகிறார். மனிதன் இறைவனை அடைவதற்கான முக்கிய வழி பக்தி மற்றும் அறநெறி வாழ்க்கை என்பதையும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

சைவ சமயம் தமிழர்களின் ஆன்மீக வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்ற சமயமாகும். சிவபெருமானை பரம கடவுளாக ஏற்றுக் கொண்டு பக்தி, ஒழுக்கம் மற்றும் ஆன்மீக வாழ்வை வலியுறுத்தும் சமயமாக சைவம் விளங்குகிறது. இந்த சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள், வழிபாட்டு முறைகள் மற்றும் அதன் சிறப்புகளை விளக்கும் நூலாக ந. சுப்புரெட்டியார் எழுதிய “சைவ சமய விளக்கு” விளங்குகிறது.[1]

சைவ சமயத்தின் பொருள்

“சைவம்” என்பது சிவபெருமானை முதன்மை கடவுளாக ஏற்றுக் கொண்டு அவரை வழிபடும் சமயமாகும். சிவபெருமான் உலகின் படைப்பவரும் காப்பவரும் என்று சைவ சமயம் கூறுகிறது. சைவ

சமயம் மனிதன் இறைவனை பக்தியுடன் வழிபட்டு ஆன்மீக உயர்வு பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

சைவ சமயத்தின் அடிப்படை கொள்கைகள்

சைவ சமயத்தின் முக்கியமான கொள்கைகள் பதி, பசு, பாசம் என்ற மூன்று கருத்துகளின் அடிப்படையில் அமைந்துள்ளன.

பதி – சிவபெருமான், உலகின் உயர்ந்த இறைவன்.

பசு – உயிர்கள் அல்லது ஆன்மாக்கள்.

பாசம் – உயிர்களை கட்டிப்போடும் பந்தங்கள்.

உயிர்கள் பாசத்தால் கட்டுப்பட்டிருப்பதால் இறைவனை முழுமையாக உணர முடியாது. இறைவனின் அருளால் இந்த பாசம் நீங்கி உயிர்கள் விடுதலை பெறுகின்றன.[2]

சைவ சமயத்தின் வழிபாட்டு முறைகள்

சைவ சமயத்தில் இறைவனை வழிபடும் பல முறைகள் உள்ளன. கோவில்களில் சிவலிங்கத்தை வழிபடுவது முக்கியமான வழிபாடாகும். மேலும், தேவாரப் பாடல்கள், திருவாசகம் போன்ற பக்திப் பாடல்களைப் பாடுவதும் சைவ வழிபாட்டின் ஒரு பகுதியாகும். இந்த வழிபாட்டு முறைகள் மனிதனின் மனதை தூய்மைப்படுத்தி இறைவனின் அருளைப் பெற உதவுகின்றன.[3]

சைவ சமயம்

சைவ சமயம் மனித வாழ்க்கையில் நல்லொழுக்கத்தை வலியுறுத்துகிறது. உண்மை, கருணை, அன்பு, தாழ்மை போன்ற பண்புகள் மனிதனின் வாழ்க்கையில் முக்கியமானவை என்று கூறுகிறது. மனிதன் பிறருக்கு உதவி செய்து, நல்ல வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நெறியையும் சைவ சமயம் எடுத்துரைக்கிறது.[4]

சைவ சமயத்தின் முக்கியத்துவம்

பேரா.ந. சுப்புரெட்டியார் தனது நூலில் சைவ சமயம் தமிழர்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கம் செலுத்தியுள்ளது என்று கூறுகிறார். சைவ சமயம் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்துள்ளது. தேவாரம், திருவாசகம் போன்ற சைவ நூல்கள் தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்புகளாக விளங்குகின்றன.[5]

பேரா.ந. சுப்புரெட்டியார் எழுதிய “சைவ சமய விளக்கு” நூல் சைவ சமயத்தின் அடிப்படை கொள்கைகள், வழிபாட்டு முறைகள் மற்றும் அதன் சிறப்புகளை விளக்கும் முக்கியமான நூலாகும். இந்த நூல் மூலம் சைவ சமயத்தின் ஆன்மீக சிந்தனைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் தெளிவாக அறிய முடிகிறது. சைவசமயம் மனிதனை நல்லொழுக்கத்துடன் வாழச் செய்து இறைவனை அடையும் பாதையை காட்டும் உயர்ந்த சமயமாக விளங்குகிறது.

சைவ சித்தாந்தம் – ஒரு அறிமுகம்

இந்த நூலில் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்களை பேரா.ந. சுப்புரெட்டியார் எளிய முறையில் விளக்குகிறார். சைவ சித்தாந்தத்தில் “பதி, பசு, பாசம்” என்ற மூன்று முக்கிய கருத்துக்கள் இடம்பெறுகின்றன. பதி என்பது இறைவன்; பசு என்பது உயிர்; பாசம் என்பது உயிரை கட்டிப்பிடித்திருக்கும் பந்தம். மனிதன் இந்த பாச பந்தங்களிலிருந்து விடுபட்டு இறைவனுடன் இணையும் நிலையை அடைவதே முக்தி என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. இந்த தத்துவத்தை தெளிவாக எடுத்துரைப்பதே இந்த நூலின் முக்கிய நோக்கமாகும்.

சைவ சமயத்தின் தத்துவ அடிப்படையாக விளங்குவது சைவ சித்தாந்தம் ஆகும். மனிதன், உலகம், இறைவன் ஆகியவற்றின்

உண்மையான தன்மையை விளக்கும் உயர்ந்த தத்துவமாக சைவ சித்தாந்தம் கருதப்படுகிறது. பேரா.ந. சுப்புரெட்டியார் அவர்கள் தனது "சைவ சித்தாந்தம்" என்ற நூலில் இந்த தத்துவத்தின் முக்கியக் கருத்துகள், அடிப்படை கொள்கைகள் மற்றும் அதன் சிறப்புகளை எளிமையாக விளக்குகிறார்.

"சைவ சமயம், சாத்திரங்கள் வளத்தால் செழித்தது;

வைணவ சமயம், உரை வளத்தால் செழித்தது." என்று மக்களிடையே வழங்கும் மரபு ஒன்று உண்டு. ஊன்றி நோக்கினால் வைணவத்திலும் சாத்திரங்களுக்குக் குறைவில்லை. 'அஷ்டா தச இரகசியங்கள், 'தேசிகப் பிரபந்தம்' (தமிழ்க் கவிதைகளாலானது) அவர்தம் 'இரகசியத் திரய சாரம் 2 (திரயம்-மூன்று) என்றனவும் உள்ளன. ஆனால் திருவாய்மொழிக்கு அமைந்துள்ள, மணிப்பிரவாள நடையிலமைந்த 'உரைவளம் போல்' தேவார திருவாசகங்கட்கும், பிற திருமுறைகட்கும் அமையவில்லை என்று சொல்லி வைக்கலாம்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு அவை:

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞான போதம்
4. சிவஞான சித்தியார்
5. இருபா இருபஃது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினா வெண்பா

10. போற்றிப் பஃறொடை வெண்பா.
11. கொடிக்கவி
12. நெஞ்சு விடுதூது
13. உண்மை நெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்[6]

சைவ சித்தாந்தத்தின் பொருள்

"சித்தாந்தம்" என்பது இறுதி உண்மை அல்லது நிலையான முடிவு என்று பொருள். சைவ சித்தாந்தம் என்பது சிவபெருமானை பரம உண்மையாக ஏற்றுக்கொள்ளும் தத்துவமாகும். இந்த தத்துவம் மனிதன் இறைவனை அடைந்து ஆன்மீக விடுதலை பெற வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்துகிறது. சைவ சித்தாந்தம் வாழ்க்கையின் உண்மையை விளக்கும் உயர்ந்த ஆன்மீக சிந்தனையாகும்.

பதி, பசு, பாசம்

சைவ சித்தாந்தத்தின் அடிப்படை மூன்று கருத்துகள் பதி, பசு, பாசம் ஆகும்.

பதி – இறைவன் (சிவபெருமான்). அவர் உலகின் படைப்பாளரும் காப்பவரும் ஆவார்.பசு – உயிர்கள் அல்லது ஆன்மாக்கள்.

பாசம் – உயிர்களை கட்டிப்போடும் பந்தங்கள்.[7]

பசு எனப்படும் உயிர்கள் பாசத்தின் காரணமாக இறைவனை உணர முடியாமல் இருக்கின்றன. இறைவனின் அருளால் அந்த பாசம் நீங்கி உயிர்கள் விடுதலை பெறுகின்றன.

மூன்று மலங்கள்

சைவ சித்தாந்தத்தில் உயிர்களை கட்டிப்போடும் மூன்று முக்கியமான மலங்கள் கூறப்படுகின்றன. அவை:

ஆணவம் – அறியாமை மற்றும் அகம்பாவம்

கன்மம் – செயல் மற்றும் அதன் விளைவு

மாயை – உலகத்தின் மாயையான தன்மை[8]

இந்த மூன்று மலங்களின் காரணமாக உயிர்கள் பிறப்பு இறப்பு சுழற்சியில் சிக்கிக் கிடக்கின்றன. இறைவனின் அருளால் இந்த மலங்கள் நீங்கி உயிர்கள் விடுதலை பெறுகின்றன.

இறைவனை அடையும் வழி

சைவ சித்தாந்தம் மனிதன் இறைவனை அடைவதற்கான நான்கு வழிகளை கூறுகிறது:

சரியம் – இறைவனை சேவிக்கும் நிலை

கிரியம் – வழிபாடு மற்றும் பூஜை

யோகம் – தியானம் மற்றும் மனக்கட்டுப்பாடு

ஞானம் – இறைவனை உணரும் உயர்ந்த நிலை

இந்த நான்கு நிலைகளின் மூலம் மனிதன் ஆன்மீக உயர்வு பெற்று இறைவனை அடைய முடியும் என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது.[9]

சைவ சித்தாந்தத்தின் முக்கியத்துவம்

பேரா.ந. சுப்புரெட்டியார் தனது நூலில் சைவ சித்தாந்தம் தமிழ் சமய சிந்தனையில் மிக முக்கியமான இடம் பெற்றது என்று கூறுகிறார். இத் தத்துவம் மனித வாழ்க்கையின் உண்மையை விளக்குவதோடு நல்லொழுக்கமான வாழ்க்கையை நடத்த வழிகாட்டுகிறது. மேலும் சைவ சித்தாந்தம் மனிதன் இறைவனின் அருளை நாடி வாழ வேண்டும் என்ற ஆன்மீக சிந்தனையை வலியுறுத்துகிறது. பேரா.ந. சுப்புரெட்டியார் எழுதிய “சைவ

சித்தாந்தம்" நூல் சைவ சமயத்தின் தத்துவ அடிப்படைகளை விளக்கும் முக்கியமான நூலாகும். இந்த நூல் மூலம் சைவ சித்தாந்தத்தின் முக்கியக் கருத்துகள், பதி-பசு-பாசம், மூன்று மலங்கள் மற்றும் இறைவனை அடையும் வழிகள் ஆகியவை தெளிவாக அறிய முடிகிறது. மேலும் சைவ சித்தாந்தம் மனிதன் ஆன்மீக உயர்வு பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் உயர்ந்த தத்துவமாக விளங்குகிறது.[10]

சைவமும் தமிழும்

சைவமும் தமிழும் என்ற நூலில் சைவ சமயம் தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு செய்த பங்களிப்பை பேரா.ந. சுப்புரெட்டியார் விளக்குகிறார். பக்தி இயக்கத்தின் மூலம் சைவ சமயம் பொதுமக்களிடையே பரவியது. இதன் விளைவாக தமிழ் மொழியில் பல பக்திப் பாடல்கள் உருவானது. குறிப்பாக திருமுறை இலக்கியங்கள் தமிழ் மொழியின் செழுமையை உயர்த்தியதை அறியலாம். கோயில் வழிபாடு, திருவிழாக்கள், சமய பாடல்கள் ஆகியவற்றின் மூலம் தமிழ் மொழி மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் நெருங்கிப் பிணைந்தது.

இவ்வாறு சைவ மற்றும் வைணவ சமய நூல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பீட்டு ஆய்வு, தமிழ்ச் சமய இலக்கியத்தின் செழுமையையும் அதன் ஆன்மீகப் பாரம்பரியத்தையும் வெளிப்படுத்துகிறது. இந்த ஆய்வு தமிழ்ச் சமய மரபுகளின் ஒற்றுமையையும் அதன் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்ள உதவும் ஒரு முக்கிய முயற்சியாக அமைந்துள்ளது.

பேரா. ந. சுப்புரெட்டியார் தமிழறிஞராகவும், சமய இலக்கிய ஆய்வாளராகவும் விளங்கியவர். அவர் எழுதிய நூல்களின் பட்டியலை நோக்கினால், வைணவமும் சைவமும் ஆகிய இரு சமயங்களையும் சமநிலையுடன் ஆய்வு செய்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. எனினும், அவர் எந்த சமயத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளார் என்பது குறித்து ஆராய்ந்தால், பல்வேறு அடுக்குகளில் பதில் காண முடிகிறது.

நூல்களின் அளவு மற்றும் விரிவு

முதலில், அவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, வைணவ சமயத்தைக் குறித்து எழுதிய நூல்கள் அதிகமாக உள்ளன.

வைணவ நூல்கள்

அண்ணல் அனுமன், அர்த்த பஞ்சகம், ஆழ்வார்களின் ஆராமுது, கலியன் குரல், காஞ்சி பிரதிவாதி பயங்கரம், கம்பனின் மக்கள் குரல், சடகோபன் செந்தமிழ், சோழ நாட்டுத் திருப்பதிகள் (பாகம் 1 & 2), திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும், தொண்டை நாட்டு திருப்பதிகள், பரகாலன் பைந்தமிழ், மலைநாட்டு திருப்பதிகள், வடநாட்டு திருப்பதிகள், வடவேங்கடமும் திருவேங்கடமும், விட்டுசித்தன் விரித்த தமிழ், வைணவமும் தமிழும், வைணவ உரைவளம், வைணவ புராணங்கள் போன்றவை.

சைவ சமய விளக்கு, சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம், ஞானசம்பந்தர், தம்பிரான் தோழன், நாவுக்கரசர், மாணிக்கவாசகர், மூவர் தேவாரம், சைவமும் தமிழும். இதனால், எண்ணிக்கையிலும், ஆய்வின் பரப்பிலும் வைணவ நூல்கள் அதிகம் என்பதால், அவர் வைணவ சமயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என முதன்மையாகக் கூறலாம்.

ஆழ்வார்கள் பற்றிய விரிவான ஆய்வு (ஆழ்வார்களின் ஆராமுது, சடகோபன் செந்தமிழ்)

திவ்யதேசங்கள் பற்றிய பன்முகமான விளக்கங்கள் (சோழ, தொண்டை, மலை, வடநாட்டு திருப்பதிகள்)

வைணவ தத்துவம் (அர்த்த பஞ்சகம்)

வைணவ புராணங்கள், உரைவளம் போன்ற ஆழமான கருத்தாய்வுகள்

இதனால், அவர் வைணவ சமயத்தை வெறும் பக்தி நோக்கில் மட்டுமல்லாமல், தத்துவம், வரலாறு, புவியியல், இலக்கியம் ஆகிய பல துறைகளில் விரிவாக அணுகியுள்ளார்.

சைவ நூல்கள்

நாயன்மார்கள் வாழ்க்கை (ஞானசம்பந்தர், நாவுக்கரசர், மாணிக்கவாசகர்)

சைவ சித்தாந்த அடிப்படை (சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்)

தேவாரம் மற்றும் பக்தி இலக்கியம் (மூவர் தேவாரம்)

சைவ நூல்களும் முக்கியமானவை என்றாலும், அவை பெரும்பாலும் அறிமுகம் மற்றும் சுருக்கமான விளக்கங்களாகவே அமைந்துள்ளன.

பேரா. ந. சுப்புரெட்டியார் வைணவ சமயத்தைப் பற்றிய ஆய்வுகள்:

பெரிய அளவிலான திட்டமிட்ட ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

திவ்யதேசங்களைப் பிரித்து (சோழ, தொண்டை, மலை, வடநாடு) தனித்தனியாக ஆய்வு செய்துள்ளார்.

ஆழ்வார் பாசுரங்கள், வைணவ சித்தாந்தம், தமிழ் இலக்கிய உறவு ஆகியவற்றை இணைத்து ஆராய்ந்துள்ளார்.

சைவ சமய ஆய்வு

முக்கிய நாயன்மார்கள் மற்றும் சித்தாந்த அடிப்படைகளை மட்டும் எடுத்துக்காட்டாக வழங்கியுள்ளார்.

விரிவான பகுதி ஆய்வுகள் (உதா: திருத்தல வகைப்பாடு) குறைவாக உள்ளன.

தமிழ் இலக்கியத்துடன் இணைப்பு

வைணவ நூல்களில், தமிழ் இலக்கியத்துடன் உள்ள தொடர்பை அவர் ஆழமாக எடுத்துரைக்கிறார்:

“திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்”

“வைணவமும் தமிழும்”

“விட்டுசித்தன் விரித்த தமிழ்”

இந்நூல்கள் மூலம், வைணவம் தமிழ் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது என்பதை வலியுறுத்துகிறார். சைவ நூல்களிலும் "சைவமும் தமிழும்" போன்ற நூல் உள்ளது. ஆனால், வைணவத் தொடர்பான தமிழ் ஆய்வுகள் அதிகமாகவும் விரிவாகவும் உள்ளன.

சமநிலை உணர்வு

இவ்வளவு இருந்தாலும், ந. சுப்பு ரெடியார்:

சைவ சமயத்தைப் புறக்கணிக்கவில்லை

இரு சமயங்களையும் தமிழின் இரு கண்கள் போலக் கருதி அணுகியுள்ளார்

சமய விரோதம் இல்லாமல், இலக்கிய நோக்கில் ஆய்வு செய்துள்ளார்

அதாவது, அவர் ஒரு சமய சார்புடைய எழுத்தாளர் அல்ல; மாறாக ஆய்வாளராக இருந்தார். [91]

தொகுப்புரை

சைவமும் வைணவமும் ஆகியவற்றில் பேராசிரியர் ஆற்றிய பங்களிப்புகளை ஆழமாக ஆராய்ந்து விளக்குகின்றது. இவ்வியல், ஒரு சமயத்தை மட்டும் முன்னிறுத்தாமல், இரு சமயங்களின் சாரத்தையும் சமநிலையுடன் அணுகும் பேராசிரியரின் அகநிலையையும் அறிவுப் பரப்பையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

பேராசிரியரின் சைவப் பங்களிப்பு, அவரின் சமயப் புரிதல் மற்றும் இறைநம்பிக்கையின் ஆழத்தை உணர்த்துகின்றது. சமயக்குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், தம்பிரான் தோழர், மாணிக்கவாசகர் ஆகியோரின் வாழ்க்கை, இறை அனுபவம் மற்றும் அருளிய நூல்கள் பற்றிய அவரது ஆய்வுகள், சைவ சித்தாந்தத்தின் தத்துவ அடிப்படைகளை விளக்குகின்றன. குறிப்பாக, இந்நாயன்மார்களின் பக்தி நிலைகள், இறைவன் மீது கொண்டிருந்த அன்பு, சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் ஆகியவை இவரது எழுத்துக்களில் தெளிவாக பிரதிபலிக்கின்றன. ஆழ்வார்களின் பக்தி, அவர்களின் அருளிச்செயல்கள், திவ்யதேசங்களின் மகத்துவம் ஆகியவற்றை அவர் ஆராய்ந்து எழுதிய நூல்கள், வைணவ சமயத்தின் ஆழ்ந்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. பேராசிரியரின் வைணவ நூல்கள், பக்தி வழியில் இறையை அடையும் பாதையை எளிமையாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் எடுத்துரைக்கின்றன. சைவமும் வைணவமும் ஆகிய இரு சமயங்களையும் ஒப்பீட்டு நோக்கில் அணுகும் போது, பேராசிரியர் வெளிப்படுத்தும் முக்கிய அம்சம், சமயங்களின் வெளிப்புற வேறுபாடுகளை விட அதன் உள்ளார்ந்த

ஒற்றுமைகளே முக்கியம் என்பதே ஆகும். இரு சமயங்களும் இறையன்பு, பக்தி, ஒழுக்கம், மனிதநேயம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. இந்த அடிப்படையில், பேராசிரியரின் அணுகுமுறை சமய நல்லிணக்கத்திற்கும், ஆன்மிக ஒருமைப்பாட்டிற்கும் வழிகாட்டுகிறது. அவரின் படைப்புகள், சமயப் பக்தியை வளர்ப்பதை விளக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

ந. சுப்புரெட்டியார் சைவ சமய விளக்கு - பக்.4

1

2 மேலது - பக்.5

3 மேலது - பக்.18

4 மேலது - பக்.25

5 மேலது - பக் .26

6 ந. சுப்புரெட்டியார் சைவ சித்தாந்தம் - பக்.3

7 மேலது - பக் .33

8 மேலது - பக்.164

9 மேலது - பக் .275

10 மேலது - பக் .276

11 ந. சுப்புரெட்டியார் சைவமும் தமிழும் - பக்.7

12 மேலது - பக்.27

13 மேலது - பக்.28

14 ந. சுப்புரெட்டியார் ஞானசம்பந்தர் - பக்.1

15 மேலது - பக்.2

16 மேலது - பக்.8

17 மேலது - பக்.9

18 ந. சுப்புரெட்டியார் தம்பிரான் தோழன் - பக்.3

19 மேலது - பக்.16

20 மேலது - பக்.17

21 மேலது - பக்.33

22 ந. சுப்புரெட்டியார் நாவுக்கரசர் - பக்.11

23 மேலது - பக்.22

24 மேலது - பக்.23

25 மேலது - பக்.23

26 மேலது - பக்.42

27 மேலது – பக்.3

28 ந. சுப்புரெட்டியார் மாணிக்கவாசகர் - பக்.282

29 மேலது - பக்.283

30 மேலது - பக்.303

31 ந. சுப்புரெட்டியார் மூவர் தேவாரம் பக்.23

32 மேலது - பக்.57

33 சேக்கிழார் பெருமான் சம்பந்தார் புராணத்தின் 822 - 844

34 மேலது - பக்.71

35 மேலது - பக்.105

36 மேலது - பக்.106

37 ந. சுப்புரெட்டியார் அண்ணல் அனுமன் - பக்.13

38 மேலது - பக்.16

39 மேலது - பக்.16

40 மேலது - பக்.16

41 மேலது - பக்.17

42 மேலது - பக்.17

43 மேலது - பக்.18

44 மேலது - பக்.113

45 ந. சுப்புரெட்டியார் அர்த்த பஞ்சகம் - பக்.5

46 மேலது - பக்.9

47 மேலது - பக்.45

48 மேலது - பக்.89

49 மேலது - பக்.123

50 மேலது - பக்.80

51 மேலது - பக்.80

52 மேலது - பக்.81

53 ந. சுப்புரெட்டியார் கலியன் குரல் - பக்.3

54 மேலது - பக். 4

55 ந. சுப்புரெட்டியார் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காரச்சாரியார் சுவாமிகள் - பக். 4

56 ந. சுப்புரெட்டியார் கம்பனின் மக்கள் குரல் - பக். 2

57 மேலது - பக். 2

58 மேலது - பக். 3

59 ந. சுப்புரெட்டியார் சடகோபன் செந்தமிழ் - பக். 3

60 ந. சுப்புரெட்டியார் சோழ நாட்டு திருப்பதிகள் – 1 - பக். 3

61 மேலது - பக்.4

62 மேலது - பக்.4

63 மேலது - பக்.26

64 ந. சுப்புரெட்டியார் சோழ நாட்டு திருப்பதிகள் – பாகம் 2 பக்.4

65 மேலது - பக்.85

66 ந. சுப்புரெட்டியார் திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் பக்.2

67 மேலது - பக்.85

68 ந. சுப்புரெட்டியார் தொண்டை நாட்டு திருப்பதிகள் பக்.1

69 மேலது - பக்.1

70 மேலது - பக்.66

71 ந. சுப்புரெட்டியார் பரகாலன் பைந்தமிழ் - பக்.1

72 மேலது – பக்.342

73 ந. சுப்புரெட்டியார் மலைநாட்டு திருப்பதிகள் - பக்.1

74 மேலது – பக்.2

75 மேலது – பக்.3

76 ந. சுப்புரெட்டியார் வடவேங்கடமும் திருவேங்கடமும், பக்.1

77 மேலது – பக்.50

78 மேலது – பக்.86

79 மேலது – பக்.86

80 மேலது – பக்.86

81 மேலது – பக்.86

82 ந. சுப்புரெட்டியார் விட்டுச்சித்தன் விரித்த தமிழ் - பக்.2

83 மேலது – பக். 83

84 ந. சுப்புரெட்டியார் வைணவமும் தமிழும் - பக். 42

85 மேலது – பக். 44

86 மேலது – பக். 45

87 மேலது – பக். 45

88 மேலது – பக். 45

89 மேலது – பக். 45

90 மேலது – பக். 45

91 ந. சுப்புரெட்டியார் வைணவ புராணங்கள் - பக்.3

முடிவுரை

பேரா. ந. சுப்புரெட்டியாரின் வைணவப் பங்களிப்புகள் என்னும் ஆய்வேட்டின் கண் ஆராய்ந்து ஐந்து இயல்களிலும் ஆராயப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்து இங்கு முடிவுரையாக தரப்பட்டுள்ளது.

பேரா.ந. சுப்புரெட்டியார் தனது கல்வி, உழைப்பு, ஒழுக்கம் மற்றும் உறுதியான நோக்கத்தால் உயர்ந்த நிலையை அடைந்து, சமூகத்திற்கு அரிய பங்களிப்புகளைச் செய்ய முடியும் என்பதற்கான சிறந்த முன்மாதிரியாக விளங்குகிறார் என்பதை தெளிவாக உணர முடிகிறது. அவரது வாழ்க்கைப் பயணம், பிறப்பிடத்தில் தொடங்கி கல்வி, பணியியல், எழுத்துப் பணி, சமயப் பங்களிப்புகள் மற்றும் ஓய்வுக்குப் பிந்தைய சேவை ஆகிய பல பரிமாணங்களைக் கொண்டதாகும். இவை அனைத்தும் ஒருங்கிணைந்து அவரை ஒரு முழுமையான கல்வியாளராகவும், அறிஞராகவும், சமூகப் பொறுப்புள்ள சிந்தனையாளராகவும் உருவாக்கியுள்ளன.

அவரது வாழ்க்கையின் ஆரம்ப கட்டம் மிகவும் எளிமையான சூழலில் இருந்தாலும், அதில் இருந்தே உயர்வதற்கான உறுதியான எண்ணம் அவரிடம் இருந்தது. குடும்ப ஆதரவு, குறிப்பாக தாய் மாமனின் துணை, அவரின் ஆரம்ப வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. திண்ணைப் பள்ளியில் தொடங்கிய அவரது கல்வி, தொடர்ந்து பல கட்டங்களைத் தாண்டி வளர்ந்து, அவரை உயர்கல்வி அடையச் செய்தது. இந்த கல்விப் பயணம் அவரின் அறிவு வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், வாழ்க்கையைப் பற்றிய ஆழமான புரிதலையும் உருவாக்கியது. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை அடைவதற்காக

மேற்கொண்ட முயற்சிகள், அவரின் விடாமுயற்சி மற்றும் உழைப்பை வெளிப்படுத்துகின்றன.

பட்டப்படிப்பு முடித்த பின் வேலைவாய்ப்பிற்காக மேற்கொண்ட முயற்சிகள் அவரது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தன. இந்தக் கட்டத்தில் அவர் எதிர்கொண்ட சவால்கள், அவரின் மன உறுதியை மேலும் வலுப்படுத்தின. ஆசிரியராகவும், பின்னர் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றிய அவர், கல்வி நிர்வாகத்தில் தனது திறமைகளை வெளிப்படுத்தினார். மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்காக அவர் எடுத்த முயற்சிகள், அவரை ஒரு சிறந்த கல்வியாளராக நிலைநிறுத்தின. கல்வி என்பது வெறும் அறிவு பரிமாற்றம் அல்ல, அது மனிதர்களை உருவாக்கும் ஒரு கருவி என்பதை அவர் தனது பணியால் நிரூபித்தார்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அவர் ஆற்றிய பணி மிகவும் குறிப்பிடத்தக்கது. எதிர்கால ஆசிரியர்களை உருவாக்கும் பொறுப்பை திறம்பட ஏற்று, கல்வித் துறையின் தரத்தை உயர்த்துவதில் அவர் முக்கிய பங்காற்றினார். அவரது கற்பித்தல் முறை, ஒழுக்கம், மற்றும் மனிதநேய பார்வை, அவரால் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் மூலம் சமூகத்தில் பரவியது. இதன் மூலம் அவர் கல்வி துறையில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.
எழுத்துப் பணி அவரது வாழ்க்கையின் மற்றொரு முக்கிய அம்சமாகும். தனது அனுபவங்கள், அறிவு, மற்றும் சிந்தனைகளை நூல்களாக வடிவமைத்து தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கியுள்ளார். அவரது நூல்கள் கல்வி, பண்பாடு, சமயம், அறிவியல் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. அவை வாசகர்களுக்கு அறிவையும், சிந்தனையையும் வழங்குவதோடு, நல்ல மனிதர்களாக வாழ வழிகாட்டுகின்றன.

அவரது எழுத்துக்கள் எளிமையான மொழியில் ஆழமான கருத்துகளை வெளிப்படுத்துவதால், அனைத்து தரப்பினராலும் புரிந்து கொள்ளக்கூடியவையாக உள்ளன.

ஓய்வுக்குப் பின்னும் அவர் தனது பணியை நிறுத்தாமல், பல்கலைக்கழகத் துறையில் தொடர்ந்து பணியாற்றியது அவரது அர்ப்பணிப்பின் உச்சநிலையை காட்டுகிறது. இது கல்வி மற்றும் அறிவு பரவலுக்கான அவரது உறுதியான பற்றை வெளிப்படுத்துகிறது. ஓய்வு என்பது அவருக்கு ஓய்வாக அல்ல, மேலும் சேவை செய்யும் வாய்ப்பாக அமைந்தது. இது அவரின் வாழ்க்கை நோக்கத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

அவரது அயல் நாட்டுப் பயணங்கள் அவரது பார்வையை விரிவுபடுத்தியுள்ளன. உலகின் பல்வேறு கல்வி முறைகள், பண்பாடுகள் மற்றும் சிந்தனைகளை அறிந்து, அவற்றை உள்ளூர் சூழலுடன் இணைத்து செயல்படுத்தும் திறன் அவரிடம் இருந்தது. இது அவரை ஒரு உலகளாவிய சிந்தனையாளராக உருவாக்கியது. அவரின் இந்த அனுபவங்கள், அவரது எழுத்துகளிலும், கல்வி பணியிலும் பிரதிபலித்தன.

“பேரா. ந. சுப்புரெட்டியாரும் வைணவமும்” எனும் பகுதி, வைணவ சமயத்தின் ஆன்மீக ஆழத்தையும் அதன் பாரம்பரிய செழுமையையும் வெளிப்படுத்துகிறது. ஆழ்வார்களின் பக்தி, அவர்களின் இறை அனுபவங்கள் மற்றும் திவ்யப் பிரபந்தங்கள் ஆகியவை, வைணவ சமயத்தின் மையக் கருத்துக்களை தெளிவாக எடுத்துரைக்கின்றன. வைணவம் என்பது வெறும் சமயக் கட்டமைப்பு அல்ல, அது இறையருளை நேரடியாக அனுபவிக்கும் ஆன்மீகப் பாதை என்பதை இவ்வாய்வேடு உணர்த்துகிறது.

முதலாழ்வார்களிலிருந்து தொடங்கி பல்வேறு ஆழ்வார்களின் வாழ்க்கை மற்றும் பக்தி அனுபவங்களை தனிதனியாக

விளக்கியுள்ளார். ஒவ்வொரு ஆழ்வாரின் வாழ்க்கையும் பக்தியின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது. அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், அவர்களின் இறைநம்பிக்கை மற்றும் அதனைத் தாண்டி அடைந்த ஆன்மிக உயர்வு ஆகியவை, மனித வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாக அமைகின்றன. குறிப்பாக ஆண்டாளின் இறையன்பு, திருமழிசையாழ்வாரின் ஆன்மிகப் பயணம், குலசேகராழ்வாரின் பக்தி உணர்வு ஆகியவை மிகவும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

“திவ்விய தேசப் பயணங்கள்” பற்றிய பகுதி, வைணவ சமயத்தின் புனிதத் தலங்களின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. சோழநாடு, பாண்டிநாடு மற்றும் தொண்டைநாடு ஆகிய பகுதிகளில் உள்ள திவ்யதேசங்களின் வரலாறு, ஆன்மிகம் மற்றும் பக்தர்களின் அனுபவங்கள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. இத்தலங்கள் அனைத்தும் இறையருளின் வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. அவற்றின் தலவரலாறுகள், பக்தியின் ஆழத்தை உணர்த்துகின்றன.

இந்தத் தலங்களை நேரில் தரிசித்து எழுதியிருப்பது இவ்வாய்வின் நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது. அனுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதால், அது பக்தர்களுக்கு நேரடி உணர்வை அளிக்கிறது. இதன் மூலம் வைணவ சமயத்தின் தலபாரம்பரியம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

சைவ வைணவப் பங்களிப்புகள் ஒப்பீடு தமிழ்ச் சமய மரபின் இரு முக்கியத் தளங்களான சைவமும் வைணவமும் ஆகியவற்றை சமநிலையுடன் அணுகுகிறது. இரு சமயங்களும் இறையன்பு, ஒழுக்கம், மனிதநேயம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. வெளிப்புற வேறுபாடுகளை விட அதன் உள்ளார்ந்த ஒருமைப்பாடு முக்கியம் என்பதை வலியுறுத்துகின்றன. இது சமய நல்லிணக்கத்திற்கும், சமூக ஒற்றுமைக்கும் வழிகாட்டுகிறது. அவரது

படைப்புகள் சமய உணர்வை வளர்ப்பதோடு, மனிதநேயத்தை வலியுறுத்துகின்றன.

பேரா. ந. சுப்புரெட்டியார் அவர்களின் வாழ்க்கையும், வைணவப் பங்களிப்புகளும் தமிழ்ச் சமூகத்திற்கும் கல்வித் துறைக்கும் பெரும் செல்வமாகும். அவரது கல்விப் பணி, எழுத்துப் பணி மற்றும் சமயப் பங்களிப்புகள் அனைத்தும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அவரது வாழ்க்கை, இன்றைய தலைமுறைக்கும் எதிர்கால தலைமுறைக்கும் ஒரு வழிகாட்டியாகும். அவரது ஆய்வுகள் மற்றும் நூல்கள் எதிர்கால ஆராய்ச்சிகளுக்கான வலுவான ஆதாரங்களாக இருக்கும். சமய ஒற்றுமை, ஆன்மிக உயர்வு மற்றும் மனிதநேயம் ஆகியவற்றை வலியுறுத்தும் அவரது சிந்தனைகள், சமூக முன்னேற்றத்திற்கு வழிகாட்டுகின்றன. அவரது பங்களிப்புகள் தமிழ்ச் சமய இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1 **ந. சுப்புரெட்டியார்** **நினைவுக் குமிழிகள் - 1**
வேங்கடம் பப்ளிகேஷன்
சென்னை - 600 40
பதிப்பு – 1988

2 **ந. சுப்புரெட்டியார்** **நினைவுக் குமிழிகள்** - 2
வேங்கடம் பப்ளிகேஷன்
சென்னை - 40
பதிப்பு – 1989

3 **ந. சுப்புரெட்டியார்** **நினைவுக் குமிழிகள் -** 3
வேங்கடம் பப்ளிகேஷன்
சென்னை - 40
பதிப்பு – 1989

4 **ந. சுப்புரெட்டியார்** **நினைவுக் குமிழிகள்** - 4
வேங்கடம் பப்ளிகேஷன்
சென்னை - 40
பதிப்பு – 1990

5	**ந. சுப்புரெட்டியார்**	**ஆழ்வார்களின் ஆராமுது** வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை - 600 040 பதிப்பு – 1987
6	**ந. சுப்புரெட்டியார்**	**பாண்டிநாட்டு திருப்பதிகள்** வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40 இரண்டாம் பதிப்பு – 1990
7	**ந. சுப்புரெட்டியார்**	**தொண்டை நாட்டுத் திருப்பதிகள்** அவ்வை வெளியீடு அசோக் நகர் சென்னை – 83 பதிப்பு – 2006
8	**ந. சுப்புரெட்டியார்**	**திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்** 1. நிவேதிதா பதிப்பகம் சென்னை – 14 பதிப்பு – 1975

துணைமை ஆதாரங்கள்

1 அ. ச. ஞானசம்பந்தன் தேவாரம்

கங்கை புத்தக நிலையம்

சென்னை – 17

பதிப்பு – 1998

2 ஆண்டாள் நாச்சியார் திருமொழி

பூவழகி பதிப்பகம்

சென்னை – 14

பதிப்பு - 1991

3 இளங்கோவடிகள் சிலப்பதிகாரம்

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு

தஞ்சாவூர் – 10

பதிப்பு – 1985

4	இரா. மோகன்	மதுரைக்காஞ்சி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட் சென்னை – 98 முதற் பதிப்பு – 2004
5	இரா. மோகன்	திருமுருகாற்றுப்படை செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிமிடெட் சென்னை – 98 பதிப்பு – 2004
6	கு.வெ. பாலசுப்ரமணியன்	புறநானூறு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட் சென்னை – 98 முதற் பதிப்பு – 2004 மூன்றாம் பதிப்பு – 2007

7 கம்பர் கம்பராமாயணம்

பாவை பதிப்பகம்,சென்னை-1

பதிப்பு -1932

8 ச. பாலசுந்தரம் தொல்காப்பியம் உரை

பெரியார் பல்கலைக்கழக வெளியீடு

சேலம் – 11

பதிப்பு – 2012

9 ச. சத்தியமூர்த்தி சிற்றிலக்கியங்களில் பக்தி

தமிழ்த்துறை அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) நந்தனம்

சென்னை – 35

பதிப்பு – 2016

10 சி. பாலசுப்ரமணியன் ஆண்டாள் திருப்பாவை விளக்கம்

நறுமலர்ப் பதிப்பக வெளியீடு

பாரிநிலையம் – 108

		பதிப்பு – 1995
11	சேக்கிழார்	பெரியபுராணம் சேக்கிழார் ஆராய்ச்சி மையம் சென்னை – 18 பதிப்பு – 1998
12	ஜெகத்ரட்சகன்	நாலாயிர திவ்யப் பிரபந்தம் ஆழ்வார்கள் ஆய்வு மையம் சென்னை – 69 பதிப்பு – 1993
13	ஜெயங்கொண்டார்	காலிங்கத்துப்பரணி பாரி நிலையம் சென்னை – 108 பதிப்பு – 1958 ஒன்பதாம் பதிப்பு – 1986
14	த. விஷ்ணுகுமாரன்	இந்திய இலக்கிய சிற்பிகள்

		சாகத்திய அகாதெமி பப்ளிகேஷன்
		சென்னை – 18
		பதிப்பு – 2024
15	பரஞ்சோதி முனிவர்	திருவிளையாடற் புராணம்
		முருகவேள் புத்தகசாலை
		இராயப்பேட்டை – 14
		பதிப்பு – 1937
16	பாரதியார்	பாரதியார் கவிதைகள்
		கவிதா வெளியீடு
		சென்னை – 14
		பதிப்பு – 2016
17	பெரியாழ்வார்	திருப்பல்லாண்டு
		ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ வெளியீடு
		சென்னை - 600 024
		முதற் பதிப்பு – 1909

18	பூ. சு. கணேஷ்மூர்த்தி	மே ஒன்று ந. சுப்பு ரெட்டியார் கல்வி கமிட்டி பப்ளிகேஷன் சென்னை – 40 பதிப்பு – 2024
19	மா. மோகன்	விவேக சிந்தாமணி சந்தியா பதிப்பகம் சென்னை – 83 பதிப்பு – 2022
20	முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்	திருவேங்கடக் கலம்பகம் டிவைன் பிரெஸ் சென்னை – 14 முதல் பதிப்பு - 1905
21	ந. சுப்புரெட்டியார்	அர்த்த பஞ்சகம் வேங்கடம் பப்ளிகேஷன்

		சென்னை - 600 040 பதிப்பு – 1994
22	ந. சுப்புரெட்டியார்	அண்ணல் அனுமன் ஏஷியன் பிரிண்டர்ஸ் சென்னை 600 014 பதிப்பு – 2003
23	ந. சுப்புரெட்டியார்	கலியன் குரல் அண்ணாமலை யுனிவர்சிட்டி அண்ணாமலை நகர் – 02 பதிப்பு – 1989
24	ந. சுப்புரெட்டியார்	கம்பனின் மக்கள் குரல் வானதி பதிப்பகம் சென்னை – 40 பதிப்பு – 1983
25	ந. சுப்புரெட்டியார்	காஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரிய சுவாமிகள்

அவ்வை வெளியீடு

சென்னை - 83

பதிப்பு - 2004

26 ந. சுப்புரெட்டியார் சடகோபன் செந்தமிழ்

வேங்கடம் பப்ளிகேஷன்

சென்னை – 40

பாதிப்பு – 1989

27 ந. சுப்புரெட்டியார் சடகோபன் செந்தமிழ் (மறு பதிப்பு)

வேங்கடம் பப்ளிகேஷன்

சென்னை - 600 040

பதிப்பு – 2004

28 ந. சுப்புரெட்டியார் சோழ நாட்டுத் திருப்பதிகள் (பாகம் 1)

அவ்வை வெளியீடு

சென்னை – 83

பதிப்பு – 2004

29	ந. சுப்புரெட்டியார்	சோழ நாட்டுத் திருப்பதிகள் (பாகம் 2) அவ்வை வெளியீடு சென்னை – 83 பதிப்பு – 2004
30	ந. சுப்புரெட்டியார்	திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் மாருதி பிரஸ் சென்னை – 14 பதிப்பு – 1975
31	ந. சுப்புரெட்டியார்	தொண்டை நாட்டு திருப்பதிகள் அவ்வை வெளியீடு சென்னை – 83 பதிப்பு – 2006
32	ந. சுப்புரெட்டியார்	பரகாலன் பைந்தமிழ் வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40

முதற் பதிப்பு – 1992

33	ந. சுப்புரெட்டியார்	மலைநாட்டு திருப்பதிகள் வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40 முதற் பதிப்பு – 1971
34	ந. சுப்புரெட்டியார்	வடநாட்டு திருப்பதிகள் வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40 முதற் பதிப்பு – 1980
35	ந. சுப்புரெட்டியார்	வடவேங்கடமும் திருவேங்கடமும் வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 640 பதிப்பு – 1992
36	ந. சுப்புரெட்டியார்	விட்டுசித்தன் விரித்த தமிழ்

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

சென்னை – 18

பதிப்பு – 2001

37 ந. சுப்புரெட்டியார் வைணவமும் தமிழும்

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

சென்னை – 18

பதிப்பு – 2008

38 ந. சுப்புரெட்டியார் வைணவ புராணங்கள்

சுரா புக்ஸ் பிரைவேட் லிமிடெட்

சென்னை – 40

பதிப்பு – 2003

39 ந. சுப்புரெட்டியார் சைவ சமய விளக்கு

		வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40 பதிப்பு – 1984
40	ந. சுப்புரெட்டியார்	சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம் திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் சென்னை – 18 பதிப்பு – 2001
41	ந. சுப்புரெட்டியார்	ஞானசம்பந்தர் வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40 பதிப்பு – 1986
42	ந. சுப்புரெட்டியார்	தம்பிரான் தோழன் வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40

		பாதிப்பு – 1985
43	ந. சுப்புரெட்டியார்	நாவுக்கரசர் ஐந்திணை பதிப்பகம் சென்னை – 40 பதிப்பு – 1986
44	ந. சுப்புரெட்டியார்	மாணிக்கவாசகர் வேங்கடம் பப்ளிகேஷன் சென்னை – 40 பாதிப்பு – 1989
45	ந. சுப்புரெட்டியார்	மூவர் தேவாரம் நிவேதிதா பதிப்பகம் சென்னை – 83 பதிப்பு - 2003
46	ந. சுப்புரெட்டியார்	சைவமும் தமிழும் திருநெல்வேலி, தென்னிந்திய

		சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் சென்னை – 18 பதிப்பு – 2001
47	ந. சுப்புரெட்டியார்	திருக்குறள் உரை தேன்மழை பதிப்பகம் சென்னை – 16 பதிப்பு – 1993

கலியனின் வைணவத்தொண்டு

ஆய்வாளர் : எ.நா.ஜோதி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப்பல்கலைக்கழகம், ஆந்திரா.
நெறியாளர் : முனைவர் பூ.சு.கணேஷ் மூர்த்தி
இணைப் பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப்பல்கலைக்கழகம், ஆந்திரா.

திருமங்கையாழ்வார் என்பவர் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் இளையவர் மற்றும் இறுதியானவர். நூற்றெட்டு திவ்யதேசங்களில் என்பதிற்கும் மேல் நேரடியாக சென்று பாசுரங்கள் வழி மங்களாசாசனம் செய்து வழிபட்டவராவர். திருமங்கைமன்னனாகஇருந்து எல்லா பொருள்களையும் இழந்து கள்வனாக மாறிய போதிலும் பெருமாள் மீது மிகுந்த பக்திக்கொண்டு தொண்டுகள் பல புரிந்தது குறிப்பிடதக்கதாகும்.

இயற்பெயர் கலியன்

முதலாவதாக இந்தக் கலியன் யார் என்பதைத் தெரிவிக்க வேண்டும். சோழமண்டலத்தில் **'திருவாலிநாடு'** என்ற ஒருபகுதியுண்டு. இதுவே **'மங்கைநாடு'** என்று கருதவும் இடமுண்டு. இப்போது சிறப்புடன் திகழும் 'திருநகரிப்' பகுதியைச் சார்ந்தது (தற்போது நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ளது). சோழ வேந்தனின் சேனைத்தலைவராகத் திகழ்ந்தவர் நீலன் என்பவர். இவர் 'கள்ளர்குலத்தைச் சார்ந்தவர்." இவருக்குத் திருமகனாகப் பிறந்தவர் இவர். திருமங்கையாழ்வார் பிறந்த நள ஆண்டு கார்த்திகை மாதம் கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்தார். **'கலந்ததிருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே'** என்பது, இவரது வாழித் திருநாமம். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் கலியன் என்பது. இவரே பின்னர் திருமங்கையாழ்வாராகின்றார்.

திருமங்கையாழ்வார் அரசன் ஆதல்

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் உடையான் உழை (குறள் 593)

தந்தையாருக்குப் பிறகு கலியன் ஆலிநாட்டின் தலைவராகவும் சோழ மன்னனின் தானைத் தலைவராவும் விளங்குகின்றார். இவருக்கு **(நீர்மேல் நடப்பான், நிழலிலொதுங்குவான், தாள் ஊதுவான், தோலாவழக்கன்)** என்ற அமைச்சர்கள் இருந்தனர். இவர் ஏறி இவரும் குதிரை ஆடல்மா என்பது.

இவர் இவ்வுலக வாழ்க்கையில் மிகவும் அதிகமாக ஈடுபட்டுக் கையில் வாளேந்திய கோலத்துடன் திரிந்து கொண்டிருந்தார். இப்படியிருந்த நாளில் ஆலி நாட்டைச் சேர்ந்த திருவெள்ளக்குளம் என்ற ஊரில் மருத்துவத் தொழிலை மேற்கொண்ட ஸ்ரீ வைணவர் ஒருவர் இருந்தார். இவருக்கு மகப்பேறு இல்லாதிருந்தது. வெள்ளக் குளம் என்ற ஊரிலுள்ள தாமரைப்

பொய்கையில் சில தேவ கன்னிகையர் நாடோறும் நீராடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். ஒரு நாள் திருமாமகளும் தேவகன்னிகை வேடம்தரித்துக் கொண்டு அவர்களுடன் குமுதமலர் கொய்து கொண்டிருந்தாள். ஏனையவர் நீங்கிப்போக இவள் மட்டிலும் மானிட உருவை மேற் கொண்டுத் தனித்து நின்றாள். அப்போது மருத்துவர் அந்த இடத்திற்கு அநுட்டானத்தின் பொருட்டு வர நேர்ந்தது. அவர் தனித்து நிற்கும் இப்பெண் பிள்ளையைக் கண்டு "பிள்ளாய், நீ யார்? தனித்து நிற்கக் காரணம் என்ன?" என்று வினவ, அவளும் "கூடவந்த மகளிர் என்னை விட்டு நீங்கினர்; இனி என்னை உம்மோடு வைத்துக்கொள்ளுவீர்" என்று தான் வந்த வரலாற்றை விரித்துரைத்தாள். மகப்பேறு இல்லா அந்தப் பாகவ தோத்தமர் மிகவும் உகப்புடன் இவளை அழைத்துக் கொண்டு போய்த் தன் துணைவிக்குக் காட்டித் தந்தார். அந்த அம்மை யாரும் இவளை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். இவள் குமுதமலர் கொண்டு நின்றதுவே காரணமாக குமுதவல்லியார் என்ற பெயரிட்டு அவர்கள் வளர்த்து வந்தனர்.

குமுதவல்லியை சந்தித்தல்

இச்செய்தி திருமங்கையாழ்வார் செவிக்கு எட்டியது. 'நின்றவா நில்லா செஞ்சினை' யுடைய ராய் மருத்துவ பாகவ தோத்த மரைச் சந்தித்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அப்பெண்பிள்ளை ஏதோ காரியமாக இல்லத்திலிருந்து புறத்தே வரக் கண்டார். அப்பெண்ணின் எழில் திருமேனியும் அன்ன நடையும் மருண்ட மான் நோக்கும் கலியனைக் கவர்ந்தன. அப்பெண் தம்மை அடைந்த வரலாற்றைக் கூறினார். அவள் திருமணம் பற்றியும் கவலை தெரிவித்தார். உடனே திருமங்கையாழ்வார் தாம் அவளை மணப்பதாகக் கூறினார். வளர்ப்புத்தாய் தந்தையர் அவளை இவருக்குத் தர யோசித்துக் கொண்டிருக்கையில், அவள் "திருவிலச்சினையும் பன்னிரு திருமண்காப்பும் உடையவர்க்கொழிய மற்றொருவருக் கென்னைப் பேசலொட் டேன்' என்று தன் குறிக்கோளைத் தெரிவித்தாள். திருமங்கையாழ்வாரும் திருநறையூர் சென்று அங்கு எழுந்தருளியுள்ள நம்பி திருமுன்பு திருவிலச்சினை பெற்று பன்னிரண்டு திருமண்காப்புகளையும், தரித்துக்கொண்டு வந்தார். குமுதவல்லியார் திருமங்கையாழ்வாரைப் பார்த்து, "ஓராண்டு நாள்தோறும் 1008 வைணவர்களுக்கு உணவிட்டு அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தமும் பிரசாதமும் உண்டு நிறைவேற்றினாலொழிய நான் தங்களைக் கணவனாக ஏற்றுக்கொள்வதற்கில்லை" என்று ஒரு நிபந்தனை விதித்தாள். இவரும் அவள்மீது கொண்ட அன்பினாலே அங்ஙனம் செய்வதாக வாக்குறுதி செய்து தந்தார்; நிபந்தனையை நிறைவேற்றவும் செய்தார். அதன்பிறகு குமுதவல்லியாரை "நாடும் ஊரரிய குமுதவல்லியின் வளர்ப்புப் பெற்றோர்கள் திருமங்கையாழ்வாருக்கு குமதவல்லியினை திருமணம் செய்து வைத்தனர்.

திருமந்திரம் கூறுதல்

"சம்சாரிகள் தங்களையும் ஈசுவரனையும் மறந்து, ஈசுவர கைங்கரியத்தையும் இழந்து இழந்தோம் என்ற சம்சாரமாகிய பெருங்கடலிலே, விழுந்து துன்பபட திருமால் தன் அருளாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ் அவன் திருவடி சேர்ந்து, தானே சிஷ்யனுமாய் ஆசாரியனுமாய் நின்று, திருமந்திரத்தை வெளியிட்டருளினான்", குருவினுடைய திருப்பெயர் நாராயணன். சீடனுடைய திரு நாமம் நரன். இவர்தம் பிறப்பைப்பற்றியும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்,

சத்திய யுகத்தில் பதரிகாச்சிரமத்தில் தர்மதேவனுக்கும் தட்சப்பிரஜா பதியின் மகளாகிய மூர்த்தி தேவிக்கும் நரன், நாராயணன் என்ற பெயர்களுடன் திருமாலின் அவதாரங்களாகப் பிறந்தனர் இவர்கள். இவர்தம் குழந்தைப் பருவம் நைமிசாரணி யத்தில்" கழிந்தது தவ வாழ்க்கை கந்தமாதன பருவத்தில் தொடங்கியது. பின்னர் தேவர்கள், முனிவர்கள், மக்கள் இவர்கட்குக் குரு - சிஷ்ய முறையை நன்கு மக்கள் விளக்கும் பொருட்டு பதரிகாச்சிரமத்திற்கு வருகின்றனர்.

இங்குத்தான் நாராயணன் நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசிக்கின்றான். துவாபரயுகத்தில் கண்ணனாகவும் அர்ச்சுனனாகவும் பிறக்கின்றனர். இவர்கள் பகவத்கீதை என்ற பக்திக் கிரந்தம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைகின்றனர்.

பதரிகாசிரமம் திவ்யதேசம்

பதரிகாசிரமத்தைப்பற்றியும் ஈண்டுச் சிறிது கூறுவது பொருத்தமாகின்றது. பதரி இமய மலையிலிருக்கும் ஒரு திருத்தலம். பதரி என்பது வடமொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். அம்மரங்கள் அடர்ந்து கிடக்கும் இடம் வதரி. வதரிநாதன் எழுந்தருளியிருக்கும் திருமலை முழுவதும் வதரி யாகும். அவன் எழுந்தருளியிருக்கும் தலம் வதரிகாச்சிரமம் ஆகும். 'திருவதரி', 'திருவதரி ஆச்சிரமம்' ஆகிய இந்த இரண்டும்பற்றித் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இரண்டு திருமொழிகள் பெரியதிருமொழியில் உள்ளன. இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாரின் திருவுகப்புக் குரியது. திருக்கோயில் முழுவதையும் இருள் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தை மரம் உள்ள தென்றும், கலியுகத்தில் அது மக்கட்குப் புலனாகாது என்றும் கூறப்பெறுகின்றது. இந்த மரத்தின் அடியில்தான் வதரி -நாராயணன் தவசிவடிவில் இருந்து நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்ததாக வரலாறு. இதுவே இன்றைய வதரி - நாராயணனின் திருக்கோயிலாகத் திகழ்கின்றது. இந்த வதரியைத் திருமங்கையாழ்வார் 'பாரோர் புகழும் வதரி என்று போற்றுகின்றார் தமது 'சிறிய திருமடலில்'.எம்பெருமான் ஆசாரியனாய் நின்றது போதாதோ? சிஷ்யனாய் நின்றது எதன் பொருட்டு? என்ற ஐயம் எழுதல் இயற்கை.சாத்திர முறைப்படி உபதேசிக்கும் ஆசாரியனைச் சென்றடையும் சீடனிடம் சில இலக்கணங்கள் - சில நற்பண்புகள் - அமைந்திருத்தல் இன்றியமையாததாகும். இந்த இலக்கணங்களை உலகத்தாருக்கு அறிவிக்கும் பொருட்டு-செயல்கள் மூலம் உணர்த்தும் பொருட்டு எம்பெருமான் சீடனாகவும் நின்றான் என்பதை நாம் உணர்தல் வேண்டும். இம்முறை பலர் பின்பற்றுவதற்கும் வழியாகவும் அமையும்."சிஷ்யனாய் நின்றது சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டாரறியாமையாலே, அத்தை அறிவிக்கைக்காக" என்று இதனைச் சுருக்கமாக விளக்கம் தரும் முமுட்சுப்படி. இது மேனாட்டுக் கல்வி முறையில் குறிப்பிடப்பெறும் பல புதுமுறைகளை ஒருபுடை ஒத்திருக்கும் என்று கூறலாம்.

நன்னூலில் கூறப்பெறும், மாணாக்கர் - ஆசிரியர் இலக்கணங்கள் பெரும்பாலும் சமயம் சாராக்கல்விக்கும் பொருந்துவனவாகும். சமயக் கல்வியில் ஈடுபடும் சீடனிடம் சாத்திர நம்பிக்கை, அறங்களை மேற்கொள்ளும் இயல்பு, திருமாலிடம் பக்தி, ஆசாரியனிடம் அளவற்ற விசுவாசம், ஆசாரியர் மனம் உகக்கும் வண்ணம் செயலாற்றும் சாதுரியம், ஆசாரியருக்குப் பணிவிடை செய்வதில் விருப்பு, தன் உடல் பொருள் ஆவி அறிவு குணங்கள் முதலியவற்றை ஆசாரியனுக்கே உரிமையாக்கும் தன்மை, புலனடக்கம் முதலிய பண்புகள் அமைந்திருத்தல் இன்றியமை யாதது.

திருமங்கையாழ்வாரின் வடநாட்டுப்பயணம்

வதரியை அநுபவிக்க வேண்டுமென்று மிகுந்த ஆசையினால் திருமங்கையாழ்வார் வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார். திருமங்கையாழ்வாரின் வாழ்க்கை வரலாற்றில் இஃது ஓர் முக்கிய திருப்பம்.

முடிவுரை

பன்னிருவார்களுல் திருமங்கையாழ்வார் நூற்றெட்டு திவ்ய தேசங்களில் என்பதிற்கும் மேல் நேரடியாக சென்று அர்ச்சாவதார பெருமாளைக் கண்டு வணங்கியவர். ஆழ்வார்களில் இவர் ஒருவரே இல்லற வாழ்வில் ஈடுபட்டு பின் பெருமாள் மிகுந்த பக்தி கொண்டு பற்பல கைங்கர்யங்கள் செய்தார். இவர் இயற்றிய பாசுரங்கள் திருவெழுக்கூற்றிருக்கை (ஒரு பாடல் - 47 அடிகள்) சிறிய திருமடல் (ஒரு பாடல் - 155 அடிகள்) பெரிய திருமடல் (ஒரு பாடல் - 297 அடிகள்) திருநெடுந்தாண்டகம் (30 பாடல்கள்) திருக்குறுந் தாண்டகம் (20 பாடல்கள்) பெரிய திருமொழி

(1084 பாடல்கள்) போன்ற பாசுரங்களை இயற்றி வைணவ அடியார்கள் போற்றும் இவர் வாழ்ந்து காட்டிய நெறி குறிப்பிடதக்கதாகும்.

பயன் பட்ட நூல்கள்

1. ந. சுப்பு ரெட்டியார் கலியன் குரல்.
2. தி.அ.கிருஷ்ணமாச்சாரியர் திருமலையப்பன் திருவருள்.
3. வரதராஜன் மாடபூசி அருளிச்செயல் அருஞ்சொற்பொருள்.
4. புலியூர் கேசிகன் திருக்குறள் உரை.
5. கணேஷ்மூர்த்தி பூ.சு திருமலைக்கோயில் ஒழுகலாறுகளும் திருவிழாக்களும்.

IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

பேராசிரியரின் பார்வையில் திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

எ. நா. ஜோதி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண் : 2022PHDPTTM04
தமிழ்துறை திராவிடப்பல்கலைகழகம்,சீனிவாசவனம்,குப்பம் 517426
ஆந்திரா.
ORCID: https:// orcid.org/ 0000 – 0002 -1450 - 9735
முனைவர் பூ.சு.கணேஷ் மூர்த்தி
உதவிப் பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப்பல்கலைக்கழகம், சீனிவாசவனம்,குப்பம் 517426 ஆந்திரா.
ORCID: https:// orcid.org/ 0000 - 0003 – 3734 - 2402

ஆய்வுச்சுருக்கம்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். 1960 ஆம் ஆண்டு திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழத் துறையை நிறுவி 17 வருடங்கள் தமிழ் தொண்டாற்றினார். ஆந்திர மாநிலத்தில் வாழும் தமிழர்களுக்காக தமிழ் பேராசிரியராக பணியாற்றினார். அதுவரையில் தமிழகத்திற்குச் சென்று தமிழ் பயின்று வந்த மாணவர்களுக்கு திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் படிப்பது ஓர் வரபிரசாதமாக அமைந்தது. பேராசிரியர் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு எறக்குறைய 135 நூல்களை எழுதியுள்ளார், அனைத்தையும் தமிழக அரசு நாட்டுடமையாக்கியுள்ளது. சென்ற நூற்றாண்டில் தமிழுக்கு தொண்டற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவருள் ஒருவர் இவர் ஆவார். தனது இளமை பருவம் முதலே எம்பெருமானுக்கும் தமிழ்

இலக்கியத்திற்கும் தொண்டற்றுவதை தம் இரு கண்களாக போற்றியவர். பேராசிரியர் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மீது கொண்ட பக்தியினால் 108 திவ்ய தேசங்களில் 102 திவ்ய தேசங்களுக்குச் சென்று திருமாலை வழிபட்டார். அவர் சென்று வந்த திவ்ய தேசங்களில் பாண்டி நாட்டு திருப்பதிகள் , சோழ நாட்டு திருப்பதிகள், வட நாட்டு திருப்பதிகள், நடு நாட்டு திருப்பதிகள், தொண்டை நாட்டு திருப்பதிகள், மலை நாட்டு திருப்பதிகள் போன்ற திருத்தலகளுக்கு சென்று திருமாலை தரிசித்தார். பேராசிரியரின் நூல்களை படித்தாலே 102 திவ்ய தேசங்களுக்கு சென்று வந்த புண்ணியம் நமக்கு கிடைக்கும். பேராசிரியர் அவர்கள் தமிழுலகிற்கு 135 நூல்களை எழுதியுள்ளார்.

முன்னுரை

இன்று பொது மக்களும் கற்றறிந்த புலவர்களும் திருப்பதி மலையையே ‘வட வேங்கடம்’ என்று கருதுகின்றனர். தேசியக்கவி பாரதியாரும் வட வேங்கடத்தை ‘வட மாலவன் குன்றம்’ என்றே வழங்குவதை அறியலாம்.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே – நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு!

என்று தமிழ் நாட்டு எல்லையை வகுத்துக்காட்டும் பாடல் வழி அறியலாம். தொல்காப்பியப் பாயிரத்தில் கூறப்பெற்ற ‘தமிழ் கூறும் நல் உலகமே’ பாரதியின் கருத்தில் புதிய வடிவம் கொண்டு நிற்பதை எளிதில் கண்டு தெளியலாம். இம்மலை 14’ வட குறுக்கையுள்ளும் (*North Latitude*) 80’ கீழ் நெடுக்குக் கோட்டிலும் (*Latitude*) அடங்கி, சென்னைக்கு வடகிழக்குத் திசையில் சுமார் 85 கல் தொலைவில் அமைந்துள்ளது. இம்மலை ‘ஏழுமலை’ என்றே வழி வழியாக வழங்கப் பெற்று வருகின்றது.

சங்க இலக்கியக் குறிப்புகள்

சங்க இலக்கியங்களில் வட வேங்கடத்தைப் பற்றியுள்ள குறிப்புகள் உள்ளன. பத்துப்பாட்டில் பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை இவற்றில் உள்ள ஒருசில குறிப்புகளையும் எட்டுதொகையில் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை போன்ற நூல்களில் வட வேங்கடத்தைப் பற்றி பல குறிப்புகளையும் காண்கின்றோம். புறப்பொருள் வெண்பாமாலையிலும் சங்கம் மருவிய நூலாகிய சிலப்பதிகாரத்திலும் இம்மலையைப் பற்றிய குறிப்புகள் காணப் பெறுகின்றன.முதலில் ஐயனாரிதனார் வாக்கினைக் காண்போம்.

“வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும் – பொறிகட்(கு)
இருளீயும் ஞாலத்(து) இடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழியவன்”

என்ற பாடலில், ‘வேங்கடம்’ குறிப்பிடப் பெற்றிருப்பதுடன் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவாழியைத் தரித்துத் கொண்டிருக்கும் குறிப்பும் ‘ஆழியவன்’ என்ற சொல்லால் காட்டப் பெற்றிருப்பதை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் வரும் ‘வடவேங்கடம்’ பற்றிய குறிப்பில் மாங்காட்டு மறையோன் தலயாத்திரை செய்து வருகின்றான். உறையூரையடைந்த கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் வைகறை யாமத்து அவ்வூரைக் கடந்து தென் திசையை நோக்கிச் செல்லுபவர்கள், கனன்று எழும் கதிரவன் வெப்பத்தைப் பொறுக்கலாற்றாது வழியில் ஒரு மருதநிலப் பரப்பில் வனப்புற்றுத் திகழாநின்ற ஓர் இளமரக்காவில் வழிப்போக்கர் தங்குவதற்கென்று அமைக்கப் பெற்றிருந்த இருப்பிடத்தில் இளைப்பாறுதற் பொருட்டுச் சென்று புகுகின்றனர்.அப்பொழுது தென்றிசையினின்று வடதிசை நோக்கிச் செல்லும் மறையோனும் அவ்விடத்தில் வந்து புகுகின்றான்; வருகின்றவன் ‘தீது தீர் சிறப்பின் தென்னனை’ வாழ்த்திக் கொண்டே வருகின்றான். அங்ஙன் வருகின்றவனைக் கோவலன்,

“யாது நும்மூர்? ஈங்கென் வரவு?”

என்று வினவுகின்றான். இந்த இரண்டு வினாக்களில் முன்னதினும் பின்னது சிறப்புடைத்தாதலின், அதற்கு விடை கூறும் இடத்தில் திருவரங்கம், திருவேங்கடம் இவற்றின் வருணனைகள் வருகின்றன.

இதனைத் தவிர, சிலப்பதிகாரத்தில் வேறு இரண்டு இடங்களில் வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றது.

“நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் புறுத்த தண்புனல் நல்நாடு”

என்றும்,

“வேங்கட மலையும் தாங்க விளையுள்
காவிரி நாடும்”

என்றும் வருதலைக் காண்க.

உறையூர் காவிரியின் தென்பால் உள்ளது. திருப்பாணாழ்வார் பிறந்த திவ்விய தேசமாகும். திருவரங்கம் என்னும் திவ்யதேசம் உறையூருக்கு நேர் வடக்கில் காவிரி நதியின் அருகே உள்ளது.

“கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்என்
உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி
யரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள், மற்(று)
ஒன்றினைக் காணவே”

என்று திருப்பாணாழ்வார் அனுபவித்த அழகிய மணவாளன் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசமாகும். பாணாழ்வாரின் வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று இப்பொழுது நம் மனத்தில் எழுந்து நம்மைப் பரவசப்படுத்துகின்றது. இந்தத் திருவரங்கத்திற்கு மிக அண்மையிலுள்ளது தான் தங்கியிருந்ததுமான உறையூரிலுள்ள மாங்காட்டு மறையோன் திருவரங்கத்தை விவரித்துக் கூறுவது மிகவும் பொருத்தமேயாகும். இங்கு திருவரங்கத்தைப் பற்றி அவன் கூறிய செய்தி ஆறுவரிகளில் மிகச் சுருக்கமாக உள்ளது. ஆனால், அவன் இன்னும் நேரில் கண்டறியாத வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் சற்று

விரிவாகப் பதினொரு வரிகளில் கூறப்பெற்றுள்ளன. கோவலன் பூம்புகாரில் வாழ்ந்த பெரும் வணிகன். திருவேங்கடம் மலைநாட்டைவிட பூம்புகாருக்கு மிக அண்மையிலுள்ளது. ஆதலின், அவன் வேங்கடத்தைப் பற்றி நன்கு அறிந்திருத்தலும் கூடும். மிகத் தொலைவில் மலைநாட்டிலுள்ள மாங்காட்டுமறையோன் அறிந்திருப்பதைவிட கோவலன் திருவேங்கடத்தைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் கூடும் என்று கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை. இன்று திருப்பதி புகழ் அடைந்திருப்பதுபோல் அன்றும் அனைவருக்கும் தெரிந்துள்ள ஊராக இருந்திருப்பின், கோவலன் இந்த ஊரைப் பற்றி நன்றாகவே அறிந்திருப்பான் என்றும், அதுவும் தமிழகத்தின் வட எல்லையின் முக்கியமான ஓர் இடம் என்று அறியும் அளவுக்குத் தெரிந்திருப்பான். திருப்பதிக்கு நேரில் சென்று அவ்வூரை கண்டறியாத மாங்காட்டு மறையோன், அவ்வூரைப் பற்றி ஓரளவு நன்கு அறிந்திருக்கக்கூடிய கோவலனுக்கு மிக விரிவாக அத்திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திருமேனியை நேரில் கண்டது போல் விவரமாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

வேங்கடம் – பெயர் விளக்கம்

இனி, “வேங்கடம்” என்ற சொல்லின் பொருளைக் காண்போம். “வேங்கடம்” என்ற கூட்டுச் சொல் (Compound Word) ‘வேம்’,‘கடம்’=வேங்கடம் என்றாயிற்று. ‘கடம்’ என்பது பாலை நிலத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

“பெயன்மழை துறந்த புலம்பறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் துவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம்”

என்ற குறுந்தொகைப் பாடலில் ‘கடம்’ என்ற சொல் பாலையைக் குறித்தமை காண்க. சிலப்பதிகாரத்திலும் “கடம்பல கிடந்த காடுடன் கழிந்து” என்ற அடியிலுள்ள ‘கடம்’ பாலை நிலத்து வழியினைக் குறிக்கின்றது. ‘கடம்’ என்பதற்கு உரையாசிரியர் ‘அருஞ்சுரம்’ என்று பொருள் கூறுவர். பிங்கலந்தை ‘கடம்’ என்பதனை ‘மலைசாரல்’ என்று கூறும்.

வேங்கடத்தை ஆண்ட அரசர்கள்

இப்பகுதியை அரசர்கள் பலர் ஆட்சிபுரிந்தனர். எட்டுத்தொகை நூலாகிய அகநானூற்றிலும் புறநானூற்றிலும் ‘புல்லி’ என்ற ஓர் அரசன் குறிப்பிடப்பெறுகின்றான். புறநானூறு ‘ஆதனுங்கன்’ என்ற இன்னொரு அரசனையும் குறிப்பிடுகிறது. இனி வேங்கடத்தை ஆண்டவர்களை பார்ப்போம்.

புல்லி

இவன் தமிழகத்தின் வடஎல்லையாக விளங்கும் வேங்கடத்தையும் அதனைச் சூழ்ந்த நாடுகளையும் ஆண்டவன்.

திரையன்

பெரும்பாணாற்றுப்படையால் இவனைப் பற்றி அறியக் கிடக்கும் செய்திகள் இவை. “திருமாலை முதல்வனாகக் கொண்ட குடியிற் பிறந்தவன் திரையன்; திரைதரு மரபின் வழிவந்தவன். மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும் முரசு முழங்குதானை மூவேந்தரின் சிறப்புடையவன்.

ஆதனுங்கன்

இவன் ஒரு குறுநில மன்னன். வேங்கடமலையும் அதனைச் சூழ உள்ள நாடும் இவனுக்கு உரியவை. இவன் இரவலர் இன்மை இனிய உள்ளம் படைத்தவன். கள்ளில் ஆத்திரையனார் என்னும் தொண்டை நாட்டுப் புலவர் இளையராய் இருந்த காலத்தே இவனைச் சென்று கண்டார்.

இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம்

‘வேங்கடம்’ - பொருள் மாற்றம்

இடைக்காலத்தில் பக்தி இயக்கம் பெரும் செல்வாக்குப் பெற்ற காலத்தில் ‘வேங்கடம்’ என்ற சொல்லும் புதுப்பொருளைப் பெற்றது என்று கருதலாம். ஈண்டு திருவாய் மொழியிலுள்ள ஒரு பாடலை ஆய்வது பொருத்தமென்று கருதுகின்றேன்.

“வேங்கடங்கள்மெய் மேல்வினை முற்றவும்

தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்

வேங்க டத்துறை வார்க்கு நமஎன்னல்

ஆங்க டமை அது சுமந் தார்கட்கே”

ஆழ்வார்கள் காலம் வரை ‘வேம்-வெந்துபோம், கடங்கள்-பாவங்கள்’ என்று வழங்கின. தன்னை அடைந்தவர்களுடைய பாவம் அனைத்தையும் ஒழிப்பதனால் இத்திவ்விய தேசத்தை ‘வேங்கடம்’ எனக் கூறத்தொடங்கினர். இடைக்காலத்தில் ‘வேம்’ என்ற சொல் ‘பாவம்’ என்ற பொருளையும் ஏற்க வேண்டியதாயிற்று. ‘கடம்’ என்ற சொல் ‘எரித்தல்’ என்ற பொருளை ஏற்றது. ‘வேங்கடம்’ என்ற கூட்டுச்சொல் ‘பாவங்களை எரித்தல்’ என்ற பொருளில் வழங்கி, மேலும் அது ‘பாவங்களை எரிக்கும் இடம்’ என்றும் வழங்கத் தொடங்கியது. இன்னும் சிலர் ‘வேங்கடம்’ என்ற திவ்விய தேசம் அழிவில்லாத ஐசுவரியங்களை அளிக்கும் இடமாகும் எனவும்

கருதுகின்றனர்.

வேங்கடத்தின் புகழ்

ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் பெற்ற திருவேங்கடம் பதினொன்றாம் நூற்றாண்டில்தான் பெரும்புகழ் அடையத் தொடங்கியது. இராமாநுசர் திருமலைக்கு மூன்று தடவை வந்ததாக அவர் வரலாற்றால் அறியக்கிடகின்றது. இன்றும் திருமலையில் நடைபெறும் ஒழுகலாறுகள் அனைத்தும் இராமாநுசர் வகுத்தவையே என்று ‘திருமலையொழுகு’ என்ற நூல் வழி அறியலாம்.

திருவேங்கடமுடையானை ‘நெடியோன்’ என்ற பெயரால் இளங்கோவடிகள் கூறியது அப்பெருமானைத் திரிவிக்கிரமனாகக் குறிக்கும் ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் வழி அறியலாம். “நெடியோனே வேங்கடவா” என்றார் குலசேகரப் பெருமாள். சடகோபரும் “தாள்பரப்பி மண்தாவிய ஈசனை” என்று சிறப்பித்தார். உச்சிமேற் புலவர் கொள் நச்சினர்க் கினியாரும் நிலங்கடந்த நெடு முடியண்ணலை நோக்கி உலகம் தவம் செய்து வீடு பெற்ற மலை” என்று திரிவிக்கிரமானகவே திருமாலவனான எம்பெருமானைக் கூறி மகிழ்வதைக் காணலாம். வேதத்திலும், “அகில புவனங்களையும்; தன் மூவடிகளின் கீழ் ஒடுக்கியவன் எவனோ, அப்பெருமான் மலையில்

அருள் பாலிக்கிறான்" என்ற கருத்து வருகிறது என்று காட்டி, திருவிக்கிரமனாகிய திருவேங்கடமுடையான் திருமலையில் நித்தியவாசம் செய்தருளுகின்ற சிறப்பை அறியலாம்.

இந்த விழுப் பொருளையே, 'இளைத்தா ரொருவருமில்லா மறைகளை யின்றமிழால் குழைத்தாராகிய குருகைப்பிரானும்'

"குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்
சென்று சேர்திரு வேங்கட மாமலை"

என்று அருளிச் செய்வார். இக்கருத்தை உட்கொண்ட சுவாமி தேசிகனும்,

"விண்ணவரும் மண்ணவரும்
விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும்
வேத வெற்பே"

என்ற அடிகளில் 'வேத வெற்பு' எனப் போற்றியதை அறியலாம்.

இடைக்கால இலக்கியத்தில் திருவேங்கடம் பற்றி வரும் செய்திகளை ஆராய்வோம். இடைக்கால இலக்கியங்களான

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
கம்பராமாயணம்
வில்லிபுத்தூரார் பாரதம்

ஆகியவற்றில் வரும் செய்திகளை காணலாம்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பதினொருவர் இறைவன் மீது அருளியுள்ள இருபத்திரண்டு பிரபந்தகளும் மதுரகவிகள் நம்மாழ்வார் மீது அருளியுள்ள ஒரு பிரபந்தமும், திருவரங்கத்தமுதனார் உடையவர்மீது அருளியுள்ள ஒரு பிரபந்தமுகாக இருபத்து நான்கு பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் இசைப்பாத் தொகுதிகள் மூன்றும், இயற்பாத் தொகுதி ஒன்றுமாக நான்கு பிரிவுகள் உள்ளன. இந்த நூலிலுள்ள பாசுரங்கள் 108 திவ்யதேசங்களில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள எம்பெருமானை பற்றியனவாகும்.

கம்பராமாயணம்

கம்பராமாயணத்தில் வேங்கடத்தைப் பற்றிய குறிப்பு வருகின்றது. கிட்கிந்தா காண்டத்தில் நாடவிட்டபடலத்தில் இத்தகைய குறிப்புகளைக் காண்கின்றோம். இராமபிரானது கட்டளைப்படி சுக்கிரீவன் வானரைப்படைத் தலைவர்களைச் சீதாபிராட்டியைத் தேடும்படி எல்லாத் திசைகளிலும் அனுப்புகின்றான். ஒவ்வொரு திசையிலும் வானரவீரர்கள் செல்லுகின்றனர். தென்திசையை நோக்கிச் செல்லும் வானரவீரர்களை நோக்கி அவர்கள் தேடவேண்டிய பல இடங்களைக் குறிப்பிட்டு அவர்கள் செல்லும் வழியினையெல்லாம் விளக்குகின்றான். அப்பொழுது வேங்கடத்தின் வளம், பெருமை, முதலிய செய்திகளையும் தருகின்றான்.

“வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்றாய்
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்
நல்லறத்துக் கீறாய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த
மெய்யேபோற் பூத்து நீன்ற
அடைசுற்றுந் தண்சாரல் ஓங்கியவேங்
கடத்திற்சென் றடைதிர் மாதே”

திருமலையில் உடல் தூய்மையும் மனத் தூய்மையும் உடைய அந்தணர்கள் மூழ்கி நீராடும் துறைகளும் முனிவர்கள் உறைகின்ற ஆசிரமங்கள் உள்ளன. மேகங்கள் அம்மலையை தொடும் வண்ணம் சூழ்ந்துள்ளன. தேவ மாதர்கள் தங்கள் இசைப்பாட்டுக்கு ஒத்துவருமாறு கின்னரங்களின் நரம்புகளை வருடுந்தோறும் உண்டாகும் ஓசையினால் யானைகளின் இளங்கன்றுகளும் புலியின் குட்டிகளும் தம்முள் பகையின்றி உறங்கும் இடங்கள் அம்மலையில் உள்ளதை கவிச்சக்கரவர்த்தி கம்பர் விளக்கியுள்ளார்.

வில்லிபாரதம்

வில்லிபாரதத்திலும் திருவேங்கடத்தைப்பற்றி ஒரு குறிப்பு வருகின்றது. பாண்டவர்கள் விசுவகர்மனால் புதிதாக உருவாக்கப்பட்ட அழகிய நகரிலிருந்து கொண்டு ஆட்சி புரிந்த நாளில் வேடவர்களால் கவரப்பெற்ற ஓர் அந்தணனின் ஆநிரைகளை மீட்கும் பொருட்டு வில்லெடுக்க ஆயுத சாலையை நோக்கிச் செல்லுங்கால் தருமனுடன் திரௌபதியிருப்பதைப் பார்த்துவிட்டான் அருச்சுனன். அந்தப்பாவம் தீரும் பொருட்டு நாரத முனிவரின் யோசனைப்படி அவன் தீர்த்த யாத்திரையை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கங்கையில் பாதாளலோகம் சென்று, அவளை மணந்து, நாகலோகத்தில் சின்னாட்கள் தங்கி இராவணனை மகனாகப் பெற்றுப் பூலோகத்திற்கு வருகின்றான். பின்னர் இமயமலையிலுள்ள தீர்த்தங்கள், யமுனை முதலிய தீர்த்தங்களில் நீராடி, தென்றிசை நோக்கி வந்தவன் திருவேங்கடத்தை அடைகின்றான். இதனை வில்லிபுத்தூரார்,

“பத்திக்கு வரம்பாகிய பார்த்தான் பலதீர்த்தம்

அத்தி க்கினும் எத்திக்கினும் ஆம் என்றவை ஆடி

சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை அணுகி

தத்திச்சொரி யருவித்தட அரவக்கிரி சார்ந்தான்”

என்று குறிப்பிடுகிறார். தென்னாடு பல சிவத்தலங்கட்கும் விஷ்டுணுத்தலங்கட்கும் இடமாய் அமைந்து அடியார் கருதிய பயன் கைகூடுவதற்கு உரிய இடமாக இருத்தலால் ‘சித்திக்கொரு விதையாகிய’ என்ற அடை கொடுத்து சிறப்பிக்கப் பெற்றது. திருமலையில் ஆகாய கங்கை, பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, தும்புரு தீர்த்தம், கோனேரி, ஆழ்வார்தீர்த்தம் போன்ற பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளதால், ‘தத்திச் சௌரி அருவி’ எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இங்ஙனம் ‘திருவேங்கடம்’ வில்லிபுத்தூரார் வாக்கிலும் இடம் பெற்று நிலையான புகழுடன் விளங்குகின்றது.

முடிவுரை:

தமிழ் இலக்கியத்தில் திருவேங்கடத்தின் சிறப்பும் திருவேங்கடவனின் பெருமைகளையும், திருவேங்கட மலை குறித்த இயற்கை வருணனைகளையும் தமிழ் கவிகள் பல்வேறு வகையில் போற்றியுள்ளனர். பேராசிரியரும் தமிழ் இலக்கியத்தில் திருவேங்கடம் எங்ஙனம் சிறப்பிக்கபட்டுள்ளது என்பதை உற்று நோக்கி விளக்கியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையும் பேராசிரியர் பார்வையில் திருவேங்கடக் கருத்துகளை விளக்கியுள்ளது.

பார்வை நூல்கள்

1. தமிழ் இலக்கியம்
2. திருக்குறள்
3. ஆழ்வார்கள் மங்களாசாசனம் பாடபெற்ற நூல்கள்
4. நாலாயிர திவ்யப்பிரபந்தம்
5. பேராசிரியரின் திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
6. ஆழ்வார்கள்
7. கம்பராமாயணம்
8. வில்லிபாரதம்

108 DIVYA DESAM PHOTO


Srirangam, Sri RanganAtha PerumAL
© www.trsiyengar.com


Thiru Urayur, Sri Azhagiya MaNavALa Perumal
©www.trsiyengar.com


Thanjai MAmaNi KOil, Sri NeelamEgha Perumal
©www.trsiyengar.com


Thiru Anbil, Sri Vadivazhagiya Nambi
©www.trsiyengar.com


Thiru KarambanUr, Sri Purushoththama PerumAl
©www.trsiyengar.com


Thiru VeLLArai Sri PundareekAksha PerumAL
©www.trsiyengar.com


Thiru PuLLabhoodangudi, Sri Val Vil RAmar
©www.trsiyengar.com


ThiruppEr Nagar, Sri Appa Kudathan
©www.trsiyengar.com


Thiru AadhanUr, Sri Aandu ALakkum Aiyyan
©www.trsiyengar.com


Thiru Azhandhur, Sri Aamaruviyappan
©www.trsiyengar.com


Thiru SirupuliyUr, Sri AruL MAakadal PerumAL
©www.trsiyengar.com


Thiru ChErai, Sri SAranAtha PerumAL
©www.trsiyengar.com


Thiru ThalaichangAdu, Sri NAanmadhiya PerumAL
©www.trsiyengar.com


Thirukkudanthai, Sri AarAvamudha PerumAL
©www.trsiyengar.com


ThirukkandiyUr, Sri Hara-Chaaba VimOchana PerumAL
©www.trsiyengar.com


Thiru viNNagaram, Sri Oppiliyappan PerumAL
©www.trsiyengar.com


ThirukkaNNapuram, Sri SowriRAja PerumAL
©www.trsiyengar.com


ThiruvAzhi Thirunagari, Sri VayalALi MaNALan
©www.trsiyengar.com


Nagapatinam, Sri Saunddarya Raja Perumal - © www.trsiyengar.com


Thiru NAraiyUr, Sri NAraiyUr Nambi
©www.trsiyengar.com


Nandhipura ViNNagaram, Sri JagannAthan
©www.trsiyengar.com


Thiru IndhaLUr, Sri ParimaLa Rangan
©www.trsiyengar.com


Thiru Chithrakoodam, Sri GOvindarAjan
©www.trsiyengar.com


SeergAzhi ThAdalan PerumAl
©www.trsiyengar.com



Thiru KoodalUr, Vayyam KAtha PerumAl
©www.trsiyengar.com



Thiru KaNNangudi, ShyAmaLa MEni PerumAl
©www.trsiyengar.com



ThirukkaNNamangai, Sri Bhakthavatsala Perumal
© www.trsiyengar.com



Kapisthalam, Sri GajEndra Varadhan
© www.trsiyengar.com



ThiruveLLiangudi, Sri Kolavil RAman
© www.trsiyengar.com



ThirunAngUr, Sri Nanda ViLakku Perumal
© www.trsiyengar.com



ThirunAngur Sri VaikunthanAtha Perumal
© www.trsiyengar.com



ArimEya ViNNagaram, Sri KudamAdu Koothan
© www.trsiyengar.com



DevanAr Thogai, Sri DeivanAyaga PerumAL
© www.trsiyengar.com



ThirunAngUr - ThiruvaNpurushOtham, Sri PurushOthaman
© www.trsiyengar.com



Sem Pon Sei Koil, Sri PEraruLaLan
© www.trsiyengar.com



ThiruthEtri Ambalam, Sri SengaNmAl
© www.trsiyengar.com


Thirumanikkoodam, Manikkooda NAyagan
© www.trsiyengar.com


ThirukkAvaLampAdi, Sri GOpAla Krishnan
© www.trsiyengar.com


ANNan KOil (Thiru VeLLakkuLam) Sri Kannan NArayaNan
© www.trsiyengar.com


pArthan paLLi, ThAmaraiyAL KELvan
© www.trsiyengar.com


Thiru mAlirunchOlai, Sri Azhagar
© www.trsiyengar.com


Thirukkottiyur, Sri Sowmya Narayanan
© www.trsiyengar.com


Thiru Meyyam, Sri Sathyagiri NAthan
© www.trsiyengar.com


ThiruppullANi, Sri JagannAtha PerumAL
© www.trsiyengar.com


Thiru ThaNkAl, Sri ThaNkAl Appan
© www.trsiyengar.com


Thiru mOgUr, Sri KALamEgha PerumAL
© www.trsiyengar.com


Thirukkoodal, Sri KUdalazhagar PerumAL
© www.trsiyengar.com


SrivilliputhUr, Sri VadabhadrasAyi PerumAL
© www.trsiyengar.com



Thirukkurugur, Sri AadhinAtha PerumAL
© www.trsiyengar.com



ThoLaivilli Mangalam, Sri DEvapirAn - Sri AravindalOchanar
© www.trsiyengar.com



NAngunEri, Sree Vara Mangai, Deiva nAyagam PerumAL
© www.trsiyengar.com



Thiruppulingudi, Sri KAsini VEndan
© www.trsiyengar.com



ThiruppErai, Makara Nedunguzhi KAthar
© www.trsiyengar.com



Sri Vaikuntham, Sri Kannan Piraan
© www.trsiyengar.com



Naththam, ThiruvaraguNaMangai, Sri VnasAsanar
© www.trsiyengar.com



ThirukkuLandhai, Sri MAyakoothan
© www.trsiyengar.com



Thiru Kurungudi, Sri azhakiya Nambi
© www.trsiyengar.com



Thiru KOLUr, Sri Vaidha MAnidhi
© www.trsiyengar.com



Thiruvananthapuram, Sri Anantha PadmanAbha PerumAL
© www.trsiyengar.com



Thiru vaN ParisAram, ThirukkuraLappan
© www.trsiyengar.com



Thiru KadkArai, Sri KadkAriappan
© www.trsiyengar.com



Thiru MoozhikkaLam, Sri MoozhikalathAn
© www.trsiyengar.com



ThiruppuliyUr, Sri MAyapirAn
© www.trsiyengar.com



ThiruchengaNNUr, Sri Imayavarappan
© www.trsiyengar.com



Thiru Naavi, Sri NARAayaNan
© www.trsiyengar.com



Thiru VallavAzh, Sri KOlapirAn PerumAL
© www.trsiyengar.com



Thiru VaNvaNdUr, Sri PAmbanayappan PerumAL
© www.trsiyengar.com



Thiru VattARu, Sri Aadikesava PerumAL
© www.trsiyengar.com



Thiru VithukOdu, Sri uyyavandha PerumAL
© www.trsiyengar.com



Thiru KadithAnam, Sri Amrutha nARAyaNa PerumAL
© www.trsiyengar.com



Thiru Varan ViLai, Sri ThirukkuRaLappan PerumAL
© www.trsiyengar.com



ThiruvahEEndhipuram, Sri DeivanAyagam PerumAL
© www.trsiyengar.com


ThirukkOvalUr, Thiruvikrama PerumAL
© www.trsiyengar.com


Kancheepuram (Thirukkachi), Sri
Varadaraja PerumAL
© www.trsiyengar.com


Ashtabhujam (Thirukkachi) Sri
Aadhikesava PerumAL
© www.trsiyengar.com


Thooppul (Thiru ThankA) Sri Deepa PrakAsa PerumAL
© www.trsiyengar.com


Thiru VELukkai (Kanchi) Sri Mukunda
Nayaka PerumAL
© www.trsiyengar.com


Thiru PAdakam (Kanchi) Sri PAndava Thoothar
© www.trsiyengar.com


Thiruneeragam (Kanchi) Sri Jagadeesa
PerumAL
© www.trsiyengar.com


NilAthingal Thundam (Kanchi) NilAthingal
Thundan
© www.trsiyengar.com


Thiru Ooragam (Kanchi) Thiru OoragathAn
© www.trsiyengar.com


Thiru Chenkundrur, Sri
Imayavarappan
© www.trsiyengar.com


Thiru KAragam - KAnchi, Sri KaruNAkara PerumAL
© www.trsiyengar.com


Thiru kArvanam (KAnchi) KaLvar PerumAL
© www.trsiyengar.com



Thiru kaLvanUr (KAnchi) Sri Aadhi VarAha PerumAL
© www.trsiyengar.com



PavaLavaNNam (KAnchi) Sri Pavala VaNNan PerumAL
© www.trsiyengar.com



ParamEswara ViNNagaram (KAnchi) Sri Vaikuntha NAtha PerumAL



Thirupputkuzhi, Sri VijyarAghava Perumal
© www.trsiyengar.com



ThirunindravUr, Sri Bhakthavatsala PerumAL
© www.trsiyengar.com



Thir EvvuLLUr, Sri VeerarAghava PerumAL
© www.trsiyengar.com



Thir Neermalai, Sri NeervaNNa PerumAL
© www.trsiyengar.com



Thirvidanthai, Sri Lakshmi VarAha PerumAL
© www.trsiyengar.com



Thirkkadal Mallai (MAmallapuram) Sri Sthalasayana PerumAL . © www.trsiyengar.com



Thiru AllikkENi (Triplicane), Sri PArthasArathy PerumAL
© www.trsiyengar.com



Thirukkadikai (Sholinghur), Sri yOga Narasimha PerumAL
© www.trsiyengar.com



Tiruppathi (ThiruvEngadam) Sri SrinivAsa PerumAL
© www.trsiyengar.com



Ahobilam (SingavEzh Kundram) Sri Narasimha Moorthy
© www.trsiyengar.com



AyOdhya (Thiru AyOdhi) Sri Rama
© www.trsiyengar.com



NaimisAraNyan, Sri DEvarAja PerumAL
© www.trsiyengar.com



SALagrAmam, Sri Moorthy
© www.trsiyengar.com



Badri (BadrikAshramam) Sri Badri nArAyaNan
© www.trsiyengar.com



DEva pryAgai (Kadi Nagar) Sri NeelamEgha PerumAL
© www.trsiyengar.com



Joshi Mutt (Thiruppirithi) Sri Parama Purusha PerumAL
© www.trsiyengar.com



DwArakA (DhwArakai) Sri KalyANa NArAyaNan
© www.trsiyengar.com



MathurA (Vadamadurai) Sri GOvardhana PerumAL
© www.trsiyengar.com




Gokulam (ApAdi), Sri Nava MOhana Krishna
© www.trsiyengar.com



ThirupArkadal, Sri Ksheerasabthi Nathan
©www.trsiyengar.com



Paramapadam, Sri Paramapada Nathan
©www.trsiyengar.com









ISBN 978-81-687842-8-4
9 788168 784284 >





